


உயிரே
உயிரே
பிரியாதே!
ஆர்.மகேஸ்வரி


உயிரே
உயிரே
பிரியாதே!
ஆர்.மகேஸ்வரி

# உயிரே

# உயிரே

# பிரியாதே!

---



## 1

நீண்ட நாட்களாய் பிரிந்து... தூர தேசத்தில் வேலைப் பார்க்கும் தலைவனைக் காணாதத் தலைவி... மீண்டும் அவனைக் கண்டவுடன்... துள்ளி... சந்தோசித்து... உயிர் உருக... உயிர் குலுங்க... காதலில் கசிந்துருகி... கண்களால் அவனைச் சிறைச் செய்து... நெஞ்சிலே அன்பைத் தேக்கி... கண்களில் ஆசையைக் காட்டி... நேசமுடன் எவ்வாறு வரவேற்பாளோ.... அதைப் போல... நிலமகள் இளங்கதிரவனை ஆரவாரத்துடன்... ஆனந்தத்துடன்..., அழகாய் வரவேற்ற... காலைப் பொழுது!

மரங்கள்... தென்றலைக் கொண்டு தாலாட்டுப் பாடியும்...

செடிகள்... பூக்களைக் கொண்டு அர்ச்சனைச் செய்தும்...

புல்லின் மீதிருந்தப் பனித்துளிகள்... மந்தகாசமாய் புன்னகைத்தும்... காலைப் பொழுதை ஆர்ப்பாட்டத் துடன் வரவேற்றன!

குளு... குளு... கொடைக்கானல்!

பசுமையான பழநி மலையின் ஊடே அமைந்துள்ள பாறைகள், நீர்வீழ்ச்சிகள், மரங்கள் அடர்ந்த சரிவுகள், அழகிய ஏரிகள் என கொடைக்கானலில் சுற்றுலாப் பயணி களைக் கவரும் இடங்கள் அதிகம்!

கடல் மட்டத்தில் இருந்து 2 ஆயிரத்து 133 மீட்டர் உயரத்தில் கொடைக்கானல் உள்ளது. இதன் பரப்பளவு ஏறத்தாழ 21 கி.மீ.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் குறிஞ்சி மலர் கொடைக்கானலின் தனித்தன்மையை... பெருமையை பறைசாற்றுகிறது.

இங்கு உள்ள தாவரவியல் பூங்காவை பள்ளி, கல்லூரி மாணவர்கள் சுற்றுலாச் சென்று கட்டாயமாய் பார்க்க வேண்டும்.

காபித் தோட்டம், தேயிலைத் தோட்டம் என்று எங்கும் பசுமை!

இங்கு கிடைக்கும் ஆப்பிள், ஆரஞ்சு போன்ற பழங்கள் சுவை மிகுந்தன.

இப்படிப்பட்ட அருமையான கொடைக்கானல் தான் நான்கு நாட்களாய் பெய்த மழையால்... தத்தளித்துக் கொண்டிருந்தது.



ஓடைகளிலும்... ஆறுகளிலும்... நீர் விழ்ச்சிகளிலும்... நொப்பும் நுரையுமாய்.. துள்ளலோடும்... துடிப்போடும்... பள்ளத்தை நோக்கி... நீர் பாய்ச்சலோடு... பாய்ந்து ஓடிக் கொண்டிருந்தது.

மழை நின்று... மெல்ல சூரியன் எட்டிப் பார்க்கவும்... மழைக்கும் குளிருக்கும் பயந்து... தங்கள் இருப்பிடத்தில் அடைந்துக் கிடந்த தோட்டத் தொழிலாளர்கள் நிம்மதி யாய் புறப்பட்டனர், புற்றீசலாய்!

'மழை இன்று வராமல் இருக்க அருள் செய் கடவுளே!' என்று வேண்டிக்கொண்டு... ஆங்காங்கே... தெருவோரத் தில் முளைத்த சிறுகடைகளும்...

இன்று நல்ல வியாபாரம் இருக்கும் என்ற நம்பிக்கை யில் திறந்த பெரிய கடைகளும்...

பச்சரிசி பல் தெரிய... சிரித்து... டாட்டா காட்டி பள்ளிக்கு கிளம்பிய மழலைப் பட்டாளங்களும்...

ஸ்வெட்டரும்... கொடையும்... குல்லாவுமாய் ஆபீஸ் கிளம்பிய மனிதர்களும்...

அப்போதுதான் நீராடிய மணப்பெண்ணாய்... மங் களகரமாய்... பளிங்காய் காட்சியளித்த பங்களாக்களும்...

கல்லூரிக்கு கிளம்பிய கட்டிளம் காளைகளும்...

பூவாய் மலர்ந்து மணம் பரப்பும் நவநாகரீக பூவையர் களும்...

கொடைக்கானலுக்கு இன்னும் அழகுக்கு அழகு சேர்த்தன!

சுற்று மதில்சுவர்களுக்குள்... பெரிய பரந்த தோட்டத் தில்... விதவிதமான அபூர்வ மலர்களும்... செடிகளும்... கொடிகளுக்கும் இடையே... ஓங்கி... உயர்ந்து... தனது

பிரம்மாண்டத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது. அந்த பங்களா!

அதனுள்ளே, நரேந்திரன் ஆபீஸிற்கு கிளம்பி படியிறங்கி வந்த தோரணை... அந்த கால மன்னர்கள் போரிற்கு புறப்பட்டு... எத்தனை களையாய்... எத்தனை கம்பீரமாய்... எத்தனை அழகாய்... வீரத்தின் மறுஉருவாய் புறப்படுவார்களோ...அது போல இருந்தது. அவன் ஆபீஸ் புறப்படுவதைப் பார்க்க!

என்ன வித்தியாசம்?

மன்னர்கள் கையில் வாள் இருக்கும்! இவன் கையிலோ சிறிய பெட்டி இருக்கும்!

அழகன்!

ஆறடி உயரத்திற்கு மேல்... பரந்து விரிந்த தோளும்... கட்டுமஸ்தான உடற்கட்டும்... நிமிர்ந்த நடையும்... நேர் கொண்ட பார்வையுமாய்... அழகே உருவாய்... அம்சமாய்... கம்பீரமே கால் முளைத்து வருவது போல இருந்தது! பெண்களோடு சேர்ந்து ஆண்களையுமே திரும்பிப் பார்க்க வைக்கும் அழகன்! அடர்ந்த மீசையும்.... தலை கொள்ளாத அடர்ந்த கேசமும்... சிரிக்காமலேயே... லேசாய் உதடு சுழித்தாலே... புன்னகையைக் கொட்டும் உதடுகளும், கண்களும் அம்சம்! அதில் அவன் அழகு கொள்ளைப் போகும்!

ஆனால், நரேந்திரன் சிரிக்க மாட்டான்!

சிரிக்கவே மறந்துவிட்டவன்! சிரிப்பு என்றால் என்ன? என்று கேட்கும் ரகமாய் மாறிவிட்டவன்!

டைனிங் ஹால் முன்பு அமர... அம்மா இட்லி வைத்து சட்னி, சாம்பார் ஊற்றினாள்.



அவன் இட்லியை விண்டு வாயில் வைத்த போது அம்மா கேட்டாள்.

''எப்பா நரேந்திரா... நேற்று நைட் சொன்ன விசயத்தை... யோசித்து... அசை போட்டுப் பார்த்தாயா?'' என்று அம்மா அமிர்தம் கேட்டாள்.

''நான் யோசிக்கலம்மா!'' பட்டென்று நரேந்திரனிடமிருந்து பதில் வந்தது.

''ஏன், நரேந்திரா...?''

''அந்த ஒரு விஷயத்தைப் பற்றி யோசிக்கவே பிடிக்கலேம்மா! என்னைக் கட்டாயப்படுத்தாதீர்கள்?''

''உனக்கு வயசாகிகிட்டே போகுதுப்பா!''

''அதுக்கு என்ன செய்ய முடியும்? மனிதர்களுக்கு வயசாகுவது இயற்கை! அதை என்ன செய்து கட்டுப்படுத்துவது?''

''அது இயற்கைன்னு எங்களுக்கும் தெரியும்! நரேந்திரா... எங்களுக்கும் வயசாகிட்டே போகுது! ப்ரியாவின் படிப்பு முடிந்தால்... ஒரு இடத்தில் திருமணம் முடிந்து... நம்மை விட்டு போய்விடுவாள்! நாங்க வயசான கட்டைங்க! இந்த உடலில் இன்னும் எத்தனை நாளுக்கு உயிர் தங்கும்? ம்?''

''என்னம்மா பேசறீங்க? ஏன் இப்படியெல்லாம் பேசறீங்க? நான் ஆபீஸ் போறேம்மா! போய் நிம்மதியா வேலைப் பார்க்க வேண்டாமா? ஏன் காலையிலே என் 'மூட்'டை அவுட் பண்றீங்க?''

நரேந்திரன் கோபம் தாங்காமல் வேகமாய் கேட்க...

''அப்பாவுக்கு ஹார்ட் ப்ராபளம்! எனக்கோ பீபி... ஷுகர்ன்னு எக்கச்சக்க நோய்! நாங்களெல்லாம் எத்தனை

நாட்களுக்கு துணையிருப்போம்? எத்தனை காலத்திற்கு துணை வருவோம்? ரொம்ப நாளைக்கு... உன் கடைசி காலம் வரை... எங்களால் உனக்கு உதவ முடியுமா?...

"உனக்கு என்று ஒருத்தி வரவேண்டும், நரேந்திரா! உன்னைக் கவனித்துக் கொள்ள... கண்களில் வைத்து தாங்க... காலாகாலத்தில் ஒரு பெண் இங்கே வரவேண் டும், நரேந்திரா! நீ அவளை மணந்து... அவளோடு சந்தோசமாய் இருப்பதைப் பார்த்துட்டுத்தான் நான் சாகணும்!" என்று அமிர்தம் கண்ணீர் விட...

அதைக் காணச் சகிக்காமல்... சட்டென்று கோபமுற்று.... சாப்பிட்டுக் கொண்டிருந்த தட்டைத் தூரேத் தள்ளினான்.

"எனக்கு பேரப்பிள்ளையை தூக்கி... இந்த மடியிலப் போட்டு கொஞ்சிட்டு... அப்புறமா செத்துப் போக ணும்ன்னு ஆசையா இருக்குப்பா...!"

அமிர்தம் கண்களில் கண்ணீர் பளபளக்க கூற....

"அம்மா... உங்க உளறலை நிறுத்துங்கள்! எனக்கு ஏற்கனவே கல்யாணமாயிடிச்சி!"

"கல்யாணமான மூன்றே மாதத்தில் உன்னைத் தனி யாளாய்... தவிக்க விட்டுட்டுப் போயிட்டாளேப்பா!" அமிர்தம் அழ...

"அவளோடு நான் வாழ்ந்துட்டேம்மா!"

"என்னடா வாழ்ந்தாய்?"

"அம்மா... என்னிடம் மீண்டும் மீண்டும் கல்யாண விஷயம் பற்றிக் கேட்டால் 'முடியாது' என்பதுதான் என் பதில்! படிக்கற காலத்தில் என்னைச் சுற்றிச் சுற்றி வந்து... என்னைத் தன் உயிராய் எண்ணி சுவாசித்தாள், என் கிருத்திகா! கண்ணியம் தவறாத காதலர்களாய் இருந்து...



உங்களின் அனுமதியோடு திருமணமும் நடந்தது. பின் மூன்றே மாதம் என்றாலும்... அவளோடு இணக்கமான... இதயம் கனிந்த... நல்லதொரு வாழ்க்கையை வாழ்ந்து விட்டேன்! நிச்சயமாய், அம்மா!"

நரேந்திரன் சோகம் கலந்த குரலில் கூற... அமிர்தம் கண்களைத் துடைத்துக் கொண்டு சீறினாள்.

"என்ன வாழ்க்கை வாழ்ந்தாய், நரேந்திரா? இனிக்க இனிக்க... தித்திக்க தித்திக்க.... அனுபவிக்க வேண்டிய வயதில் உன்னை அம்போவென்று விட்டுவிட்டுப் போய் விட்டாள்! அரையும் குறையுமா அனுபவப்படு முன்னே உன்னை தவிக்க விட்டுட்டுப் போயிட்டாள்! நீ அவளிடம் என்ன சுகத்தைக் கண்டாய்?"

"அனுபவிச்சிட்டேம்மா! குறைந்த நாளானாலும்... என் நெஞ்சில் நிறைந்து நிற்குது!"

"நரேந்திரா..."

"நிஜம், அம்மா! என் காதலையும், காமத்தையும் அந்த புண்ணியவதி கரைத்து... கையோடு எடுத்துப் போயிட் டாள்! என்னால் மீண்டும் ஒரு பெண்ணை மணந்து வாழமுடியாதும்மா! என் மனமுழுக்க கிருத்திகா இருக்க... வேறொரு பெண்ணோடு எப்படி வாழ்வேன்? அநியா யமா... ஒரு பெண்ணின் வாழ்க்கையை சீரழிக்கச் சொல்லா தீங்க பாவம்! எந்தப் பிறவியில் பாவம் செய்தேனோ... அது இந்த பிறவியில் விஸ்வரூபம் எடுத்து வந்து... என் மனைவியைக் கொண்டுட்டு போய்விட்டது. இனியும் பாவம் செய்ய வேண்டுமா? பெண் பாவம் பொல்லாத தும்மா! மறுமணம் செய்துக் கொள்ளச் சொல்லி வற்புறுத் தாதீங்க!"

''உன் மாமா பெண் ஏங்கி கிடக்கறாளே, நரேந்திரா!''

''என்னம்மா...? என்ன விளையாடறீங்களா? என்னை விட பதினைந்து வயது... குறைந்த குழந்தை! அவளுக்கு இருபது! எனக்கு முப்பத்தைந்து வயது! என் மகள் போலம்மா, அவள்! அவளைப் போய்..... ச்சே...! உங்களுக்கு இப்படியொரு நினைப்பு வரலாமா?''

நரேந்திரன் கோபமாய் கடிந்துக் கொண்டான்.

''அவள் வேண்டாம்ன்னால் விட்டுடு! வேற எந்த பெண்ணையாவது உனக்குப் பிடித்திருந்தால் கட்டிக் கொள்ளக் கூடாதா?''

அமிர்தம் கொள்ளை ஆசையோடு கேட்க... அவன் மறுப்பாய் தலையாட்டினான்.

''என்னை இதுவரை எவளுமே சலனப்படுத்திய தில்லை! சஞ்சலப்படுத்தியதில்லை!''

''நரேந்திரா... கண்ணா...''

''அம்மா என்னுள் காமம் செத்து... காதல் மட்டுமே வாழ்கிறது! அதுவும் என் கிருத்திகாவின் மேல்! என்னால் எந்த ஒரு பெண்ணையும் மணக்க முடியாது! அப்படியே உங்க வற்புறுத்தலுக்கு மணந்தாலும்... அவளோடு முழுமையாக... நல்ல கணவனாக... ஈடுபாட்டுடன் வாழ முடியாது! என்னைப் புரிஞ்சிக்கோம்மா!'' நரேந்திரன் கெஞ்ச...

''எனக்கு மருமகள் வேண்டும்!'' அமிர்தமோ சிறு பிள்ளையாய் அடம் பிடிக்க...

''உங்க வற்புறுத்தலுக்கு எவள் கழுத்திலாவது.... ஒரு பேச்சுக்கு தாலியே கட்டினாலும்... அவளோடு என்னால் குடும்பம் நடத்த முடியாதும்மா! அவள் ஆயுள் முழுக்க



உங்களுடைய மருமகளாய் மட்டுமே இருப்பாள்! ஒரு நாளும் என் மனைவியாய்... மனம் நிறைந்த வாழ்க்கையை வாழமாட்டாள்! தெரியுமா?''

''உனக்கு பொண்டாட்டி ஆசையில்லாமல் இருக்கலாம்! ஆனால், எனக்கு மருமகள் வேண்டும்!''

அமிர்தம் முதல் குண்டைத் தூக்கி அவன் தலையில் போட்டாள்.

''தெரிந்தே ஒரு பெண்ணுக்குத் துரோகம் செய்யத் துணியறீங்களே... என்ன புத்திம்மா, உங்களுக்கு?''

''உனக்கு பொண்டாட்டி தேவையில்லை! ஆனால், எனக்கு பேரப்பிள்ளைகள் மேல ஆசையா இருக்கு!''

அமிர்தம் இரண்டாவது குண்டைத் தூக்கி... அவன் மேல் வீசினாள்.

இதுபோலெல்லாம் அமிர்தம் பேசியதில்லை!

அவன் அரண்டு விட்டான்!

''பேரப்பிள்ளைங்க தானே? ப்ரியாவிற்கு மணமுடித்த மறுவருடமே.... வரிசையாய் பேரப்பிள்ளைகள் பிறக்கும்! இந்த லூசு... படிச்சி என்னத்த சாதிக்கப் போகுது? இவளுக்கு முதல்ல கல்யாணம் பண்ணி... விரட்டி விடற வேலையைப் பாருங்க!''

''நீங்க ஏன் என் மண்டையை உருட்டறீங்கண்ணே?''

புத்தகத்தை சுமந்தவாறு... கல்லூரிக்கு கிளம்பி வந்த ப்ரியா இடைப் புகுந்தாள்.

''அப்பாம்மா ஆசையை நிறைவேற்றுடி! படிச்சது போதும்! கல்யாணம் பண்ணிக்கோ!''

நரேந்திரன் பேச்சை திசை திருப்ப பார்க்க... அமிர்தம் சூடானாள்.

''ஏய் நரேந்திரா... அவளுக்கு பிறக்கும் பிள்ளையும்... எங்க பேரப்பிள்ளைதான்! ஆனால், அது உங்க அப்பா பேரையோ... உன் பேரையோ சொல்லாது! அது அவளுடைய மாமனார்... வீட்டுக்காரர்கள் பெயரைத்தான் சொல்லும்! புரிஞ்சிக்கோ! ப்ரியாவிற்கு பிறக்கும் பிள்ளைகள் மூலமா... அவள் கணவன் குடும்பம்தான் தழைக்கும்! நம்ம வம்சம் தழைக்காது! உன்னோடு நம்ம தலைமுறை முடிஞ்சிடக்கூடாதுப்பா!''

''வாயை மூடும்மா!'' என்று நரேந்திரன் அடக்கியும் தொடர்ந்தாள்.

''உன் அப்பா பேர் சொல்லவும்... உன் பேர் சொல்லவும்... ஒரு குழந்தை வேண்டும், நரேந்திரா! எங்களுடைய நியாயமான ஆசையைக் கூட நிறைவேற்றாமல்... உயிரோடு இருக்கும் எங்கள் ஆசையை மதிக்காமல்... மூன்றே மாதம் உன்னோடு வாழ்ந்தவளுக்காய்... எங்கள் ஆசையையும் நிராகரிச்சி... வாழ வேண்டிய வயதில் சன்னியாசியாய்... ஆசையைத் துறந்து... காய்ந்த மரமாய் நிற்கிறாயே, நரேந்திரா! உயிரோடு இருப்பவர்களைவிட..... உயிரோடு இல்லாதவள்தான்... உனக்கு உசத்தியா...? உயர்வா...?''

''என்னம்மா? யார் உசத்தின்னு பட்டிமன்றம் வைக்கறீங்களா? ச்சே! தினம் தினம் மனுசன் வாழ்க்கையை.. ஏன் நரகமாக்கிட்டு இருக்கீங்க? நானே அவளை மறந்தாலும்... என்னை மறக்க விடாமல்... தினம் தினம் ஞாபகமூட்டி.... என்னை வதைக்கறீங்களே! இது உங்களுக்கே பிடிக்குதா? ஏம்மா... ஏம்மா... இப்படி படுத்தறீங்க? எல்லாத்தையும் மறந்து... தொழிலில் என்னையும் முழுமையாய் ஈடுபடுத்தி... தொழில் ஒன்றே குறிக்கோளாய் உள்ள என்னை ஏன் கெடுக்கிறீர்கள்?'' என்று முகத்தைக் கடுப்பாக்கி கேட்க...



''நீ யாருக்காக சம்பாதிக்கிறாய், இவ்வளவு கஷ்டப்பட்டு? ம்? பொண்டாட்டிக்கா? இல்லை உன் பிள்ளைக்கா?'' என்று அம்மா கேட்க... சளைக்காமல் சொன்னான்.

''ப்ரியா இருக்காளே! அவளும் என் பிள்ளையைப் போலத்தான்!'' என்று நரேந்திரன் ப்ரியாவைப் பார்த்து கூற...

''அண்ணா...'' என்று கண்கலங்கினாள், ப்ரியா.

''ஏய் ப்ரியா... காலேஜ் கிளம்பறப்ப... இது என்ன மடச்சி மாதிரி அழுதுட்டு? கண்ணைத் துடை!'' என்று நரேந்திரன் அதட்ட.... ப்ரியாச் சொன்னாள்.

''அண்ணா.... இந்த பத்து வருடத்தில்... வெறியோடு உழைத்து... தொழிலில் சிகரம் தொட்டிருக்கிறாய்! சம்பாதித்தது போதும், அண்ணா! அம்மா சொல்வது போல... நீ சந்தோசமாய் இருக்கணும்! உனக்கு பிறக்கும் பிள்ளையைத் தூக்கி கொஞ்சணும்ன்னு எனக்குமே பேராசையா இருக்கு! ப்ளீஸ்ண்ணா...''

''நீ சின்னப் பெண்! படிப்பில் மட்டும் உன் கவனம் இருக்கட்டும்! நான் சந்தோசமா இல்லேன்னு உன்கிட்ட சொன்னேனா? நான் ரொம்பவே சந்தோசமா இருக்கேன், ப்ரியாக்குட்டி!'' என்று கூறி புன்னகைக்க கஷ்டப்பட்டான்.

''காலையிலே ஏன் புலம்பறே? நான்கு நாட்களா பெய்த மழையால்... ஆபீஸ் பக்கமே எட்டிப் பார்க்காதவன்... இன்று கிளம்பும்போது இப்படி புலம்பலாமா, அமிர்தா?''

அங்கு வந்த நரேந்திரனின் தந்தை கிருபாகரன் மனைவியை அதட்ட....

''நீங்க கொஞ்சம் சும்மா இருங்க! இது எனக்கும்... என் மகனுக்கும் நடக்கும் வாக்குவாதம்! இதில் நீங்க தலையிட வேண்டாம்!''

அமிர்தம் கணவரைப் பார்த்து வேகமாய் சொல்ல... அவர் வாயை மூடிக் கொண்டார்.

''நரேந்திரா... உன் பிள்ளை... என் பேரப்பிள்ளை வேண்டும்!''

''இதுயென்ன பைத்தியக்காரத்தனம்? உங்கள் ஆசை பலிக்காது! உங்கள் கனவு ஒருநாளும் நிறைவேறாது! ஊமைக் கண்ட கனவா உடைஞ்சி சிதறிடும்!'' என்று கோபமாய் கத்தினான்.

''எனக்கு உன் குழந்தை வேண்டும், நரேந்திரா!'' அமிர்தம் கோபமாய் கத்தினாள்.

''என்னைக் காலையிலே வெறுப்பேத்தாதேம்மா! இது என்ன அடம்? ம்? வேண்டுமானால் ஒன்று செய்கிறேன்! எத்தனை அநாதைப் பிள்ளைகள் ஆசிரமத்தில் வளருதுங்க! அதில் இரண்டை தத்தெடுத்துட்டு வரேன்! அந்த வளர்த்து நல்ல நிலைமைக்கு கொண்டு வாங்க! அப்படியே... அந்த செயலால் நமக்கு புண்ணியம் கிடைக்கும்!''

''ரெண்டு என்ன நூறே கூட கொண்டு வா! மகிழ்ச்சியா வளர்க்கலாம்! ஆனால், உனக்கே உனக்குன்னு பிறந்த... உன் உயிரிலே கலந்து உருவான ஜீவன்... எனக்கு வேணும், நரேந்திரா!''

''உங்க புலம்பலை நிறுத்துங்கள்!''

''ஒரு தாயின் ஆசையும், அன்பும்... உனக்கு புலம்பலா தெரியுதா?''

''எனக்கு டைமாகுது. நான் வரேன்! மனுசனை சாப்பிடக் கூட விடுவதில்லை! ச்சே! எல்லா ஆசையையும் மூட்டைக் கட்டி வச்சிட்டு... சந்தோசமா இருக்கும் வழியை பாருங்கள்!'' என்று அலட்சியமாய் கூற...



''நீ இப்படி பேசியதற்கெல்லாம் வருத்தப்படப் போறே நரேந்திரா!''

''என்னம்மா... என்ன செய்து விடுவீர்கள்? இதுவரை கெஞ்சியும்...'கொஞ்சியும் கேட்டவள், மிரட்டிப் பார்க்கிறாயா? உங்கள் மிரட்டலுக்கெல்லாம் அடிபணிய மாட்டேன்! பயங்கொள்ள மாட்டேன்! உங்களால் முடிந்ததைப் பாருங்கள்!''

''தோற்கப் போறே, நரேந்திரா!''

''அப்படியா? அதையும் பார்க்கலாம்! பார்த்து விடுவோம்!''

''அப்புறமாய் கஷ்டப்படுவாய்!''

''ஓ.கே.!''

''அப்புறமாய் துக்கப்படுவாய்!''

அவன் ஏளனமாய் சிரித்தான்.

''தூணில் முட்டிக் கொள்வாய்!'' அம்மா சொல்லி விட்டு அழுதாள்.

''அப்படியெல்லாம் ஒருநாளும் செய்ய மாட்டேன்!'' நான் வருகிறேன்!''

அடுத்ததாக அம்மா கூறியதைக் காதில் வாங்காமல் வெளியேறினான், நரேந்திரன்.

வாழ்க்கையை புரிந்து கொள்ளல் அவ்வளவு எளிதல்ல! அதுவே புரிந்து கொண்டால் அந்த வாழ்க்கையை வாழ்வது எளிது!

அந்த அழகான வாழ்க்கை... நம் கைவசப்படும்! நமக்கு கட்டுப்படும்! நம் வெற்றிக்கு வித்திடும்! விருட்சமாய் வளர்ந்திடும்!

நரேந்திரன் தன்னுடைய வாழ்க்கையைப் புரிந்து கொண்டு.... தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டான்

தன் வாழ்க்கையை வரையறுத்து... திட்டமிட்டு வாழ் தான்!

கிருத்திகாவின் மரணத்திற்கு பின்னர் எந்தப் பெண் ணும் அவனை அசைத்துப் பார்த்ததில்லை!

எந்த பெண்ணிடமும் சலனப்பட்டதில்லை!

எந்த பெண்ணிடமும் சரிந்ததில்லை!

எந்த பெண்ணிடமும் சாய்ந்ததில்லை!

ஒருத்தியும் அவனை வீழ்த்தி... வீழ்ச்சியுறச் செய்ய வில்லை!

வாழ்க்கையில் காமம் என்பது கடுகளவுதான்! காதல் என்பது மலையளவு! என்று நினைத்தான். அந்த காமத்தைக் கிருத்திகா கையிலெடுத்துக் கொண்டு... காதலை மட் டுமே அவனிடம் விட்டுவிட்டு போய்விட்டதாய் எண்ணி னான்.

இதுவரை வாழ்க்கையில் சறுக்கியதில்லை!

எத்தனையோ அழகு குட்டிகள்... அவனை அடைய... போட்டி போட்டு... கவர்ச்சியை கண்களில் தேக்கி.... காமத்தை தேகத்தில் தேக்கி... சின்ன வட்டுத் துணியை ஆடையென்று அணிந்து... மயக்கப் பார்த்தார்கள், நரேந் திரன் மயங்கவில்லை என்றதும்...

'சுத்த போர்டி! சரியான சாமியார்!'

'மரக்கட்டை ஜென்மம் போல!'

'எத்தனை மயக்கினாலும் மயங்கவில்லை!'

'எத்தனை அவிழ்த்துப் போட்டு... பின்னாடியே அலைந்தாலும்... திரும்பிக்கூட பார்க்கமாட்டேங்கிறார்!'



என்று சலித்துக் கொண்டவர்கள் 'ச்சீ... ச்சீ... இந்த பழம் புளிக்கும்!' என்ற நரிக்கணக்காய் நழுவினார்கள்.

சில பைத்தியங்கள்... அவனுக்கு தொடர்ந்து... இன்னமும் தொல்லை கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள்!

அவர்களில் ஒருத்தி... அவனுடைய மாமனின் மகள்!

இருவது வயதுகூட நிரம்பாத... கல்லூரி படிப்பை மூன்றாம் வருடம் தொடரும் இளம் சூறாவளி, மதுமதி!

பதினைந்து வருட இளையவளாய்... தன்னைக் கட்டிக் கொள்ள முறைக்காரியாக இருந்தாலும்... தன் மாமன் மகளானாலும்... அவளைக் காணும் போதெல்லாம் மகளாய்தான் நினைக்கத் தோன்றும்!

அவளுக்கு விபரம் தெரியாத வயதில் மடியில் போட்டு கொஞ்சியிருக்கிறான்.

பின்னர், அவளுடைய பேச்சிலும், நடத்தையிலும், சிரிப்பிலும் மாற்றத்தைக் காண... அன்றிலிருந்து தள் ளியே பழகினான். ஆனால் அவளோ... என்ன தடுத்தாலும் கழுத்தில் மாலையாய் தொங்குவாள்.... ஒட்டுவாள்... உரசுவாள்... கட்டி முத்தமிடுவதாய் இருப்பாள்.

கடுமையாக முகத்தைக் காட்டினாலும் 'அத்தான்... அத்தான்...' என்று அவனையே வட்டமிடுவாள்.

இத்தனை இளமையோடு... அழகோடு... அவனிடம் கட்டிக் கொள்ளச் சொல்லும்... மதுமதியிடம், ஒரு நாளும் ஆசை வந்ததில்லை!

இதுவே வேறு ஒருவனாய் இருந்தால் வயதாவது... மண்ணாவது என்று கட்டி அனுபவித்து இருப்பான்.

நரேந்திரனுக்கு அப்படி ஒரு கீழ்த்தரமான எண்ணமோ, ஆசையோ வந்ததில்லை!

ஆசை, அன்பு, காதல், காமம் அத்தனையும் கிருத்திகாவே எடுத்து போய்விட்டதாய் எண்ணி பத்தாண்டுகளாய்... தனியாளாகவே வாழ்ந்து விட்டான்.

'இனிமேலா ஒருத்தி வந்து என்னைச் சலனப்படுத்தப் போகிறாள்?' என்று இறுமாப்புடன் இருந்தான், நரேந்திரன்!

அவனை தன் காலடியில் விழ வைக்க ஒருத்தி வரப் போகிறாள் என அறியாமல்!



## 2

நரேந்திரன் ஆபீஸிற்கும்...

ப்ரியா கல்லூரிக்கும்...

கிருபாகரன் டீ எஸ்டேட்டுக்கும் சென்று விட....

அமிர்தம் அழுது அழுது முகம் வீங்கி... கண்கள் சிவந்து... கட்டிலிலேயே படுத்துக் கிடந்தாள்.

எவ்வளவு கெஞ்சியும் தனது ஆசைமகன்... தன் விருப்பத்துக்கு தலைசாய்க்க வில்லையே என்ற ஆதங்கம்.... அவளைப் புரட்டிப் போட... சட்டென்று எழுந்த சினத்தால்... அறைக்கதவை உட்புறமாய் தாளிட்டுவிட்டு... பீரோவைத் திறந்தாள்.

தூக்க மாத்திரைகள் அடங்கிய பாட்டில் கண்களில் தட்டுப்பட... அதை எடுத்து... மூடியைத் திறந்து... அத்தனை மாத்திரைகளையும் உள்ளங்கையில் கொட்டி...



அருகில் இருந்த நீரை எடுத்து கொண்டு ... பின்னர் அத்தனை மாத்திரைகளையும் வாயில் கொட்டி... நீர் ஊற்றி விழுங்கினாள்.

அமிர்தத்தை அழைக்க வந்த வேலைக்காரி... சன்னல் வழியே... இதையெல்லாம் கண்டவள்... பதறி கதவு தட்டினாள்.

அமிர்தம் திறக்கவில்லை!

கிருபாகரனுக்கும், நரேந்திரனுக்கும் போனில் செய்தியைச் சொல்லிவிட்டு... வீட்டில் இருந்த அத்தனை வேலைக்காரர்களும்... பலமான இரும்புக் கம்பியைக் கொண்டு கதவை உடைத்து... அமிர்தத்தை வெளியில் கொண்டு வந்தார்கள்.

''ஐய்யோ... அம்மா...'' என்று அலறிக் கொண்டு நரேந்திரன் வந்து விட்டான்.

உடனே, காரில் ஏற்றி கிளம்பும் சமயம்... கிருபாகரனும் ''அமிர்தா...'' என்று அலறிக் கொண்டு வந்து சேர்ந்தார்.

கொடைக்கானலில் சிறந்த ஹாஸ்பிட்டலான 'கௌதம் ஹாஸ்பிட்டலில்' சேர்க்கப்பட்டாள்.

உடனடியாய் அவளை அவசர பிரிவில் அட்மிட் செய்து... சிகிச்சையளித்தனர், டாக்டர் கௌதமும் அவன் மனைவி தீபிகாவும்!

டாக்டர் கௌதம் வேறு யாருமல்ல! நரேந்திரனின் உயிர்த்தோழன்! இருவரும் பள்ளி படிப்பு வரை ஒன்றாய் படித்தவர்கள். அதன் பிறகு கௌதம் மருத்துவம் படிக்க சென்றுவிட... இவன் வர்த்தகம் சம்பந்தப்பட்ட படிப்பு படிக்க... சென்னைச் சென்று விட்டான்.

அவர்களின் நட்பு இன்னமும் தொடர்கிறது.

நரேந்திரன் நேரம் கிடைக்கும் போது இங்கே வருவான். கௌதமும் நேரம் கிடைக்கும் போது அங்கே செல்வான். தொழிலில் மும்முரமாய் ஈடுபட்டுவிட்டதால்... அந்த சந்திப்பு எப்பொழுதாவது நிகழும்.

சிகிச்சை முடிந்து கௌதம் வெளியே வர... நரேந்திரன் ஓடிப் போய்... அவனை கட்டிக் கொண்டு கண்ணீரோடு...

''கௌதம்... அம்மா... அம்மாவுக்கு எப்படிடா இருக்கு? பிழைச்சிப்பாங்களா?'' பதற்றத்தோடு கேட்டான்.

''ஐம்பது பர்சண்ட்தான் என்னால் கேரண்டி கொடுக்க முடியும்!''

''ஐய்யோ...'' என்று அலறினான்.

''மீதி கடவுள்தான் சொல்லணும்! கொஞ்ச நஞ்ச மாத்திரையல்ல... அவர்கள் விழுங்கியது! எக்கச்சக்கமாய் விழுங்கி இருக்கிறார்கள், நரேந்திரன்!''

''ஐயோ... என் அம்மாவுக்கு நானே எமனா ஆயிட்டேனே...!''

நரேந்திரன் சுவற்றில் முட்டிக் கொண்டான்.

''ஏய் மடையா... என்ன காரியம் செய்கிறாய்? அறிவு கெட்ட தனமா இதெல்லாம் என்னடா?'' என்று டாக்டர் கௌதம் எரிந்து விழ...

''காலையில சொன்னாங்க, கௌதம்! நீ கத்துவே... கதறுவே... சுவத்துல முட்டிக்குவேன்னு சொன்னாங்க! சொன்னபடி அம்மா செய்துட்டாங்கடா!''

''சரி விடுடா!''

''அம்மா... ஏதோ விளையாட்டுக்கு மிரட்டுவதாய் நினைத்து... நானும் திரும்பத் திரும்ப வம்படிச்சிட்டு



போனேனே! அம்மாவை எப்படியாவது காப்பாற்றிவிடுடா! அம்மா இல்லேன்னால் நானும் உயிர் வாழ மாட்டேன்!''

''நரேந்திரா... இங்கே பார்! அழுறதை நிறுத்தப் போறியா? இல்லையா?'' என்று கண்டிப்புடன் கூறினான், கௌதம்.

''அப்பா... அப்பா... அம்மாவை கொல்லப் பார்த்த பாவி நான்தான்... நான்தான்!''

''நரேந்திரா... கட்டுப்படுத்துப்பா! அழாதே!'' அப்பா அணைத்து ஆறுதலாய் சொல்ல...

''ப்ரியாவுக்கு விஷயம் தெரிந்தால் துடிச்சிடுவாளேப்பா! அவளுக்கு எப்படிச் சொல்வது?''

''சொல்லலாம். பக்குவமா சொல்லலாம்! நரேந்திரா... நாம் அடித்து அலைமோதிக் கொள்வதால்... என்ன புண்ணியம்? அம்மா பிழைக்க கடவுளை வேண்டுவதை விட... சிறந்த மருந்தோ... செயலோ இல்லேப்பா! அவள் இப்படியெல்லாம் செய்துக்குவான்னு நீ கண்டாயா? விடு கண்ணா... விடு... அப்பா சொல்றேன்ல்ல... அழாதே!''

''என்னை மன்னிச்சிக்கங்கப்பா... ப்ளீஸ்...'' அவன் கையெடுத்து கும்பிட்டான்.

''என்னடா இது சின்ன பிள்ளையாட்டம்? வளர்ந்து விட்டாய்! வயசாகுது! ஆனால் இன்னும் இப்படி குழந்தையாய் இருக்கியே! என்னைப் பார்! அவள் எனக்கு மனைவிதான்! நான் அழுகையை கட்டுப்படுத்தி... கல்லா இருக்கலையா?...''

''எனக்கு நம்பிக்கையிருக்கு! என் அமிர்தா பிழைத்துக் கொள்வாள்! கடவுள்... நாம் வணங்கும் குறிஞ்சி ஆண்டவர்... நம்மைக் கைவிட மாட்டார்! கலங்காதே! நொறுங்கிப் போகாதே! அம்மா கட்டாயம் பிழைத்துக் கொள்வாள்!''

கிருபாகரன் சொல்லி முடிக்க... கௌதமின் மனைவி தீபிகா உள்ளிருந்து வர...

''தீபிகா... இங்கே முடியலேன்னால்... அம்மாவை மதுரைக்கோ... அல்லது சென்னைக்கோ கொண்டு போகவா?''

''அதெல்லாம் வேண்டாம் நரேந்திரா! உன் அம்மாவுக்கு முறையான சிகிச்சை அளிச்சாச்சி! கண் விழிப்பார், ஆன்ட்டி! பிழைத்துக் கொள்வார்! கவலைக் கொள்ளாதே! கூல் டவுன்யா!''

தீபிகா... நரேந்திரனின் அருகில் வந்து... அவன் முதுகில் தட்டிக் கொடுக்க...

''ப்ரியாவுக்கு நானே போன் செய்வேன்! அவள் என்னவோ... ஏதோன்னு ரொம்ப பயந்துடுவாள்! அம்மா... மாத்திரை சாப்பிட்டு... உயிருக்கு போராடுகிறாள்ன்னு ஏதாவது உளறாமல்... பக்குவமாய் நீயே போன் செய்து... செய்தியை சொல், நரேன்!'' என்று கூறிவிட்டு கௌதம் சென்றுவிட...

''அம்மா... மயக்கத்தில் இருக்கிறாள்! உள்ளே போய் கன்னாபின்னாவென்று கத்தி ஆர்ப்பாட்டம் செய்து விடாதே, நரேன்! உன்னைக் கட்டுப்படுத்திக் கொள்!'' தீபிகா சொல்லிவிட்டு அங்கிருந்து அகல...

இருவரும் உள்ளே சென்றார்கள்.

அம்மா கண்மூடி படுத்திருந்தது... நரேந்திரனின் உள்ளத்தில் பயத்தை உண்டு பண்ணியது.

''அம்மா... அம்மா... எழுந்திரியுங்க, அம்மா! எங்களை அநாதையா தவிக்க விட்டுட்டு போயிடாதீங்கம்மா! நரேந்திரன் வந்திருக்கேம்மா! ப்ளீஸ்ம்மா... கண் விழித்து



என்னைப் பாருங்கம்மா! 'நரேந்திரா' என்று அன்பாய் அழைத்து... பாசத்தோடு புன்னகைப்பாயே... அப்படி செய்யுங்கம்மா!'' என்று நரேந்திரன் புலம்பி... அமிர்தாவின் ஒரு கையைப் பிடித்து ஆட்ட...

''அமிர்தா... அமிர்தா... எழுந்திரி... எழுந்திரிடி!'' இது வரை கட்டுக்குள் வைத்திருந்த துக்கம் வெடித்து சிதற... கிருபாகரன் அழுகையோடு கத்தினார்.

''பேஷண்ட் கிட்ட இப்படியா சத்தம் போடுவாங்க? என்ன சார் நீங்க? சும்மா இருங்க சார்! முதல்ல ரெண்டு பேரும் வெளியே போங்க! இல்லாட்டி உங்க புலம்பலை நிறுத்துங்க...'' என்று அங்கிருந்த நர்ஸ் அதட்ட.... இருவரும் கேட்காமல் போக... அவள் நேரே தீபிகாவிடம் ஓடினாள்.

''அங்கிள்... ஆன்ட்டி கண் விழிக்க இன்னும் கொஞ்ச நேரமும் ஆகலாம்! அல்லது ஒரு முழுநாள் கூட ஆகலாம்! அவசரப்படாதீங்க! தொல்லைப் பண்ணாதீங்க!'' தீபிகா சொல்ல...

அங்கு வந்த கௌதம்...

''ஏய் நரேந்திரா.... அப்பாவை கூட்டிட்டு வா! சாப்பிடலாம்!'' என்று சொல்லவும்...

''போடா இடியட்! அம்மா இப்படி இருக்க எங்களுக்கு சாப்பாடு ஒரு கேடா? அம்மா கண் விழிக்காமல் ஒரு சொட்டு தண்ணீர் கூட அருந்த மாட்டேன்! தெரியுமா?''

''மணி ரெண்டாகுது, நரேந்திரா! சொன்னால் கேளுடா?''

''மாட்டேன், கௌதம்! அம்மா கண்விழிக்கும் வரை சாப்பிடவே மாட்டேன்!''

''உன்னால் முடியும்! உன் அப்பாவால் முடியுமா? அதை சிந்தித்துப் பார்த்தாயா? அவர் சரியான வேளைக்கு

சாப்பிட வேண்டாமா? அவர் சாப்பிடலன்னால் உடம்பு என்னாகும்? அவருக்கும் அம்மாவின் அருகிலேயே... ஒரு பெட்டை ரெடி பண்ணிடுவ போல தெரியுதே!''

''அப்பா... நீங்க போய் சாப்பிடுங்கப்பா! எனக்கு வேண்டாம்!''

''என் மனைவி இப்படி வேர்அறுந்து மரமாய் கிடக்க... நான் எப்படி சாப்பிடுவேன்? என் தொண்டையில் உணவு இறங்காது!'' கிருபாகரன் மறுக்க...

''பிடிவாதம் வேண்டாம் அங்கிள்! வாங்க!''

கௌதம் கைப்பிடித்து அழைக்க... அவர் சென்றார்.

தீபிகா எத்தனை கெஞ்சியும்... நரேந்திரன் வர மறுத்து விட்டான்.

அது ஒரு நான்கு மாடி கட்டிடம்.

கீழே, முதல், இரண்டு, மூன்றாவது தளங்களிலே... வசதியான படுக்கைகள் கொண்ட அறைகளில் நோயாளி கள் தங்கி இருந்தனர். நகரின் மையப் பகுதியில் அமைந் துள்ளதாலும்.... கைராசியான டாக்டர்கள் என்பதாலும்... எந்த நேரமும் கூட்டம் அலை மோதும்!

டாக்டர் கௌதம் தங்களுக்கான குடியிருப்பை நான் காவது தளத்தில் வசதியாய் அமைத்து இருந்தான்.

இருபத்தி நான்கு மணி நேரமும் இயங்கும் மருத்துவ மனை கொடைக்கானலிலே இதுதான்!

மனம் கேட்காமல் திரும்பவும் வந்து கௌதம் அழைத் தான்.

''ஏய் நரேன்... மடையா... உடம்பு என்னத்துக்கு ஆகும்? வாடா... உன்னை விட்டுவிட்டு சாப்பிட மனசே வர்ல!''



''நீ சொன்னால் கேளு, கௌதம்! என்னை வற்புறுத் தாதே! என் தெய்வம் உயிருக்கு போராடிட்டு இப்படி கட் டையா கிடக்க... எனக்கு உணவு ஒரு கேடா? அப்பாவை மட்டும் வற்புறுத்தி... கொஞ்சம் சாப்பிட வையுங்க! அது போதும்!''

கௌதம் போய் விட்டான்.

நரேந்திரன் தங்கைக்கு போன் செய்ய... அழுகை யோடு ஓடி வந்தாள்.

அமிர்தத்தை அவ்வாறு கண்டவள்.... வெடிக்க வெடிக்க அண்ணனைக் கட்டிக் கொண்டு அழுதாள். கொஞ்ச நேரம் கழித்து... அழுகையெல்லாம் ஓய்ந்த பின்னர்.

''எல்லாம் உன்னால்... உங்களால் தான்!'' என்று ப்ரியா குற்றம் சாட்ட... மேலும் குன்றிப் போனான்.

''நான் என்ன செய்யட்டும்?''

''நீ... நீங்க...அம்மா சொன்னமாதிரியே ஒரு கல்யாணம் பண்ணிக்கோண்ணா! அம்மாவுக்கு ஒரு மருமகளை கொண்டு வந்து நிறுத்து! அம்மாவுக்கு பிடிச்சாப்போல பேரப்பிள்ளைகளைப் பெத்துக் கொடு! அதுதான்... அதுதான்... அம்மாவை இனி காப்பாற்றும்!''

''என்னைச் சாகச் சொல்லு... செத்துடறேன்! ஆனால் கல்யாணம் மட்டும் பண்ணிக்க சொல்லாதே, ப்ரியா! என்னைப் புரிஞ்சிக்கோ, ப்ரியா!'' என்று அண்ணன் தழுதழுக்க... ப்ரியா தவித்து விட்டாள்.

தாய்க்கு பரிதாபப்படுவதா?

தமையனுக்கு கலங்குவதா?

ப்ரியா புரியாமல் விழித்தாள்.

அத்தனை பேரின் தவமும் பலித்து... வரமாய் அமிர்தா மாலையே கண்விழிக்க...

"அம்மா... அம்மா... இப்படி கலங்கடிச்சிட்டையே! தவிக்கவிட்டுட்டையே!" என்று நரேந்திரன் கலங்க...

"என்னம்மா இப்படி செய்துவிட்டாய்? ஏம்மா? எதுக்கும்மா? எங்களையெல்லாம் கொஞ்சம் கூட நினைத்துப் பாராமல்..." மேலே பேச முடியாமல் ப்ரியா அழுகையை மென்று விழுங்க...

"அமிர்தா... அமிர்தா... நீயில்லாமல் நாங்கலெல்லாம் அநாதையாய் போயிடுவோமே! அதை நினைத்துப் பாராமல்... ஏன்? ஏன்டி?" என்று உடல் குலுங்கினார், கிருபாகரன்.

"அம்மா.... என்ன காரியம் பண்ண இருந்தே! நீயில்லாமல் எங்களால் இருக்க முடியுமா?" என்று கலங்கிய மகனை வெறுப்போடு பார்த்து விட்டு கண்களை இறுக மூடிக் கொண்டாள், அமிர்தம்.

"ஏங்க... அவனைப் போகச் சொல்லுங்க! என் கண் முன்னாடி நிற்க வேண்டாம்!"

"அம்மா..." நரேந்திரன் நடுங்கும் குரலில் அழைக்க...

அமிர்தம் மீண்டும் கண் திறந்து.... வார்த்தை கங்குகளை... அவன் மேல் அள்ளி அள்ளி வீசினாள்.

"போ... போயிடு! எனக்கு உன்னைப் பார்க்க விருப்பமில்லே! உன்னிடம் பேசப் பிடிக்கலே! நீ இங்கேயே நின்றால்... என் கழுத்தை நெரிச்சிட்டு... நான் சாகவும் தயங்க மாட்டேன்!" கண்களில் கண்ணீர் வழிய மீண்டும் கத்தினாள்.

"பெத்த அம்மாவோட ஆசையை நிறைவேற்றாத நீ... இன்னையில இருந்து என் பிள்ளையே இல்லை! என்



கண்முன்னாடி நிற்காதே! நீ யாரோ! நான் யாரோ! உனக்கும் எனக்குமான உறவு... இந்த நிமிடத்துல இருந்து அறுந்துப் போச்சி!"

அமிர்தம் எரிமலையாய் சீற...

நரேந்திரன்... இதயம் சுக்குநூறாய் உடைந்து சிதறியக் கணக்காய் துடிதுடித்துப் போய்விட்டான்.



## 3

நரேந்திரன் அங்கேயே வேர் ஓடி சிலையாய்..... மரமாய் நின்றிருந்தான்.

"அவனைப் போகச் சொல்லுங்க!"

"அம்மா..." நரேந்திரன் அழைக்க...

"அப்படிக் கூப்பிடாதே! நீ சொல்லும் போது... எனக்கு நெருப்பால் சுடறாப்போல இருக்கு! நான் பேரப்பிள்ளைக்கு ஆசைப்படறது தப்பா? நியாயமான ஆசைதானே? நான் என்ன பேராசையாப் படறேன்? 'அந்த சூரியனைப் பிடித்துவா! அந்த சந்திரனை கொண்டு வந்து என் காலடியில் நிறுத்து'ன்னு!" என்று அமிர்தம் சீற-

"அப்படி சொல்லியிருந்தால் கூட.... முயற்சியாவது பண்ணுவேன்! ஆனால் என்னால் முடியாததை செய்யச் சொல்றீயேம்மா..."

"என் பேச்சு கேளாத பிள்ளையின் முகத்துல விழிக்கவே பிடிக்கலை! அவனைப் போகச் சொல்லுங்க! ப்ளீஸ்..." கணவனிடம் கெஞ்சி மன்றாடினாள்.

''என்மேல் அவ்வளவு வெறுப்பாம்மா? அந்த அளவா என் மேல் கோபம்? அந்த அளவா... உங்க மனதில் நான் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டேன்?'' நரேந்திரன் கேட்க....

''பேசிட்டு நிற்காதே! முதலில் வெளியே போ!'' என்று கட்டளையாய் அமிர்தம் கூற...

மறுவார்த்தை பேச முடியாமல்... முகத்தில் கருமை படர்ந்து... நெஞ்சில் பாரம் சுமந்து... அடிப்பட்ட இதயத் துடன் வெளியே போனான் நரேந்திரன்.

''என்னம்மா... அண்ணா பாவம்மா! இப்படியா அவரை வெறுத்து பேசவே?'' என்று ப்ரியா கடிந்துக் கொள்ள....

''பாவியாக... ஏன் நடந்துக்கறே, அமிர்தா? அவன் துடிச்சிட்டான் தெரியுமா? இன்னும் தண்ணீர் கூட அருந்த வில்லை! கிட்டத்தட்ட ஒன்பது மணி நேரம் நின்ற காலிலேயே நின்று... உனக்காக சாமிகிட்ட வேண்டிட்டு தவமிருந்த பிள்ளையை... இப்படி வெறுக்கலாமா? மனசு நோக பேசலாமா? பாவம்டி அமிர்தா, அவன்! அவன் முகமெல்லாம் செத்துப் போச்சி!'' கிருபாகரன் மகனுக்காய் பரிதாபப்பட்டு வர...

''நம்மை சதா... இந்த பத்து வருடமா சாகடிச்சிட்டு இருப்பது... உங்க கண்களுக்கு தெரியலையா? மகனுக் காக வக்காலத்தா?''

கணவனிடம் சண்டைக்குப் போனாள், அமிர்தம்.

''ஆன்ட்டி... இப்படி கோபப்படுவது உங்க உடம்புக்கு நல்லதில்லே!'' அங்கே வந்த கௌதம் சொல்ல...

''வாடா கௌதம்! என்னை ஏன் பிழைக்க வச்சே? இந்த பொல்லாத உலகத்துல... நான் பார்த்து ரசிக்க... கொஞ்சி



கூத்தாட... இன்னும் என்ன பாக்கி இருக்குன்னு இப்படி ஒரு கெடுதலை எனக்கு செய்தே? என்னை ஏன் காப் பாற்றினே?'' என்று அவள் அழுகைக்கு தாவ...

''ஆன்ட்டி... உணர்ச்சி வசப்படுவது உங்க உடலுக்கு நல்லதில்லே! உங்களைக் காப்பாற்ற... நான் ரொம்பவே கஷ்டப்பட்டுட்டேன்! எனக்கு சவால் விட்ட கேஸ்... நீங்க! தெரியுமா? என்னை அவன் நம்பாமல் சென் னைக்கோ... கோவைக்கோ கொண்டு போகவான்னு கேட்கிற அளவு... நீங்க ரொம்ப சீரியஸ் கேஸ்! உங்களை உயிரோட திரும்ப பார்ப்போமா என்று எனக்கு கவலையே வந்துடிச்சின்னால் பாருங்க, ஆன்ட்டி! நீங்க எங்களை எந்த அளவு மிரட்டி... தவிக்க விட்டீங்கன்னு!''

கௌதம் உணர்ச்சி ததும்ப விளக்க... எந்த உணர்ச் சியையும் முகத்தில் காட்டாமல் படுத்திருந்தாள், அமிர்தம்.

''சரி ஆன்ட்டி! ஒரு ஊசி போட்டுட்டு கிளம்பிடறேன்!'' என்றவன் தன் பணியை முடித்துக் கொண்டு கிளம்பினான்.

கௌதம் சென்ற பின்னர் கிருபாகரன் மீண்டும் நரேந் திரனைப் பற்றி பேசினார்,

''அமிர்தா... நம் பிள்ளையை அழைக்கவா?''

''எதுக்கு?'' வேகமாய் கேட்டாள்.

''முகமெல்லாம் கறுத்து... சோகத்தை அப்பிட்டுப் போன... பிள்ளையைப் பார்க்க சகிக்கவேயில்லை!'' என்று கவலையுடன் கூற...

''நீங்க ஒண்ணும் பிள்ளைக்காக உருகி ஒழுக வேண் டாம்! அந்த திமிர் பிடித்தவனை... இன்னும் எவ்வளவு திட்டினாலும் தகும்? படட்டும்! கஷ்டப்படட்டும்! பத்து வருடமா... என் மனசையும்... அதில் விளைந்த ஆசை

களையும் கொன்ற பாவிங்க, அவன்! அவனுக்கு போய் இரக்கம் காட்டறீங்களே! உங்களுக்கு கொஞ்சமாச்சியும் அறிவு இருக்கா? காலையில் என்னென்ன சவடால் விட்டான்னு உங்களுக்கு தெரியுமா?''

''பாவம் சின்னப் பையன்! அவனுக்கு என்ன தெரியும்! விடு அமிர்தா!''

''வாயில் விரலை வைத்தால், கடிக்கும் அளவு குட்டிப் பையனா, அவன்? ஏதேது விட்டால் அவனுக்கு பரிஞ்சிட்டு... இன்னும் அகம்பாவத்தையும்... ஆணவத்தையும்... ஏத்திவிட்டுடுவீங்க போலத் தெரியுதே! இது சரியில்லைங்க! நான் திரும்பவும்... தற்கொலைக்கு முயற்சி பண்ணணும் போலத் தெரியுதே!'' அவள் சாதாரணமாய் கூற...

''எதையாவது செய்து... என் தலையில பெரிய பாறாங்கல்லைத் தூக்கி போட்டுடாதே, அமிர்தாம்மா!'' கணவன் கவலையாய் கூற...

''அப்படின்னால் அந்த மனசாட்சியே இல்லாத அரக்கனை இந்த ஆஸ்பிட்டல் விட்டேப் போகச் சொல்லுங்க!''

''வெந்தப் புண்ணிலேயே வேலைப் பாய்ச்சலாமா, அமிர்தா? பிள்ளை ஒடிஞ்சிப் போய் இருக்கான்! வேண்டாம், அமிர்தா!''

''அவன் மனசை புரிஞ்சிட்ட அளவு... என் மனசை புரிந்துக் கொள்ளவில்லையே!'' அவள் பட்டென்று சொல்ல...

''அமிர்தா...!''

''பின்னே மகனை புரிந்து கொண்ட அளவு... மனைவியை புரிந்து கொள்ளவில்லையே!''



''சரி... நான் கேட்கறேன்... மன்னிப்பது தானே மனித இயல்பு! மனிதனாப் பொறந்தவனுக்கு... அடுத்தவர்கள் செய்த தவறுகளை மன்னிக்கிற மனப்பக்குவம் வேண்டும்! நமக்கும்... விலங்குகளுக்கும்... உள்ள பெரிய வித்தியாசம் 'புரிதல்', அமிர்தா! 'புரிதல்'தான் மனித மொழி! 'புரியாதது' மிருக மொழி! மன்னிக்கிற மகத்தான குணத்தை நம்மிடம் இயல்பாகவே வைத்து அனுப்பியிருக்கிறான், கடவுள்! அதை சிலபேர் பயன்படுத்திகிறாங்க! அதை சிலபேர் செல்லரிக்க விட்டுடறாங்க! நீ அதை பயன்படுத்திக்கிற பிரிவுல இருக்கப் போறியா? அல்லது செல்லரிக்கற பிரிவுல சேர்ந்துக்கப் போறியா? ம்?''

''............''

''எனக்கென்னவோ... அவன் உன் வழிக்கு வரலாம்னு கூட தோன்றுது!''

''நிஜமாவா? நிஜமாவா? பொய் சொல்லலையே, நீங்க?'' அவள் அவசர அவசரமாய் ஆனந்தத்துடன் கேட்க...

''அதுக்குன்னு என் பேச்சைக் கேட்டு ரொம்ப, பூரித்துப் போயிடாதே! எல்லாம் என் கணிப்புதான்! என் யூகம்தான்! அவன் ஏதோ மனசைப் போட்டு குழப்பிட்டு சிந்திப்பது போல தெரியுது!'' கிருபாகரன் சொல்ல...

''கொஞ்ச நேரத்துல என்னைச் சந்தோசப்பட வச்சிட்டு இப்படி என் ஆசையில தீயை வச்சி பொசுக்கறீங்களே!'' என்று கோபப்பட்டாள்.

''நீ என்ன அடிச்சிட்டாலும்... புரண்டாலும்... உருண்டாலும்... கெஞ்சினாலும்... கொஞ்சினாலும்... மிரட்டினாலும்... நடக்கணும்ன்னு இருப்பது ஒருநாளும் நிற்காது, அமிர்தா. நமக்கு கொடுப்பனை இருந்தால்... அவன்

திருமணம் செய்து கொள்வான்! அவனுக்கு ஒரு மனைவி வருவாள்! வரிசையாய் உனது பேராசை அடங்கும் வரை... பிள்ளையைப் பெற்று... உன் கையில் தந்துட்டே இருப்பாள். நீ அடித்துக் கொள்வதாலோ.... அழுவதாலோ... ஆத்திரப்படுவதாலோ... தற்கொலை செய்து கொள்வதாலோ... தீர்வு எதுவும் ஏற்பட்டு விடாது! கடவுள் மனசு வைக்கணும்! நரேந்திரன் மனசை... அந்த கடவுள் மாற்றினால்.... எல்லாம் நல்லபடியாய் நடக்கும்!"

கிருபாகரன் நீளமாய் பேசி முடிக்க... அமிர்தாவின் இரும்பு இதயம் 'கொஞ்சமாய்' உருகியது.

"அவன் என்னைப் பார்க்கலாம்! ஆனால், என்னிடம் பேசக்கூடாது! நான் அந்த வீட்டுக்கு குணமாகி வரணும்னனால்... அவன் என்னிடம் எதுவுமே வச்சிக்கக் கூடாது என்றுமே பேசமாட்டேன்! அவனும் பேசுவதற்கு சிறு முயற்சி கூட மேற்கொள்ளக் கூடாது! இதுக்கு ஒத்துக்கிறதா இருந்தால்தான்... நான் அந்த வீட்டு வாசற்படியை மிதிப்பேன்! இல்லேன்னால் என் வழி மரண வழிதான்!"

"திரும்பத் திரும்ப சாவேன்னு ஏன் அமிர்தா எங்களை பயமுறுத்தறே?"

"பின்னே என்ன செய்ய? தறுதலை பிள்ளையை பெத்தவங்க கதியெல்லாம் இப்படித்தான்!"

"மனசை விட்டுடாதே! மீண்டும் முயற்சி பண்ணலாம்!"

"முரடன்... மத்தவங்க மனசை புரிந்து கொள்ளாத மடையன், அவன்! நான் அவனிடம் இதுபற்றி என்றுமே பேச மாட்டேன்!"

"நான் நரேந்திரன் கிட்ட பேசறேன்!"

"அப்படியே அப்பான்னு மதிப்பு கொடுத்துடுவான்!" என்று எகத்தாளமாய் பேசினாள், அமிர்தம்.



இரவு உணவு பங்களாவிலிருந்து வேலைக்காரி எடுத்து வர கௌதம் கோபித்துக் கொண்டான்.

"என்னடா நரேந்திரா... எங்களை அவமானப்படுத்தணும்ன்னே... இப்படி ஒரு காரியம் பண்ணறீங்களா?"

"ஏய் வேலைக்காரி தெரியாமல் எடுத்து வந்துட்டாள். ஸாரிடா, கௌதம்!" என்று நரேந்திரன் சமாதானப்படுத்த... கௌதம் அமைதியானான்.

"இரவு மணி ஒன்பதாகுது! நீங்கள் எல்லாம் கிளம்புங்க! அங்கிள், நீ, ப்ரியா மூவரும் நிம்மதியாய் வீட்டிற்கு போய்... தூங்கிட்டு வாங்க!"

"அம்மாவிடம் யாரும் இல்லாமல்...?"

"உனக்கு ஏன் கவலை! நந்தினி பார்த்துக் கொள்வாள்!"

"அது யார்டா நந்தினி?"

"என் ஹாஸ்பிட்டல் நர்ஸ்!"

"ஒரு நர்ஸை நம்பியெல்லாம் அம்மாவை விட்டுட்டு போகமாட்டேன்!"

"டேய்... டேய்... அவள் நர்ஸ் மட்டுமல்ல! என் தங்கையாகிப் போனவளும் கூட! சமீபமாய்தான் இங்கே வந்து சேர்ந்தாள். இங்கேயே தங்கியிருப்பதால்... வெளியூர் நர்ஸுங்களுக்கு பகல் டூட்டியை விட்டுக் கொடுத்துட்டு... நைட் டூட்டி பார்ப்பவள்! நல்ல பெண்! தாய், தகப்பன்னு யாருமே இல்லே! ஒரு அக்கா இருக்கா! அவள் சேவை மனப்பான்மையும்... மனிதர்கள் மேல் காட்டும் இரக்கமும்... வேலை செய்யும் பாங்கும்... என எல்லாமுமாய் சேர்ந்து... அவளை வெறும் நர்ஸா பார்க்கத் தோணல! என் தங்கையா பார்க்க தோணிடிச்சி! அவளோடு இரண்டு நர்ஸுகளும் இருப்பார்கள்! நல்லவள். பயப்பட வேண்டாம்!"

"போயும்... போயும்... ஒரு நர்ஸோட பாதுகாப்பில்... என் தாயை விட்டு செல்வதா? என்னடா பேசறே?" நரேந்திரன் சீற....

"இங்கே பார்டா! பொறுப்பானவள்! நன்கு வேலைத் தெரிந்தவள்! சின்னப் பெண்ணாலும் திறமைசாலி! மற்ற ரெண்டு பெண்களையும் ரவுண்ட்ஸ்ல இருக்க சொல்லிட்டு... நந்தினியை அம்மாவை விட்டு அகல வேண்டாம் என்று சொல்லி விடுகிறேன்! போதுமா?"

"ப்ரியா மட்டுமாவது இருக்கட்டும்!"

"சொன்னால் கேட்கமாட்டாயா? படிக்கும் பெண்ணை ஏன் கஷ்டப்படுத்தணும்?"

"கௌதம் அண்ணா... எனக்கொன்றும் சிரமமில்லை! இன்று அம்மாவோடு நானும் இருக்கிறேன்!" என்று ப்ரியா சொல்ல...

"உன் இஷ்டம்மா!" என்று சொல்லி... அமிர்தத்திற்கு தேவையான மருந்து மாத்திரை கொடுத்து விட்டு சென்று விட்டான், டாக்டர் கௌதம்!

"ஏய் வாலு... அம்மாவை கவனமா பார்த்துக்கோ!" என்று நரேந்திரன் சொல்ல... அமிர்தம் முறைத்தாள்.

கிருபாகரன், நரேந்திரன் சென்று விட்டதும்... ப்ரியா ஒரு புத்தகத்தை பிரித்துக் கொண்டு அமர்ந்தாள்.

கொஞ்ச நேரத்தில் வெள்ளை நர்ஸ் உடையில் தேவதை கணக்காய்... உள்ளே வந்த நந்தினியைக் கண்டு... வைத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள், ப்ரியா.

"ஐ ஆம் நந்தினி! நர்ஸ் நந்தினி! யுவர் குட் நேம் ப்ளீஸ்..." என்று அழகாய் புன்னகைத்து நந்தினி கை நீட்ட....



நந்தினியின் கன்னத்தில் விழுந்த அழகான கன்னக் குழியைப் பார்த்துக் கொண்டே....

"ஐ ஆம் ப்ரியா! ஐ ஆம் ஸ்டடியிங் பி.எஸ்ஸி. பாட்டனி! தேர்ட் இயர்!" என்று கைக் குலுக்கினாள், ப்ரியா.

"நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க, மிஸ் நந்தினி! அடடா... எவ்வளவு அடர்த்தியான... நீள முடி! எத்தனை சுற்று சுற்றி கொண்டைப் போட்டிருக்கிறீர்கள்?" என்று ஆச்சரியமாய் கேட்க...

"நீங்கள் ஹாஸ்பிட்டலில் இருந்து போவதற்குள்... என் முடியின் நீளத்தைக் காட்டி விடுகிறேன்! திருப்தியா மிஸ் ப்ரியா?"

"ஆமாம்... தலைக்கு என்ன போட்டு குளிக்கறீங்க?"

"வெறும் சீயக்காய்தான்! வெறும் தேங்காய் எண்ணெய் தான்!"

"ஓ..." என்று அதிசயித்து... "பிரத்யேகமா எதுவும் யூஸ் பண்ண வில்லையா?"

"ம்கூம்...!" என்று மென்னகையோடு தலையாட்டினாள், நந்தினி.

"நீங்கள் படிக்க வேண்டுமானால் படியுங்களேன்! இல்லையேல் படுத்துக்கங்க! நான் உங்கள் தாயை பத்திரமாய் பார்த்துக் கொள்கிறேன்! ப்ரியா... நீங்கள் ரொம்ப சோர்வாய் தெரிகிறீர்கள், தெரியுமா?"

"ஆமாம், நந்தினி! அம்மாவுக்கு இப்படி என்றதும்... ரொம்பவே பயந்துட்டேன்! சோர்ந்துட்டேன்! எனக்கு நிஜமாகவே தூக்கம் வருது! படுத்துக்கவா?"

"அதை நீங்க கேட்கணுமா? கவலையே வேண்டாம்! இரவில் கண் விழித்து... ரொம்ப பழகிப் போச்சு! அதனால்

நீங்க நிம்மதியா தூங்கலாம். நான் பார்த்துக் கொள்கிறேன்!''

நந்தினி சொல்ல... ப்ரியா நிம்மதியாய் உறங்கப் போனாள்.

இந்த நிம்மதி நிலைக்காது என்று தெரியாமல்!




வானத்தில் நிலவுக் குழந்தை மேகத்தாயின் கைப் பிடித்து... தளிர் நடை பயில... நட்சத்திரக் கூட்டங்கள் மின்மினியாய் மின்னிக் கொண்டு... பின்னாடியே துணைக்கு போக என்று... வானம் மிகவும் ரம்மியமாய் காட்சியளித்தது.

குளிர்காற்று சன்னலை ஊடுருவி... அறையின் உள்ளே வரவும்... தனது ரசிப்பினை விட்டுவிட்டு... சன்னலை மூடினாள், நந்தினி.

நகரமே குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தது!

நந்தினி ஹீட்டரை அதிகப்படுத்திவிட்டு வந்து நாற்காலியில் அமரவும்... அமிர்தம் உடலை முறுக்கி... மெதுவாய் கண் திறந்தாள்.

தன் எதிரில் கருணையே உருவாய்... அழகின் இலக்கணமாய்... அகன்ற விழிகளுடனும்... பிறை நெற்றியுடனும்... வரி வடிவமான உதடுகளுடனும்... செழுமை



யான கன்னக் கதுப்புகளுடனும்... அளவான உயரத்துடனும்... உட்கார்ந்து இருந்த 'பூக்களின் தீபகற்பத்தை' ஆச்சரியத்துடன் பார்த்தாள். பார்த்துக் கொண்டே இருந்தாள், அமிர்தம்.

கிருத்திகா நல்ல அழகிதான்! ப்ரியாவும் அழகிதான்! ஆனால் எதிரில் இருந்த பூந்தீவு இவர்களையெல்லாம் விஞ்சி... அந்த ரதியையே ஒத்தவளாய் ஜொலித்ததையும்... பாலில் சந்தனத்தை குழைத்த நிறமுமாய் தோன்றியதையும் கண் இமைக்காமல் பார்த்தாள்.

அமிர்தமும் எத்தனையோ பாவைகளைப் பார்த்திருக்கிறாள், ஆனாலும் இத்தனை அடக்கமும்... மனதை அள்ளும் அழகியை நிஜமாகவே அமிர்தம் இதுவரைக் கண்டதில்லை! கனவோ என்று நினைத்தாள். இமைகளைக் கொட்டினாள். நிஜம் புரியவும் கேட்டாள்.

''நீ.... நீங்க?'' என்று நா குழறலாய் கேட்க...

''ஓ... மேம்...! முழிச்சிட்டீங்களா? நான் உங்களைப் பார்த்துக் கொள்ளும்... நர்ஸ் மேம்!''

''நர்ஸா...? நம்பவே முடியலையே! நான் ஏதோ தேவதைன்னு நினைச்சுட்டேன்! ஐய்யோ... எத்தனை அழகு! எத்தனை இதமா இருக்கு, உன்னைப் பார்க்க...!''

நந்தினி அழகாய் புன்னகைக்க...

''நீ சிரித்தால்... கூடுதலாய் அழகு கொட்டுதும்மா! பார்த்துட்டே இருக்கணும் போல இருக்கு!''

''என்னங்க மேம்... ரொம்ப ஓவரா புகழறீங்க? உங்க புகழ்ச்சிக்கு நான் தகுதியானவளா?''

நந்தினி சந்தேகமாய் கேட்கவும்.... சட்டென்று சொன்னாள், அமிர்தா.

"பொய் சொல்றேன்னு நினைச்சிடாதேம்மா! நிஜமா... என் உள்ளத்திலிருந்து வரும் உண்மையான வார்த்தைகள்! ஒன்று செய்தால் தப்பா எடுத்துக்க மாட்டாயே!"

"என்ன மேம்?"

"கொஞ்சம் குனியேன்!"

அவள் குனிய... இழுத்து... கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள், அமிர்தா.

நந்தினி நம்பாத ஆச்சரியத்தில் சஞ்சரிக்க...

"தப்பாக எடுத்துக் கொள்ளாதேம்மா! உன்னை கட்டி முத்தமிடணும்ன்னு ரொம்ப ஆசையா இருந்தது! அதான்! ஸாரிம்மா...!"

"ஸாரில்லாம் எதுக்கு மேம்?" நந்தினி பிரமிப்பு மாறாமல் கூற...

"ஒரு பெண்ணையே இந்த அழகு முத்தமிடத் தூண்டுதே... இதுவே ஆண்கள் கண்டால்..." என்று முடிக்காமல் சிரிக்க...

"நிஜம்தான், மேம்! என் அழகே எனக்கு எமனா இருக்கு! நான் இந்த முகத்துக்கு தனியா எதுவும் அலங்காரம் பண்ணிக் கொள்வதில்லை! அக்கா திருமணமாகி போனப்பின் தனியாக வசித்தேன்! முடியலே! பின்னர் அவர்கள் வீட்டிற்கு சென்றதும் அத்தானோட தொல்லை! அங்கேயும்... இங்கேயும் பந்தாடப்பட்டு கடைசியாய் இங்கே வந்து சேர்ந்தேன்! என்னை கௌதம் சார் தங்கை போல பார்த்துக்கிறார். இப்போது திருப்தியாய் பயமின்றி வாழ்கிறேன்!" நந்தினி வருத்தத்தோடு கூறி முடிக்கவும்...

"அடடா... உன் வாழ்க்கையில்தான் எவ்வளவு கஷ்டங்கள்? உன்னைப் பற்றி சொல்லேம்மா? தூக்கம் வர்லே. கேட்கிறேன்!"



"வேணாம், மேம்! நோயாளி நீங்கள்! என் கஷ்டங்களைச் சொல்லி... மேலும்... உங்களை நோயாளியாக்கக் கூடாது! கௌதம் அண்ணா... உங்களுக்கு ஏதாவது ஒன்று என்றால்.... என்னைச் சும்மா விடமாட்டார்!" என்று கவலையாய் நந்தினி கூறவும்...

"நான் ரொம்ப நல்லாயிருக்கேன்! எனக்கும் தூக்கம் வர்லே! இந்த இரவு பொழுதை மெல்ல கழிக்கணும் இல்லையா? அம்மா சொல்லம்மா!" என்று அமிர்தம் விடாமல் கேட்க...

"நானும்... எனது அக்காவும்... பிறந்த கொஞ்ச நாளில் எங்களையெல்லாம் விட்டுவிட்டு... வேறு பெண்ணோடு... என் தந்தை கண்காணாமல் ஓடிப் போய்விட்டார். பாவம் அம்மா... கஷ்டப்பட்டு எங்களைக் காப்பாற்றினாள். எப்படியோ அக்காவை சிரமப்பட்டு... ஒருவரிடம் திருமணம் செய்துக் கொடுத்தாள்! என் படிப்பு முடியும் போது இறந்தே விட்டாள்!"

நந்தினி கண்களில் துளிர்த்த நீரை அடக்கிக் கொண்டு மீண்டும் கூறினாள்.

"அம்மாவை உட்கார வைத்து.... மகாராணியாய் கையில் தாங்கணும்ன்னு நான் கட்டிய கோட்டையெல்லாம் தரைமட்டமாகிவிட்டது, மேம்! என் கனவெல்லாம் கானல் நீராகிவிட்டது, மேம்!"

"எத்தனை சுமைகள்? எத்தனை சோகங்கள்? பாவம்மா நீ!"

"சின்ன வயசுல இருந்தே டாக்டராகணும் என்பது என் ஆசை! என் லட்சியம்! என்ன செய்வது? அம்மாவால் முடியுமா? அவளின் சக்திக்கு வெறும் டிப்ளமோ நர்ஸ்

கோர்ஸ்தான் படிக்க வைக்க முடிந்தது! படித்து முடித்தேன்! அம்மாவும் இறக்க... என் வாழ்க்கை கேள்விக்குறியாகி... தனியே கொஞ்ச நாள் வசித்தேன்! அது முடியாமல் போக அக்கா வீட்டுக்குப் போனேன். அக்கா புருஷனின் இரட்டை அர்த்த பேச்சுக்களாலும்... பார்வைகளாலும்... அணுகுமுறையாலும்... என்னை... என் பெண்மையைக் காப்பாற்றிக் கொள்ள... மதுரையிலிருந்து இந்த கொடைக் கானலுக்கு வந்தேன்! மலையன்னை எனக்கு அழகான அண்ணியையும்... அன்பான அண்ணாவையும் கொடுத் திருக்கிறாள்.''

அமிர்தம் அவளின் பேச்சு புரியாமல் விழிக்க... நந்தினி விளக்கினாள்.

''நான் அண்ணான்னு சொன்னது கௌதம் சாரையும்... அண்ணின்னு சொன்னது தீபிகா மேடத்தையும் தான்! என்னை தன் சொந்த தங்கையாக பாவித்து... தங் களுடைய இருப்பிடத்திலேயே தங்க வைத்து... உண்ண உணவு... இருக்க இருப்பிடம்... போதாக்குறையாய் நல்ல சம்பளமும் தராங்க! சரியாய் ஒன்றாம் தேதியானால் என் சம்பளத்தை வாங்க எனது அக்கா புருஷன் வந்து நின்றுவிடுவார்! இல்லையேல் அக்காவை அடித்து, மிரட்டி அனுப்பிவிடுவார். அக்கா ரொம்ப பாசமானவள்! என் பணத்திற்காக அலைபவள் அல்ல! கூனி, குறுகி... மனம் நொந்துதான் வந்து நிற்பாள். அவளுக்கு இப்படி யொரு தர்மசங்கடத்தை ஏற்படுத்தாமல் சரியாய் ஒன்றாம் தேதியானால் பணத்தை மணியார்டர் பண்ணிடுவேன்!''

''உன் அத்தான் என்ன வேலை செய்கிறார்?''

''வி.ஓ.வாக இருக்கிறார்.''

''அப்படின்னால்...?'' என்று நெற்றி சுருக்கி கேட்க...



''வெட்டி ஆபீஸர் மேம்!'' என்று நந்தினி சிரித்தாள்.

''ஒரு தனியார் கம்பெனியில எழுத்தர் வேலைப் பார்த் தார். அங்கே பொய் கணக்கை எழுதி தன் கைவரிசையைக் காட்ட... அந்த நிறுவனம் இவரை வேலையில இருந்து தூக்கிடுச்சி! அதிலிருந்து எந்த கம்பெனியிலும் அத்தான் நிலைச்சி நிற்கல! அக்கா ஒரு பஞ்சு ஆலையில தினக் கூலியாக வேலை செய்கிறாள். அத்தான் நல்லா குடிச் சிட்டு ஊரைச் சுற்றுவதுதான் அவரின் முக்கிய வேலையே!''

''உன் அக்காவின் நிலை ரொம்ப மோசம்மா!''

''ஆமாம் மேம்! நாங்க ஏமாந்துட்டோம்! நல்லவர் போல நடித்து... அக்காவை கட்டிட்டுப் போய்விட்டார். அக்கா வின் கவலையிலேயே அம்மா இறந்து விட்டாள், எங் களையெல்லாம் அநாதையாய் விட்டுவிட்டு!''

''உலகத்தில் ஜனித்த எந்த ஜீவராசிகளும் அநாதை யில்லம்மா! எல்லோருக்கும் தாயாகவும், தகப்பனாகவும் அந்த இறைவன் இருக்கிறான்! உன்னைப் போல வாழ்க் கையில கஷ்டப்பட்டுகிட்டு இருப்பவர்கள் மேல்தான் அதிகமான இரக்கம் கொள்வார், இறைவன்! உனக்கு ஏதாவது ஒரு விதத்துல கடவுள் பெரிசா நல்லதை செய் வார்ம்மா! நிஜம்மா!''

''எனக்கு இறைவன் எதுவும் செய்ய வேண்டாம், மேம்! அக்காவின் புருஷன் திருந்தி... அக்கா நல்லபடியாக, மகிழ்ச்சியாக வாழ்ந்தாலே போதும், மேம்!''

''நிச்சயமா ஒருநாள் உன் அத்தான் திருந்தி... உன் அக்கா சந்தோசமாய் வாழ்வாள்!''

''உங்க வாக்கு தெய்வ வாக்காக பலிக்கணும், மேம்!''

நந்தினி அமிர்தத்தைப் பார்த்து கையெடுத்துக் கும் பிட்டாள்.

''நான் வெறும் மனுஷாள்ம்மா! என்னைப் போய் கும்பிட்டுட்டு!''

நந்தினியின் கையை கெட்டியாய் பிடித்துக் கொண்டாள் அமிர்தம்.

''உன் அக்காவுக்கு எத்தனை குழந்தைங்கம்மா?''

''ரெண்டு குழந்தைங்க! அதுவும் பெண் குழந்தைகள்! அதுக்கும் சேர்த்து மாமியாரிடம் இடிப்பட்டுக்கிட்டு இருக்காள், மேம்!''

''நல்லவங்களை இறைவன் சோதிப்பான்! ஆனால் கைவிட மாட்டான்!''

''என் சோகத்தைச் சொல்லி... உங்களைக் கஷ்டப் படுத்திட்டேனா, மேம்?''

''நீயாக எங்கேச் சொன்னாய்? நான்தானே ப்ரியமாக கேட்டேன்!''

ஆனாலும் ஒரு நோயாளியிடம் துன்பங்களையும், துயரங்களையும் சொல்லி மேலும் கஷ்டப்படுத்தக் கூடாது, மேம்!''

''எவ்வளவு தங்கமாய் பேசுகிறாயேம்மா! உன்னை எனக்கு ரொம்பவே பிடித்திருக்கிறது, நந்தினி!''

''அப்படின்னால் நான் ஒன்று கேட்டால் தப்பா எடுத்துக் கொள்ளக் கூடாது! சரியா, மேம்?''

''இந்த மேம், ஆன்ட்டி எல்லாம் எனக்கு பிடிக்காதும்மா! பணக்காரியாய் இருப்பதால் நிறைய படிச்சிருக்கேன்னு நினைச்சிட்டையா? அதெல்லாம் இல்லை, நந்தினி! நான் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள், ஐந்தாம் வகுப்புக்கு மேல் தாண்டாதவள்! மேம் வேண்டாம்! வாய் நிறைய



அத்தைன்னு கூப்பிடேன்! ஏக்கமா இருக்கு! இந்த மேல்தட்டு வர்க்க மக்களில் எவளுமே அப்படி கூப்பிட மாட்டேங்கிறாள், நந்தினி! ப்ளீஸ்...'' அமிர்தம் ஆசையோடு கேட்க...

''அடடா... என்ன மேம்... ஸாரி... ஸாரி, அத்தை!'' என்று நந்தினி சொல்லிவிட்டு சிரிக்க... அமிர்தம் சிலிர்த்து விட்டாள்.

''இவ்வளவு நல்லவர்களாய் இருக்கிறீர்களே, ஆன்ட்டி... ஸாரி அத்தை... உங்களுக்கு என்ன சோகம்? என்ன துக்கம்? இப்படி அளவுக்கதிகமான மாத்திரைகளை முழுங்கிட்டு... இப்படி நல்லாயிருந்த உடம்பை கெடுத்துட்டீங்களே, அத்தை! இது உங்களுக்கே நல்லாயிருக்கா?''

நந்தினி 'அத்தை' என்று சொல்ல... அமிர்தம் அவ்வார்த்தையில் மயங்கிதான் விட்டாள்! இத்தனை தித்திக்குமா அத்தை என்ற சொல்? அதுவும் நந்தினி அவ்வாறு அழைத்தது... உலகத்து இனிப்பையெல்லாம் ஒன்று திரட்டி சுவைத்தது போல... இதயத்தில் தித்தித்தது, அமிர்தத்துக்கு.

''எல்லாம் இந்த நரேந்திரன் பயலால்தாம்மா!''

''எத்தனை வயசிருக்கும்? ஒரு இருபது...? இருபத்தைந்து? காலேஜ் போறாரா, அத்தை?'' நந்தினி கேட்க...

''அட... ப்ரியாவைப் பார்த்துட்டு சொல்றீயாமா? அவன் பிறந்து ஒரு பதினைந்து வருடம் கழித்து... இனி இவன் ஒருவனே என்று நினைத்திருந்த போது... திடீரென்று முளைத்து வருகிறாள், இந்த குட்டி! இத்தனை ஆண்டுகள் கழித்து பிள்ளை பெறுவதான்னு அசிங்கப்பட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு போனால்... கரு நல்லா வளர்ந்துடிச்சி!

இனி கருவை கலைக்க முடியாது! அப்படி மீறி செய்தால் எனக்கு ஆபத்தாகி விடும் என்று சொல்ல... அந்த முயற்சியை கைவிட்டுவிட்டோம்! வீட்டை விட்டு ப்ரியா பிறக்கும் வரை வெளியே வரவேயில்லை! அந்த அளவு வெட்கமாகவும், அசிங்கமாகவும் இருந்தது!'' அமிர்தம் புன்னகைத்தாள்.

''சரி... நரேந்திரன் சார் என்ன செய்கிறார்?''

''நீ பார்த்தது இல்லையாம்மா? கௌதமும் நரேனும் குளோஸ் ப்ரண்டுங்க! எப்படியும் மாதத்தில் ஒரு நாளாவது நரேந்திரன் இங்கே வருவானே!''

''இல்ல, அத்தை!''

''காபி தோட்டம், டீ தோட்டம், கன்னியாகுமரியில ரப்பர் தோட்டம், மதுரையில இரும்பு உருக்கு ஆலைன்னு ஏகப்பட்ட சொத்துக்கள் இருக்கும்மா! அதையெல்லாம் பொறுப்பாகப் பார்த்துக் கொள்கிறான்!''

''இப்படி திறமையாக தொழிலை நிர்வகிக்கிறவர்... தன் மனைவியோடு சுமுகமா... சந்தோஷமா வாழலையா, அத்தை? அவர்களுக்குள்ளே அடிக்கடி தகராறு ஏற்படுகிறதா?''

''மனைவி இருந்தால்தானே தகராறு ஏற்பட?''

''ஏன் இன்னும் திருமணம் ஆகலையா, அத்தை?''

''அது ஆச்சிம்மா! ஆனால் அவள் இவனோடு வாழக் கொடுத்து வைக்கலையேம்மா!''

''ஏன் டைவர்ஸ் வாங்கிட்டு போயிட்டாங்களா.'' நந்தினி பட்டென்று கேட்க...

''இல்லே, நந்தினி! செத்துப் போயிட்டாள்ம்மா!''



அமிர்தம் தாங்க முடியாமல் அழுதாள்.

''மூணு மாசம் கூட வாழலே! இவனை தவியா தவிக்க விட்டுட்டு போயிட்டா, மகராசி! என் பிள்ளை அவளை நினைச்சிட்டே... வேறு கல்யாணமும் பண்ணிக் கொள்ளாமல் பட்டமரமாக இருக்கான்! பார்க்கவே பகீர்ன்னு இருக்கு! பொண்டாட்டியை கட்டிட்டு தூங்க வேண்டிய வயசுல... என் பிள்ளை...''

அதற்கு மேல் முடிக்க முடியாமல் விம்ம...

''ஏன் மறுமணத்தை நீங்க வலியுறுத்தலாமே!''

''அவளை உயிருக்குயிரா காதலித்து கல்யாணமும் பண்ணிக் கொண்டவன்! அவளையே இன்னமும் நினைத்து நினைத்து... மாய்ந்துப் போகிறான்! அத்தனைப் ப்ரியத்தையும், காதலையும் அவள் மேல் கொண்டவன்!''

''இப்படிப்பட்ட நல்லவர்க்கு அம்மான்னு சொல்லிக் கொள்வதே பெருமைதானே, அத்தை?''

''பெருமைதாம்மா! ஆனாலும் எங்கள் குலம்... எங்கள் வம்சம்... இவனோடே மடிந்துப் போவதைக் காணச் சகிக்கலே, நந்தினி! பேரப்புள்ளை ஆசையில என் நெஞ்சு விண்டுப் போகுது! சொன்னால்... இந்த வயசானவங்க ஆசையை நரேந்திரன் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறான்!''

''குழந்தைகள் மேல் இத்தனை ஆசை கொண்ட நீங்கள்... சுனாமியால் எத்தனை குழந்தைங்க அநாதையாக தவிக்கிறாங்க! அதில் இரண்டை தத்தெடுத்து வளர்க்கலாமே, அத்தை!''

''அதுபோல பிள்ளைகளை ரெண்டு இல்லை... நிறையவே வளர்க்க சம்மதிக்கிறேன்! ஆனாலும் எனக்கு என்

மகனுடைய பையனையோ... பெண்ணையோ கொஞ்சணும்ன்னு தீராத ஆசைம்மா! கேட்டால் புரிந்து கொள்ளாமல் எடுத்தெறிந்து பேசுகிறான்! அவன் மேல் கோபம் வந்துடிச்சி! இப்படி ஒரு பிள்ளையோட வாழணுமா? இப்படி ஒரு நிறைவேறாத ஆசைகளைச் சுமந்த உயிர் தேவையா? என்று தோணியது! அதான் மாத்திரையை அள்ளி முழுங்கிட்டேன்!

"நந்தினி... எத்தனையோ அநாதை ஆசிரமத்துக்கு... நிறையவே உதவுகிறோம்! ஆனால் எங்கள் வம்சம் தழைக்க... நரேந்திரனுடைய மனசு மாறலையேம்மா! எந்த பிறவி பாவமோ... இப்படி இந்த மனிதப் பிறவியில் என்னை வாட்டுதேம்மா!"

அமிர்தம் தாங்க முடியாமல் வெடித்து அழ...

"விடுங்க, அத்தை! அழாதீங்க, அத்தை!" என்று நந்தினி சமாதானப்படுத்த...

"நரேந்திரன் இனியுமா மாறப் போகிறான்! அநியாயத்துக்கு செத்தவள் மேல உயிரை வைத்துக் கொண்டு... உயிரோடு இருக்க எங்கள் ஆசைகளுக்கு தினம் தினம் தீ வச்சிட்டு இருக்கானே, நந்தினி! நான் என்ன செய்ய? சாகாமல் எப்படி சந்தோசமாக இருக்க?"

நந்தினி அவளை அடக்க எத்தனை பெரும்பாடு பட்டும் முடியாமல் போக... அமிர்தத்துக்கு ஆஸ்துமா வேறு... அது கடைசியில் மூச்சுத் திணறலை ஏற்படுத்த...

கௌதம் அழைக்கப்பட... காட்சியே கலவரமாய் இருந்தது.






மேற்குத் தொடர்ச்சி மலை தன்னைச் சிங்காரித்துக் கொண்டு... சிரித்த முகத்துடன்... பச்சைப் பட்டுடுத்தி... கம்பீரமாய் ஓங்கி, உயர்ந்து... அழகாய் நின்றாள்.

மேகக் காதலர்கள் கூட்டம் கூட்டமாய் புறப்பட்டு... முட்டி மோதி... கட்டி தழுவி... மேற்குத் தொடர்ச்சி மலையை முத்தமிட்டுக் கொண்டே சென்ற இளங் காலைப் பொழுது!

இரவு அமிர்தம் அந்த பாடுபடுத்திவிட... கௌதம், தீபிகா வந்து உடனடியாய் சிகிச்சையளித்து... மயக்க மருந்தின் உதவியால் சீக்கிரமே அமிர்தத்தை தூங்க வைத்துவிட்டார்கள்.

கௌதம் என்றும் இல்லாமல் நந்தினியைத் திட்டித் தீர்த்தான்.

"பொறுப்பாய் பார்த்துக் கொள்வாய் என்று... உன்னை நம்பி, என் நண்பனை அனுப்பினேன்! நீ என்னவென்றால்... ஆன்ட்டியிடம் பேச்சிக் கொடுத்து... வம்பை விலைக்கு வாங்கி... எனக்கு கொடுக்கிறாய்! என்ன பெண்ணம்மா நீ? நோயாளியிடம் பழைய கதையை, சோகங்களை கிளறலாமா? இதுகூட தெரியாத முட்டாளா, நீ?"

''ஸாரி... ஸாரியண்ணா!'' என்று நந்தினி நடுங்கிக் கொண்டே மன்னிப்பு கேட்டும்... கௌதமுள் இருந்த கோபம்... தீயாய் அவளை சுட்டு தகித்தது.

''ஏதாவது ஒன்று கிடக்க ஒன்று ஆனால்..... நரேந்திரன் என்னைச் சும்மா விட மாட்டான். அந்த அளவு அம்மாவின் மேல் பாசம்! தெரியுமா?''

''அவர்கள் தூக்கம் வர்லேன்னு...'' என்று தன் னிலையை விளக்கப் போனவளை இடைமறித்தான்.

''நோயாளி ரொம்ப நேரம் பேசக் கூடாது! உணர்ச்சி வசப்படக்கூடாது என்று தெரியுமல்லவா? அப்படியிருக்க அவர்களிடம் ரொம்ப நேரம் பேசலாமா? உனக்கு அந்த அறிவு கூடவா இல்லை? ம்?''

நந்தினி கண்கள் கலங்க அவமானத்தில் தலைக் குனிந்தாள்.

''ஆன்ட்டிக்கு யாராவது கிடைத்துவிட்டால்... தன் பிள்ளையைப் பற்றிய குறைகளை அடுக்க ஆள் கிடைத்த நிம்மதியில் வாயையே மூடமாட்டாங்க! அப்படிப் பட்ட வரிடம் ஒரு பொறுமைசாலியான நீ கிடைக்கவும்.... தன் உணர்ச்சிகளை... தன்னுள் அடைத்துக் கொண்டிருந்த துக்கங்களை உன்னிடம் கொட்ட ஆரம்பிக்க... அது அவர்களுக்கு ஆகாமல் போக... சரி... சரி... நீ போ! போய் வெந்நீரில் நன்கு குளித்துவிட்டு... சூடா சாப்பிட்டு விட்டு படு! இரவு முழுக்க பொட்டு தூக்கமும் இல்லாமல் தவித்துவிட்டாய்! போ... நான் கோபமாய் பேசியதை மனதில் வைத்துக் கொள்ளாதே!''

கௌதம் பாசமாய் பேசவும்... சட்டென்று நெகிழ்ந்த நந்தினி விம்மி விட்டாள்.



பாத்ரூம் சென்று திரும்பிய ப்ரியா... இதனையெல்லாம் கண்ணுற்றவள்...

''அண்ணா... அவங்களை ஏன் திட்டறீங்க? பாவம்! அம்மாவா உடம்பை அலட்டிக் கொண்டால் அவர்கள் என்ன செய்வார்கள்?'' என்று ப்ரியா கௌதமைப் பார்த்து அதட்ட...

நந்தினி பயத்தில் வெளிறிய முகத்தோடு... அமிர் தத்தை திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டேச் சென் றாள்.

கிருபாகரனும், நரேந்திரனும் வந்த போது அமிர்தம் விழித்திருந்தாள்.

கணவனிடம் மட்டுமே பேசினாள். தன் உடல்நலம் பற்றிக் கூறினாள்.

நரேந்திரனை மறந்தும் கூட திரும்பிப் பார்க்கவில்லை. அவன் பக்கம் திரும்பாமல் முகத்தை கடுமையாக்கி வைத்துக் கொள்ள...

நரேந்திரன் மனம் நொந்து ஆபீஸ் புறப்பட்டான்.

அம்மாவின் அலட்சியத்தை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை! அமிர்தம் இந்த தண் டனையை விடுத்து... வேறு பெரிய தண்டனையைக் கொடுத்திருந்தாலும் தாங்கிக் கொண்டு இருப்பான்.

நரேந்திரனுக்கு வேலையில் மனம் பதியவில்லை. கண்கள் கலங்கி மேஜை மேல் கவிழ்ந்துக் கொண் டான்.

இங்கே அமிர்தமோ சதா 'நந்தினி... நந்தினி' என்று புலம்ப...

தூங்கிக் கொண்டிருந்த நந்தினியை எழுப்பி அழைத்து வந்தனர்.

நந்தினி இரவு உடையிலேயே... தூக்க கலக்கத்தில் வந்து நிற்க... அமிர்தம் அவளின் கையைப் பற்றி அருகில் அமர்த்திக் கொண்டாள்.

''ஸாரி அத்தை! ரியலி... வெரி வெரி ஸாரி அத்தை! உங்க உடம்பு திரும்பவும் கெட.... நானும் காரணமாயிட்டேன்! மனசுக்கு கஷ்டமா இருக்கு! இப்போ பரவாயில்லையா?'' நந்தினி அன்பாய் கேட்க...

அமிர்தத்தின் உள்ளே குழைந்து உருகியது.

''உண்டீங்களா, அத்தை? நல்லா உறங்கனீங்களா? அத்தை?''

''ம்...''

நந்தினியின் அழகு முகத்தையே பார்த்துக் கொண்டு தலையாட்டினாள், அமிர்தம்.

''ஆரஞ்சு சாறு பிழிஞ்சி தரவா, அத்தை?''

''வேணாம்மா! இப்போதான் நர்ஸ் பிழிந்து ஒரு பெரிய டம்ளர் கொடுத்தாள்! கஷ்டப்பட்டு குடித்து வைத்தேன்!''

''ப்ரியா கல்லூரிக்கு போயிட்டாங்களா?''

''அவள் போகமாட்டேன் என்று சொல்ல... கௌதம் தான் வற்புறுத்தி அனுப்பி வைத்திருக்கான்!''

''மாமாவும், சாரும் வந்தாங்களா?''

''வந்தாங்கம்மா! ஆனால் நரேந்திரனிடம் நான் பேசவேயில்லை!''

''என்னத்த நீங்க?'' என்று நந்தினி சலித்துக் கொள்ள....



''அவன் மேல் பயங்கர கோபம்! அது இனி என்றுமே குறையாது. தெரியுமா?''

''பாவம் செய்யறீங்க, அத்தை! நொந்து போய் இருப்பவரை மீண்டும் நோகடிக்கறீங்களே!''

''இல்லம்மா! இனி அவனிடம் பேசப் போறதில்லை! சொல் பேச்சி கேட்காத பிள்ளையிடம். என்ன பேச்சி? கொஞ்சல்? அதான் விட்டுட்டேன்!''

''சரி உடம்பை அலட்டிக்காதீங்க! கண்டதையும் போட்டு குழப்பிக்காதீங்க, அத்தை! உடம்பு மீண்டும் கெட்டுடும்!''

''உன் வாயில்தான் எத்தனை இயல்பாய் அத்தையும், மாமாவும் வருது! நீ இப்படி அழைப்பது ரொம்ப இனிமையா இருக்கும்மா! என் கணவரை எத்தனை இயல்பாய் மாமா என்றாய். நான் அதை ரசிச்சேன், நந்தினி!''

''இத்தனை பாசமான உங்களோடு வாழ... உங்கள் மருமகளுக்கு கொடுத்து வைக்கலையே, அத்தை! சரி அந்த பேச்சு வேண்டாம்! நீங்க ரெஸ்ட் எடுத்துகிறீங்களா?''

''அவனைப் பற்றி உன்னிடம் சொல்லலாம் என்று நினைச்சேன், நந்தினிம்மா!''

நந்தினி பயந்து விட்டாள்.

''வேண்டாம்... வேண்டாம், அத்தை! நான் எங்கேயும் போயிடமாட்டேன்! உடம்பு நல்லாகட்டும்! அப்புறமா நானே கேட்கிறேன்! சொல்லுங்க! இப்போ வேண்டாம்! எனக்கு அசதியா இருக்கு! போய் படுக்கட்டும்மா, அத்தை?'' என்று நந்தினி கெஞ்சலோடு கேட்கவும்...

அமிர்தம்... நந்தினியின் பாசத்தில் பனியாய் உருகி... சட்டென்று தலையாட்டினாள்.

நாலைந்து நாட்களில் அமிர்தம் குணமடைய... கௌதம் "நாளை வீட்டிற்கு போகலாம்" என்று சொல்லி விட்டான்.

இன்னமும் நரேந்திரனை நந்தினி பார்க்கவில்லை!

அவன் வரும்போது இவள் நைட்டூட்டி முடிந்து போய்விடுவாள். அவனைப் பார்க்கவில்லையென்றாலும்... இவள் மனதில் அவன் உயர்ந்து நின்றான்.

அன்று இரவு...

"அத்தை என்னை விட்டு நாளை உங்கள் வீட்டிற்கு சென்று விடுவீர்கள்! என் அறுவையிலிருந்து நாளையிலிருந்து தப்பிக்கப் போகிறீர்கள்! சரிதானே?"

"நந்தினி... என்னம்மா நீ இப்படி சொல்றே? உனது அன்பும், பாசமும் என்னை உருக்கிடிச்சி! என் மனதிற்கு இதத்தை தந்துள்ளது!

"எனக்கு சாரைப் பற்றியும்... அவரின் கடந்த காலத்தையும் சொல்வதாய் சொன்னீங்களே!"

நந்தினி அக்கறையாய் கேட்க...

"சொல்றேன், நந்தினி" என்ற அமிர்தம் அந்த சோகச் சுவடியை ஏடு திருப்பிச் சொல்லத் தொடங்கினாள்.

நரேந்திரன் வர்த்தகம் பற்றிய படிப்பை சென்னையில் படித்துக் கொண்டிருந்தான்.

படிப்பை தவிர... சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை எனப் படிக்கும் பழக்கம் பத்தாம் வகுப்பு முடித்ததுமே வந்துவிட்டது. இடைவிடாமல் படித்ததில்...



அவனுக்கும் அதையெல்லாம் எழுதும் எண்ணம் ஏற்பட்டது.

அவனின் எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்து சில சிறுகதைகளும்... கவிதைகளும்... கட்டுரைகளும் எழுதி பிரபலமான பத்திரிகைகளுக்கு அனுப்ப...

அது தேர்வாகி பிரசுரமும் ஆக... அவனுக்கு ஒரு பிடிப்பும்..... ஆர்வமும்... ரசனையும் எழுத்தின் மேல் ஏற்பட்டு விட்டது.

பாரதிதாசன் பிறந்த நாளுக்காக... ஒரு பிரபலமான வார இதழ்.... 'விதவைகளுக்கு மறுமணம் தேவை' என்ற கருத்தை வலியுறுத்தி... பாரதிதாசனின் வரிகளான...

"வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள், உலாவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?"

இதை மையமாகக் கொண்டு சிறுகதை எழுதச் சொன்னார்கள்.

பரிசுத் தொகை பத்தாயிரம் என்று அறிவித்து இருந்தது.

நரேந்திரன் அந்த போட்டிக்கு ஒரு சிறுகதையை எழுதி அனுப்ப... அவனுக்கு முதல் பரிசு கிடைத்தது.

நரேந்திரன் மகிழ்ந்துப் போனான்.

அமிர்தம் ரொம்பவும் பூரித்து மகனை மேலும் தூண்ட....

நாவல் எழுதும் முயற்சியில் ஈடுபட்டான்.

அந்த முயற்சியும் வெற்றி பெற்றது.

நரேந்திரன் தனது பெயரில் எழுதாமல்... தனது ப்ரியமான தாயின் பெயரான அமிர்தம் என்ற பெயரை 'அமிர்தா' என்று மாற்றி புனைப்பெயரில் எழுதினான்.

மூன்றாம் ஆண்டு கல்லூரி படிப்பு படிக்கும் போது... தமிழக அரசு வைத்த நாவல் போட்டியில் பங்கு கொண்டான். அதிலும் வெற்றி பெற்று 'சிறந்த நாவலாசிரியர்' என்ற பெயரைத் தட்டிச் சென்றான்.

அதன் பின்னர் 'அமிர்தா' என்றால் அத்தனை கதைப் படிக்கும் வாசகர்களுக்கும் தெரிந்தது.

அவனின் எழுத்தில் கிறங்கிப் போனவர்கள் ஏராளம்! அவனின் எழுத்துக்கு அடிமையானவர்கள் நிறைய பேர்!

ஆனாலும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பாததால்... தன்னுடைய போட்டோவை பத்திரிகைகளில் போட அவன் அனுமதித்ததில்லை.

சமீபமாய் அவனின் நாவல்களை வாசித்த வாசகிகளில் ஒருத்திதான் கிருத்திகா.

அவன் எழுத்துக்களில் தன் மனதைப் பறிக்கொடுத்த அவள் அமிர்தாவோடு பேச ஆசை கொண்டாள்.

பத்திரிகை ஆபீஸிற்கு போன் செய்து... அவனின் செல்போன் நெம்பரை வாங்கினாள்.

அடுத்த நாள் அவள் துணிவோடு போன செய்தாள்.

''ஹலோ...'' என்று ஆண்குரல் கேட்க... திகைத்தாள்.

''ஹலோ சார்... நான் அமிர்தாவிடம் பேச வேண்டும். அந்த பெண்மணியின் எழுத்துக்களில் சமீபமாய் மயங்கி... மனதை பறிகொடுத்த லட்சோப லட்சம் வாசகி



யர்களில் நானும் ஒருத்தி! ப்ளீஸ் கொஞ்சம் அமிர்தா மேடத்திடம் போனைக் கொடுக்க முடியுமா?''

எதிர்முனையில் இருந்த நரேந்திரனுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. ஆனால் அதனை அடக்கி...

''நான்தான் அமிர்தா!'' என்றான்.

''என்ன சார் விளையாடறீங்களா?'' எதிர் முனையில் கிருத்திகா எரிச்சலானாள்.

''கொடுங்க சார்... அமிர்தா மேடத்திடம்!''

''பெண்ணே... நான்தான் அமிர்தா!'' என்று நரேந்திரன் கடகடவென சிரிக்க...

''என் தவிப்பு, ஏக்கம், ப்ரியம் உங்களுக்கு சிரிப்பா இருக்கா? விளையாடாதீங்க சார்! ப்ளீஸ்... என்னைப் புரிஞ்சிக்கங்க!''

கிருத்திகா எதிர்முனையில் அழாதக் குறையாய் கெஞ்ச...

அவனும் சீரியஸானான்.

''பெண்ணே... என் பெயர் நரேந்திரன். நான் என் அம்மாவின் பெயரைப் புனைப் பெயராய் கொண்டு எழுதுகிறேன்! விளக்கம் போதுமா?''

''நிஜமா...? அமிர்தா என்ற பெயரில் எழுதுவது ஒரு ஆணா? என்னால் நம்ப முடியவில்லையே! என்னை மன்னித்துவிடுங்கள் சார்! யாரோ பெண்தான் இந்த அளவு உருகி உருகி... உள்ளத்தை தொடும் அளவு எழுதுகிறார்கள் என்று நினைத்துவிட்டேன்! மீண்டும் தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும்!...''

''உங்கள் எழுத்துக்கள் எனக்கு ரொம்பவே பிடித்திருக்கிறது.''

''அப்படியா? ரொம்ப நன்றிம்மா!''

''உங்களுடைய கருத்தும்... செய்தியும்... உள்ளத்தை மயிலிறகு கொண்டு வருடும் நடையம்சமும்... நளினமாய், கதையம்சம் குறையாமல் கொண்டு போகும் பாங்கு... அத்தியாயத்துக்கு அத்தியாயம் விறுவிறுப்பு மேலோங்கி... என்று அத்தனையும் ரொம்ப பிடித்திருக்கிறது, சார்!''

''என் எழுத்துக்களை எப்போதிருந்து வாசிக்கறீங்க?''

''இப்போதான்... சமீபமாய்! நீங்க எத்தனை வருடங்களாய் எழுதுகிறீர்கள்?''

''கிட்டத்தட்ட மூன்று வருடங்களாய்!''

''தங்களிடம் பேசியதில் ரொம்பவே ஆனந்தம், சார்! தேங்க்யூ சார்! அடுத்த நாவல் எப்போது வருகிறது?''

''விரைவில்!''

''படித்துவிட்டு விமர்சிக்கிறேன், சார்! நன்றி, சார்!'' என்று கிருத்திகா வைத்து விட்டாள்.

அதன் பிறகுதான் அவளுக்கு இதெல்லாம் தோன்றியது.

'நீங்கள் இளம் வயதா?'

'என்ன செய்கிறீர்கள்?'

'எந்த ஊர்?'

சரி அடுத்த முறை போன் செய்யும் போது கேட்டுக் கொள்ளலாம் என்று கேள்விகளைத் தொடுத்த மனதிற்கு சமாதானம் கூறி அடக்கி வைத்தாள்.



அவன் குரலின் கம்பீரம் இரவெல்லாம் காதில் ஒலித்துக் கொண்டு... அவளின் தூக்கத்தை எங்கேயோ கொண்டு போய் ஒளித்து வைத்து... வேடிக்கைக் காட்டியது.

மறுநாள்...

கல்லூரிகளுக்கு இடையிலான பைனல் கிரிக்கெட் மேட்ச்! அதுவும் கிருத்திகா பயின்ற கல்லூரியில் நடக்கிறது.

கிரிக்கெட் என்றால் கிருத்திகாவிற்கு உயிர்!

தன்னுடைய கல்லூரியில் மேட்ச் நடைபெறுவதில் கிருத்திகாவிற்கு நிரம்ப சந்தோசம்!

எல்லா மாணவர்களும் மைதானத்தில் கூடி... போட்டியை காண... ஆவலுடன், ஆரவாரத்துடன் இருக்க... இவளும் தோழிகளோடு அமர்ந்திருந்தாள்.

சென்னையில் உள்ள பிரபலமான கல்லூரி அணியும்... மதுரையிலிருந்து வந்த கல்லூரி அணியும் முதலில் மோத...

சென்னைக் கல்லூரியின் கேப்டன் சிக்ஸரும்... போருமாய் விலாசித் தள்ள... பலத்த கைதட்டல்தான்! கடைசிவரை அவுட் ஆகாமல் நின்று ஆடிய அழகிய கேப்டனுக்காக கைத்தட்டினாள்... விசிலடித்தாள்... ஆடினாள்... கிருத்திகா.

''நரேந்திரன்... நரேந்திரன்...'' என்று கூட்டம் குரல் கொடுக்க... அவளும் சந்தோச ஆர்ப்பரிப்புடன் குரல் கொடுத்தாள்.

''ஏய் கிருத்திகா... கேப்டன் நரேந்திரனைப் பார்த்தாயா? எவ்வளவு அழகு? எத்தனை கம்பீரம்? படிப்பிலும் கெட்டி!

விளையாட்டிலும் அசத்தல்! அப்புறம் நாவலும் எழுதுவார்டி! இன்றைக்கு தமிழ்நாட்டுல இவருக்குன்னு லட்சோப லட்சம் வாசகர்கள் இவர் கதைகள், நாவல்கள் வராதான்னு காத்திட்டு இருக்காங்கடி!''

கிருத்திகாவிடம் தோழி சொல்ல ஆச்சரியமானாள்.

''அப்படி ஒரு பெயரில்... எந்த ரைட்டரையும் கேள்வி பட்டதில்லையே!''

''அவர் பேர்ல எழுதலை, கிருத்திகா!''

''பின்னே?''

''அமிர்தாங்கிற புனைப்பெயரில் எழுதறார்டி!''

''ஐய்யோ... அவரா? அவராடி இவர்? என்னடி இது சர்ப்ரைஸ்! நிஜமாகவா? பொய் சொல்லலையே! நான் நேற்றுதான் அவரிடம் போன் பண்ணிப் பேசினேன், தெரியுமா?''

''இந்த ரீல் எல்லாம் வேண்டாம், கிருத்தி!''

''ஐய்யோ நம்பு, திவ்யா! நிஜம் திவ்யா! பத்திரிகை ஆபீஸ்க்கு போன் செய்து அவரின் செல் நெம்பரை வாங்கி பேசினேன்!''

திவ்யா நம்பாமல் கிருத்திகாவைப் பார்க்க...

''உன் மேல் ஆணை, திவ்யா! ஆமாம்டி! உருகி உருகி... மருகி மருகி... காதலையும், கல்யாணத்தையும், குடும்பத்தைப் பற்றியும், பெண் சுதந்திரம் பற்றியும், ஆணாதிக்கம் பற்றியும் எழுதுவது இவ்வளவு சின்ன வயதுகாரராடி?''

இன்னும் பதினைந்து ஓவர் பாக்கியிருக்க... நரேந்திரன் அணி வெற்றி பெற்று... அவன் மட்டையைத் தூக்கி



வெற்றியை மகிழ்ச்சியோடு ரசிகர்களிடம் பங்கிட்டு சந்தோசித்து.... ஆடுகளம் விட்டு ஒதுங்கி பார்வையாளர்கள் பக்கம் வர...

பெரிய கூட்டமே அவனை மொய்த்துக் கொண்டது.

எல்லோரும் ஆட்டோகிராப் நோட்டை நீட்ட... அவன் புன்னகை யோடே போட்டு நீட்டினான்.

மதியம் உணவு உண்ணக் கூட கிருத்திகா செல்லவில்லை.

வெயில் குறைந்த மாலை நான்கு மணிக்கு மீண்டும் நரேந்திரன் அணியும்... திருச்சி அணியும் மோதின.

திருச்சி அணி டாஸ் வென்று முதலில் பேட் செய்தது. சொற்ப ரன்களில் ஒவ்வொருவராய் அவுட் ஆகிவிட்டனர். குறைந்த ரன் என்பதால் நரேந்திரன் அணி சந்தோசமாய் பேட்டிங் செய்தது.

மீண்டும் நரேந்திரன் சிக்ஸும்... போரும் விலாசித் தள்ளி... இருபத்தைந்து ஓவரில் வெற்றி வாகைச் சூடினர், சென்னை அணி!

கோப்பையை கைப்பற்றி... ஹாஸ்டலுக்கு திரும்ப எத்தனித்தபோது... கூட்டம் முண்டியடித்தது.

ஆண் ரசிகர்களை விட பெண் ரசிகர்கள் தான் ஏராளம்!

நரேந்திரனின் ஆட்டத்திற்கும்... அழகிற்கும்... ஆண்மைக்கும் மயங்கிய பெண்கள் நோட்டையும் பேப்பரையும் நீட்டியது.

ஒருத்தி வெட்கம் கெட்டு... சோலியின் ஜிப்பை இறக்கி முதுகைக் காட்டி சிரிக்க... நரேந்திரன் சிரித்துக்

கொண்டே "இது ரொம்ப ஓவர் சிஸ்டர்!" என்று கூறி நகர்ந்தான்.

கிருத்திகா கூட்டத்தில் மூழ்கி அருகில் சென்று விட்டாள்.

"நான்... நான் கிருத்திகா?"

"அப்படியா? நாம் இதுவரை சந்தித்ததில்லையே!"

"ஆனால் பேசி இருக்கோம், நரேந்திரன்!"

"எப்போ...? எங்கே...?"

நரேந்திரன் ஆர்வமாய் அவளின் அழகு முகத்தைப் பார்த்துக் கேட்டான்.

"நேற்றுதான் சார்! உங்களைப் பெண் என்று ஏமாந்தேன்னே... நினைவு வருகிறதா?"

"ஓ... அது நீங்கதானா? குரலே குயிலின் குரலாய் இனிமை! அதைவிட உங்கள் தாமரை முகம்தான்... எத்தனை அழகு! ரியலி... தேவதையை ஒத்த அழகி!" அவன் தனது எழுத்தாளருக்குரிய பாணியில் பாராட்ட...

கிருத்திகா... மான் விழிகள் மருள நோக்கினாள். கண்ணோடு கண் கலந்து... கண்களின் வழியாய் இருவரும்... அவன் இதயத்தில் அவளும்... அவள் இதயத்தில் அவனுமாய் பயணித்து... உள் புகுந்து... உறுதியான சிம்மாசனத்தில் ஏறி... அழுத்தமாய் அமர்ந்து கொண்டனர்.

நரேந்திரன் தன்னிலை நினைத்து மந்தகாசமாய் புன்னகைத்தான்.

இனி இதுபோல் புன்னகைக்கவே போவதில்லை என்று அறியாமல்!






அதன் பிறகு...

அந்த கிருத்திகா அவனைத் தூங்க விடாமல் இம்சித்தாள்.

கனவுகளில் வந்து கண்சிமிட்டி புன்னகைத்தாள்.

கற்பனையில் காதல் பேசினாள்.

காகிதத்தில் கவிதைகளாய் கால் முளைத்து நின்றாள்.

அவன் நினைவுத்தடத்தில் அங்கும் இங்கும் ஓடி... அழுத்த கால்தடம் பதித்தாள்.

கண்ணைத் திறந்து இருந்தாலும்... கண்ணை மூடியிருந்தாலும்... அவளின் அழகு வதனமே கண்களில் நின்று கண்ணாமூச்சி ஆடியது.

இதே நிலைதான்.... கிருத்திகாவுடையதும்!

மண்டையைப் பிய்த்துக் கொண்டு... நான்கு நாட்களில்... நரேந்திரனின் கல்லூரி வாசலில் வந்து நின்று விட்டாள்.

கல்லூரி விட்டதும் வெளியே வந்த மாணவர்களில் கண்களால் தேடி... களைத்து... எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் வந்தவளின் மனம் கூம்பிப் போய் விட்டது.

நரேந்திரனோ சீக்கிரமே கிளம்பிப் போய்... அவள் கல்லூரி வாசலில்... வழிமேல் விழி வைத்து... காத்திருந்து ஏமாந்துப் போனான்.

இருவருக்கும் பரிசாய் கிடைத்தது, ஏமாற்றமே!

மறுநாள் காலையிலேயே அவன் கல்லூரி வாசலில் நின்று விட்டாள், கிருத்திகா.

நரேந்திரனுக்கோ அவளைக் கண்டவுடன்... இதயத்தில் பூந்தென்றல் மோதிய கணக்காய் சிலிர்த்துப் போனான்.

இருவரும் ஒருவரை ஒருவர் கண்களால் தழுவிக் கொண்டனர். ஆசை தீர அழகுகளை அள்ளிப் பருகிக் கொண்டனர். இமைக்க மறந்து ஒருவரை ஒருவர் கண்களில் நிரப்பிக் கொண்டனர்.

இருவரிடையே பேசாத மௌனம் நிலவினாலும்...

கண்களின் வழியாய் ஆயிரம் கேள்விகளை, பதில்களைப் பரிமாறிக் கொண்டனர்.

நெடுநேரம் நீடித்த மௌனம் கலைந்து... இருவரும் கை கோர்த்து... அருகில் உள்ள பூங்காவிற்குச் சென்றனர், அமர்ந்தனர்.

''உங்களைத் தேடி... நேற்று உங்கள் கல்லூரிக்கு வந்தேன்! உங்களைக் காணாமல் கண்கள் சோர்ந்து திரும்பிப் போனேன்! நீங்க எங்கே போனீர்கள்?''

கிருத்திகா வெண் பற்கள் பளிச்சிட அழகாய் புன்னகைக்க...

''நான் உன்னைத் தேடி... உனது கல்லூரிக்கு சென்றிருந்தேன்!''



''நிஜம்தானா...?'' அவள் கண்களில் காதலோடு கேட்க...

''இதிலெல்லாம் பொய் சொல்வாங்களா?''

''பின்னே எதில் பொய் சொல்வீர்கள்?''

''உதாரணமா... நீ அழகா இருக்க! அம்சமா இருக்க! உன்னைப் போல் பேரழகியை இதுநாள்வரைக் கண்டதில்லை என்று சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் வரும் போது... சொல்லித்தானே ஆகணும்!'' அவன் குறும்பாய் கண்சிமிட்டி சிரிக்க...

''ஏய்... ஏய்... உங்களை... எழுத்தாளர் நரேந்திரனுக்கும்... கல்லூரி மாணவர் நரேந்திரனுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கும் போல?'' என்று சொல்லிவிட்டு சிரித்தாள்.

''என்ன படிக்கறே?''

''பி.எஸ்ஸி. மேத்ஸ்!''

''எந்த ஊர்...?''

''திருவண்ணாமலை! எங்க ஊருக்கு வந்திருக்கீங்களா? அருணாச்சல ஈஸ்வரர் ஆலயம், ரமணர் ஆஸ்ரமம், சேஷாத்திரி ஐயா ஆஸ்ரமம், யோகி ராம்சுரத்குமார் ஆஸ்ரமம், பௌர்ணமியில் கிரிவலம்ன்னு எங்க ஊர் ரொம்ப பிரபலம் தெரியுமா?''

''ஒரே ஒருமுறை உங்க ஊர் கோவிலுக்கு வந்திருக்கேன்! கோவிலும், நான்கு கோபுரங்களும் பிரம்மாண்டம், கிருத்திகா! கோவிலுக்குள் நுழைந்ததுமே நம் துக்கமெல்லாம் பொசுக்கப்பட்டாற்போல உணர்வு... நம் மனபாரமெல்லாம் வழிச்சி எறிந்தாற்போல ஒரு இலேசான

தன்மை... கோவிலை விட்டு வெளியேறவே ம
மில்லை. அங்கே வீடு எங்கே?''

''கோவில் வீதியில்தான் இருக்கு. அப்பா சின்ன
துணிக்கடை வச்சிருக்கார். ஒரு அண்ணா இருக்கா
அமெரிக்காவுல கம்ப்யூட்டர் இன்ஜினியர். நீங்க எந்
ஊர்?''

''கொடைக்கானல்!''

''நான் இதுவரைக்கும் வந்ததேயில்லை!'' கவலையா
கூற...

''அதான் நிரந்தரமா வரப்போறீயே! அப்புறமென்
கவலை?'' அவன் சிரிக்க... அந்த அழகில் கிருத்தி
கிறங்கிப் போனாள்.

''அப்பா, அம்மா...''

''அப்பா காபி, ரப்பர் தோட்டம்ன்னு பார்த்துக்கறா
அம்மா ஹவுஸ் ஒய்ப்தான்! தங்கை ப்ரியா இருக்கா!''

''இத்தனை வசதியுள்ளவர் நீங்க! என்னை உங்
வீட்டில் ஏற்றுக் கொள்வார்களா?''

''என் விருப்பத்திற்கு குறுக்கே நிற்க மாட்டார்கள்!
அவள் கைப்பற்றி முத்தமிட்டான். அந்த முத்தம் தந்
சுகத்தில் பயமெல்லாம் அகன்று அவன் பரந்த நெஞ்சி
நிம்மதியாய் சாய்ந்துக் கொண்டாள் கிருத்திகா.

இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டனர்.

அவர்களிடையே வலுவான பிணைப்புடன் காத
கட்டிடம் ஓங்கி, உயர்ந்து, வளர்ந்தது!

இதயங்கள் இடம் மாறி... ஒன்றோடொன்று உவ
யாய் பின்னி பிணைந்துக் கொண்டன!



ஒருநாள்... அவளுக்காக வழக்கமாய் சந்திக்கும் பூங்காவில் காத்திருந்தான், நரேந்திரன்.

ரொம்ப நேரம் கழித்து வந்தவள்....

''ஸாரி... ஸாரிங்க, நரேந்திரன்! கடைசி வருடமல்லவா... அந்த புரபசர்... ஸ்பெஷல் கிளாஸ் வைத்து அறுஅறுன்னு அறுத்திட்டு... இப்போத்தான் விட்டார்.''

கிருத்திகா மன்னிப்பை கோரியவாறே அவனருகில் போய் ஒட்டி உட்கார... அவன் கோபம் மிகுதியில் தள்ளி அமர்ந்தான். மீண்டும் ஒட்டி உட்கார வந்தவளை தள்ளி விட்டான்.

''என் கண்ணனுக்கு.... என் மேல் கோபமா?''

''ஆமாம்ன்னு சொன்னால் என்ன செய்வே?'' அவன் முறைப்போடு கேட்க...

''என்னால் 'ஸாரிதான்' கேட்க முடியும்!''

''உன் 'ஸாரி' யாருக்கு வேண்டும்?''

''பின்னே என்ன வேண்டும்? சொன்னால் கொடுப்பேனே?''

''அப்புறம் மாறமாட்டாயே!'' தலையாட்டி கேட்க...

''ஏதாவது வானம், பூமி, நிலா, சூரியன் வேணும்ன்னு கேட்டு வைக்காதீங்க! என்னால் என்ன கொடுக்க முடியுமோ அதை மட்டும் கேளுங்க, நரேன்! ப்ளீஸ்...'' அவள் அந்த சின்ன முகம் சுருக்கி கேட்க...

''என்னை இறுக்கி... கட்டி... உன் பட்டு இதழால்... எனக்கு தித்திக்க தித்திக்க... திகட்ட திகட்ட... என் கன்னம், உதடு, நெற்றி என்று... நான் போதும்ன்னு சொல்லும் வரை நீ என்னை முத்தமிடணும்! செய்

வாயா, கிருத்தி?'' நரேந்திரன் தாபம் மிகுதியோடு கேட்க...

''ஐய்யே... ஆசையைப் பார்! நான் மாட்டேம்பா!'' முகம் சுளித்து சொல்ல...

''இது உன்னால் முடியக்கூடிய செயல்தானே? உன் ஒப்பந்தத்தில் இருந்து மாறலாமா? பின்வாங்கலாமா?''

''எல்லாம் நம் திருமணத்திற்கு பின்தான்!''

சட்டென்று சொன்னாள் கிருத்திகா.

''எல்லா காதலிகளும் சொல்லும்.... ஒரே நழுவலான பதில்! செயல்! நீ என்னை முத்தமிடுகிறாயா? அல்லது நான்...'' என்று முடிக்காமல் இழுக்க...

''நான் மாட்டேன்! அதுபோல உங்களையும் அனுமதிக்க மாட்டேன்!''

''போடி கிறுக்கி! காதலில் கட்டிக் கொள்வதும்... முத்தமிடுவதும்... ஏன் வரம்பு மீறி நடந்து கொள்வதும் சகஜம்தானே!'' அவன் சாதாரணமாய் சொல்ல...

''வரம்பு மீறி... வயிற்றை நிரப்பிக் கொண்டு... எத்தனைப் பெண்களின் வாழ்க்கை கேள்விக்குறியாய் போய் இருக்கிறது என்று பார்த்தறியாதவளா? படித்து தெரிந்து கொள்ளாதவளா?''

''நான் அப்படிபட்டவனா?''

''கை மூடியிருந்தால்தான் அதனுள் என்ன இருக்கிறதோ என்று அறிய ஆர்வமும், ஆசையும் வரும்! அதுவே திறந்து இருந்தால் 'ப்பூ இவ்வளவுதானா...?' என்று அலட்சியம் வரும் அல்லவா? அதுபோலத்தான்... என்னைத் தொடவிடாமல் தூரே நிறுத்தியதும்... பெண்



மையின் சுகத்தையும், தீண்டலையும் அறியணும்ன்னு ஆர்வம் இருக்கில்லே?''

''இது என்ன தியரி?''

''தியரி இல்லே... நிஜம்! உங்களை கட்டிகிட்டாலும்... தொட்டுகிட்டாலும்... உங்களுக்கு என்னை அடையணும்ங்கிற வெறி குறைந்து போய்விடும்! அதுவே குறையாமல் இருக்கணும்ன்னால்... தூரம் வச்சிப் பழகணும்!''

''எனக்கு இதிலெல்லாம் நம்பிக்கையில்லை! படிப்பு முடிந்ததும் நம் திருமணம் நடக்கும்! என் வீட்டில் ஓ.கே. சொல்லிட்டாங்க! இன்னும் உங்க வீட்டு அனுமதி மட்டும்தான் பாக்கி!''

''என் வீட்டிலும் அப்பா மறுக்கமாட்டார்.''

''இப்படி இருக்க ஏன் என்னை தள்ளியே நிறுத்தறே? இதுநாள் வரை தள்ளி நின்றவள்... இன்று ஆசையாய் வந்து ஒட்டிக் கொள்ள காரணம்?''

''என் மேல் உள்ள கோபத்தை.... அதுவும் பயங்கரமான கோபத்தை குறைக்க... அருகில் வந்து அமர்ந்தேன்! அது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்போ புரிஞ்சிட்டேன்!''

''இதுநாள்வரை ஒரு சின்ன முத்தம் கொடுத்திருப்பாயா? சொல்லு? சொல்லுடி, பைத்தியமே? ஏய் பிசாசே... எனக்கு உன் கழுத்தை நெரித்து கொல்லணும் போல வெறி வருது! பாவி சிரிக்கறீயே! என் கோலம்... என் ஆசை... என் அபரிமிதமான அன்பு... எல்லாம் உனக்கு சிரிப்பை தருதா?'' அவன் கத்த...

அவள் மலர்ந்து சிரித்தாள்.

''உன்னை காதலித்ததற்கு பதிலாய் உன் தோழி சித்ராவைக் காதலித்து இருக்கலாம்! இன்னேரம் அவளாய் இருந்தால் என்னைச் சொர்க்கத்தில் மூழ்கடித்து இருப் பாள். உன்னை நேசிச்சி... ச்சே...'' அவன் சீண்ட...

அவளின் முகம் ஆத்திரத்தில் சிவந்தது.

''உங்களுக்கு என்ன வேண்டும்?'' உதடு துடிக்கக் கேட்டாள்.

''ஒரே ஒரு சின்ன முத்தம்!''

''சரி...'' என்றவள் அவனின் கைப்பற்றி... புறங் கையில் முத்தமிட்டாள்.

''இப்படி ஒரு முத்தம் வேண்டும்ன்னு யார் அழுதா?'' உதட்டை ஏளனமாய் வளைத்து கூற...

''பின்னே... எப்படி?''

''இங்கே... இங்கே... அழுத்தமாய்... ஆழமாய்... ஒரு 'இச்' வேண்டும், கண்மணி!''

அவன் உதட்டைத் தொட்டு காட்டி கேட்க...

''ம்கூம்... நான் மாட்டேம்பா!'' என்று அவள் சிணுங்கி, வெட்கப்பட...

''எனக்கு வேண்டும்! இப்போ... இங்கே... இந்த நிமிடமே!'' அவன் அடம்பிடிக்க...

''மாட்டேன்!'' அவள் கட்டாயமாய் மறுக்க...

''நான் வரேன்!'' என்று அவன் எழ....

''ஏய் நரேன்... என்னப்பா நீங்க? ஏம்பா இப்படி ஒரு அடம்?'' அவன் கைப்பற்றி தடுத்தி...

அவன் மலர் முகத்தைத் தாங்கி... அவன் எதிர்பாராத வேளையில்... அவன் கன்னம், நெற்றி, உதடு, நெஞ்சம்



என அழுத்தமாய்.. அன்போடு... வெறியோடு முத்த மிட்டு...

''போதுமா? போதுமாடா, ராட்சசா? பத்திச்சா? பத் தலையா?'' என்று ஆவேசமாய் கேட்டு... அணைத்து முத்தமிட்டு... அவனை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த...

அவனும் வெறியோடு அவள் முத்தத்திற்கு பதில் முத்தம் கொடுத்து... இன்ப அதிர்ச்சி கொடுக்க...

அங்கே சந்தோசத்திற்கு பஞ்சமில்லை.

படிப்பு முடிய... பெற்றோர்களின் ஆசியோடு அமோக மாய் திருமணம் நடந்தது.

தமிழ்நாட்டை விட்டு தாண்டாதவளை... தேனில வுக்கு 'ஸ்விட்சர்லாந்து' அழைத்துப் போனான்.

ஒருவார உல்லாசத்தில்... அவர்கள் அடித்த கொட் டத்தில் சந்தோசமே அவர்களைப் பார்த்து சந்தோசப்பட் டிருக்கும்!

கொடைக்கானலின் அடர்ந்த காடு, அருவி, நீர்வீழ்ச்சி என்று அலைந்து திரிந்து ஆனந்தம் கொண்டனர்.

அங்கே மகிழ்ச்சியும், ஆனந்தமும் தாண்டவமாட...

மூன்றாம் மாதம் தொடர் வாந்தி எடுக்க... கிருத்தி காவை ஒரு லேடி டாக்டரிடம் அழைத்துப் போனான், நரேந்திரன்.

''நீங்க அப்பாவாகப் போறீங்க!'' என்று அந்த டாக்டர் சொல்ல...

''ஹேய்...'' என்று கூச்சலிட்டு... அவளை அலாக்காக தூக்கி... டாக்டர் இருக்கிறாள் என்ற வெட்கமற்று, அணைத்துக் கொண்டான் நரேந்திரன்.

அடுத்த பத்தாம் நாள் கடும் சுரம் ஏற்பட... ஆஸ்பத் திரியில் அனுமதிக்கப்பட்டாள், கிருத்திகா.

பரிசோதனை செய்த டாக்டர்... அவளுக்கு 'மூளை காய்ச்சல்' என்றனர்.

வயிற்றில் குழந்தை வேறு!

எவ்வளவு சிகிச்சை அளித்தும்... கிருத்திகாவை காப் பாற்ற முடியவில்லை!

நரேந்திரன் கத்தினான்... கதறினான்... விழுந்து புரண் டான்.

'அழுது புரண்டாலும் மாண்டவர் மீண்டும் வரு வாரோ?' என்பதற்கு ஏற்ப... கிருத்திகா நரேந்திரனுக்கு பாவம் பார்த்து எழுந்து வரவே இல்லை.

அவளோடு... அவளின் உயிரில் கலந்து உருவான... அவன் வாரிசையும் கூட்டிப் போய்விட்டாள், பாவி!

மூன்றே மாதத்தில் முழுசாய் தாம்பத்தியத்தின் சுகத்தை அறியும் முன்னரே... அவனைச் சோகத்திலும், துக்கத்திலும், துயரத்திலும் ஆழ்த்திவிட்டுப் போய்விட் டாள், கிருத்திகா.

புயலும், பூகம்பமும் தாக்கிய கணக்காய் நொறுங்கிப் போய்விட்டான்.

அவன் இதயம் சில்லு சில்லாய் உடைந்து உருக் குலைந்துப் போனது.

உயிர் வரை ஊடுருவியவளை... இதயம் வரை இனித்த வளை... இழந்து, இருளில் தள்ளிய கணக்காய் உடைந் துப் போனான்.

அமிர்தம் சொல்லி முடித்து அழ... நந்தினியும் கண் கலங்கி நின்றாள்.



''அம்மா நந்தினி... இவனை வளைத்துப் போட நினைத்து... மயக்க முற்பட்டவர்களின் பட்டியலை சொல்லிக் கொண்டேப் போகலாம்! இவனிடம் உள்ள பணம் ஒருபுறம் போதையை அவர்களுக்கு தந்தாலும்... இவன் அழகு அவர்களை மயக்கியது! நரேந்திரன் எங்கே இருந்தாலும் தனித்தே தெரிவான். அத்தனை அழுத் தமும்.... கம்பீரமும்... ஆண்மையும்... அழகும் நிரம் பியவன், என் பிள்ளை!''

அமிர்தம் உடல் குலுங்க அழ... அந்த தாயை கட்டி யணைத்து... இதமாய் முதுகில் தட்டிக் கொடுத்தாள், நந்தினி.

''பெண்மையையும், பெண்ணின் சுகத்தையும் அறிந்து அனுபவித்து உணரும் முன்பே அத்தனையும் இறைவன் தட்டிப் பறித்து விட்டான். பசித்தவன் முன்பு வகைவகையான உணவைக் காட்டி... மண்ணிலே கொட்டிய கணக்காய் கடவுள் தண்டித்து விட்டான்...

''நரேந்திரன் இதுவரை அவன் அறிந்து யாருக்கும் சிறு துரோகம், துன்பம் கூட இழைத்ததில்லை!...''

''அன்பையும்... அழகையும், காதலையும், காமத் தையும் அனுபவிக்க வேண்டிய.... அழகான இளமைப் பருவத்தில் நரக வேதனையை அனுபவிக்கிறான். இருபத்தைந்து வயதிலிருந்து நாற்பது வயது வரை ஆண்களுக்கு பொற்காலம்!...''

''அழகு கூடுவதும்... ஆண்மை பெருகுவதும்... எதை யும் சாதிக்கும் அசாத்திய துணிச்சல் வருவதும்... சிலர் உயரே உயரே உச்சிக்குப் போவதும்... சிலர் அதள பாதாளத்தில் விழுவதும் இந்த வயதில்தான், நந்தினி!''

"சரி விடுங்க... விடுங்க, அத்தை!"

"கட்டிளம் காளையாய் மனைவியின் தோள் அணைத்து அனுபவிக்க வேண்டிய அனைத்து சுகங்களும் என் மகனுக்கு மட்டும் மறுக்கப்பட்டதேன்?"

"அத்தை உணர்ச்சி வசப்படாதீங்க!"

"கடவுள் செய்த சதியா...? அல்லது விதி செய்த சூழ்ச்சியா?"

"ரொம்ப உணர்ச்சி வசப்படுவது உங்கள் உடலுக்கு ஆகாது, அத்தை! உங்களுக்கு ஒன்று என்றால் கௌதம் அண்ணா என்னை விடவே மாட்டார். தெரியுமா?"

"அவனின் அத்தனை சந்தோசம், மகிழ்ச்சி, ஆனந்தம் என எல்லாவற்றையும் கரைத்து குடித்து விட்டு.... மரணம் என்ற மாயப் போர்வையில் மறைந்து விட்டாள், ஒருத்தி! மரணிக்காமலேயே இங்கே ஒருவன் மரண வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கிறான்!"

நந்தினி பெரும் சிரமப்பட்டு அமிர்தத்தின் அழுகையை நிறுத்தி... தூங்கச் செய்தாள்.

மறுநாள் அமிர்தம் கிளம்பிவிட்டாள்.

இவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் போல மனதெல்லாம் துடியாய் துடித்தது.

என்ன செய்வது?

இதுவரை அத்தானின் ஆண் இனத்தையே வெறுத்து... கல்யாண வாழ்க்கையே கூடாது என்று உறுதியோடு இருந்தவளை...

முதன் முதலில் ஒரு ஆண்மகன் அவளை அசைத்துப் பார்த்தான்.



நந்தினி நரேந்திரனை வியந்தாள். எத்தனை 'அபூர்வமான ஆண்' என்று அவனைத் தன் மனதின் உயரத்தில் வைத்து பூஜித்தாள்.

ராமனின் மறுபிறவியாய் அவன் அவளுக்கு தெரிந்தான்.

நந்தினி அவனை ஒருதலையாய் நேசிக்கவே ஆரம்பித்து விட்டாள்.

நரேந்திரன் அவள் உடலோடு கலந்து விட்ட உணர்வு!

நரேந்திரன் அவள் உயிரோடு கரைந்து விட்ட உணர்வு!

நந்தினியின் உயிர் குலுங்க... அவளைக் கேளாமலேயே நுழைந்து விட்டான், கள்வன்!

அவள் இதயம் பாகாய் உருகி... அவனோடு போய் ஒட்டிக் கொண்டது.

நேசம் அவள் நெஞ்சில் அலையலையாய் கரை புரண்டு ஓடியது!

தன் இதயம் கவர்ந்தவனுக்கு தன்னால் முடிந்ததைச் செய்ய வேண்டும்.

அவனிடம் இருந்து கல்யாணத்தையோ... காதலையோ... எதிர்பார்த்து செய்யக் கூடாது!

ஆனாலும் அந்தச் செயலால் அவனுக்கு மகிழ்ச்சி கிடைக்க வேண்டும். அந்த வீட்டு நபர்கள் மனம் குளிர வேண்டும்.

'என்ன செய்யலாம்?'

'எதைச் செய்யலாம்?'

'எப்படிச் செய்யலாம்?'

அவள் மூளையைப் போட்டு குழப்பிக் கொள்ள சட்டென்று அந்த புதிய எண்ணம் தோன்றியது.

'இப்படி செய்தால் என்ன?' என்று நினைத்தவளின் கண்ணில்... தளும்பி நின்ற கண்ணீர்.... இமைக்கரையை உடைத்துக் கொண்டு... ஆவேசமாய் கன்னமென்னும் ஆறில் துள்ளலோடும்... துடிப்போடும் ஓடிப் பாய்ந்தது.



'மரணம் வருவது உறுதி. ஆனால் இறப்பதற்கு முன் ஏதாவது ஒரு நன்மையைச் செய்தாக வேண்டும் என்ற மேலான லட்சியத்தை கொண்டிருங்கள். அந்த குறிக்கோளுக்காக அதை அடையும் முயற்சியில் இறப்பே வந்தாலும் கூட ஏற்றுக் கொள்ளுங்கள்.'

'எழுந்து நின்று போராடுங்கள். ஒரு செயலில் கால் வைத்த பிறகு ஒரு அடி கூட பின்வாங்கக் கூடாது. எது வந்தாலும் போராடி முடியுங்கள்.

-சுவாமி விவேகானந்தர்.

சுவாமி விவேகானந்தரின் இந்த கூற்று நந்தினிக்குப் பிடிக்கும். இதனை பலமுறை தினம் தினம் தன் மனதிற்குள் சொல்லிக் கொள்வாள்.

தற்போது அந்த கூற்றை செயல்படுத்தவும் போகிறாள். இப்படி ஒரு வாய்ப்பு இருக்கும் போது... அவள் அதை நழுவ விடப் போவதில்லை.



டாக்டர் கௌதமிடம் போய் தன் எண்ணத்தைச் சொன்னாள்.

கௌதமுக்கு பெரும் அதிர்ச்சி!

''என்னம்மா? என்ன சொல்கிறாய்? உனக்கு பைத்தியம் பிடிச்சிருக்கா? உனக்கென்று ஒரு எதிர்காலம் இருக்கு! அதை எண்ணிப் பாராமல்... என்ன காரியம் செய்யப் போகிறேன் என்று வந்து நிற்கிறாய்? ம்?'' என்று கோப மிகுதியில் அதட்டினான்.

''தீவிர யோசனைக்குப் பின்தான் உங்களிடம் வந்தேன், அண்ணா!''

''உன்னை மணக்க ஆசைப்பட்டு... உன்னையே நினைத்து... உயிர் வாழும் பார்த்தீபனுக்கு, என்ன செய்யப் போகிறாய்?''

''எனக்கு அவர் மேல் எந்த ஈர்ப்போ... ஈடுபாடோ இல்லை!''

''அதெல்லாம் உனக்கு வேண்டாம்! என் தங்கையாய் உன்னைப் பாவிக்கிறேன்! உன் எதிர்காலத்தை பாழ் பண்ணிட்டு... நீதான் வந்து நின்றால்... அதற்கு ஒத்துக் கொள்ள நான் என்ன முட்டாளா? அவன் பிரச்சனை அவனோட போகட்டும்! அவனுக்காக உன் எதிர்காலத்தை பாழ் பண்ணிக் கொள்ளாதே! அடுத்த வருடமே உனக்கும், டாக்டர் பார்த்தீபனுக்கும் திருமணம் செய்து வைக்கிறேன்!'' என்று கட்டாயமாய் கௌதம் சொல்லவும்... நந்தினி அவசரமாய் சொன்னாள்.

''எனக்கு திருமணமெல்லாம் வேண்டாம்!''

''பார்த்தீபன் உன்னை விரும்புகிறவன்! டாக்டர்! அவனை மணந்து கொள்ள பூர்வ ஜென்மத்தில் நீ ஏதோ

புண்ணியம் செய்திருக்கணும்! கிறுக்கி மாதிரி ஏதாவது உளறாதே! என்னிடம் சொன்னதுபோல தீபிகாவிடம் எதையாவது உளறி வைக்காதே! கண் மண் தெரியாமல் கோபம் வந்து 'காச்மூச்' என்று கத்துவாள். போ... போ... எனக்கு வேலையிருக்கு!"

"அண்ணா... மனைவி இருக்கவே என் அத்தான்... மச்சினியான... என் கைப்பிடித்து இழுக்க வருகிறான்! இப்படிப்பட்ட துஷ்டத்தனமான ஆண்களைப் பார்த்த எனக்கு... மனைவி இறந்தும் அவள் நினைவில் வாழும் நரேந்திரன் சாருக்கு என்னால் ஆன சின்ன உதவி! மறுக்காதீங்க! ப்ளீஸ் அண்ணா... அமிர்தம் அத்தையும் சந்தோசப்படுவாங்க!"

"மற்றவர்களின் சந்தோசத்தை விட... எனக்கு உனது சந்தோசம்தான் முக்கியம்!"

"நான் உங்களிடம் வந்த பிறகு ரொம்ப ரொம்ப சந்தோசமா இருக்கேன், தெரியுமாண்ணா?"

"இந்த வாழ்க்கையை சொல்லல, நந்தினி! நீ பார்த்தீபனைத் திருமணம் செய்து... புள்ளைகுட்டியோடு மகிழ்ச்சியாய் வாழும் வாழ்க்கையைச் சொல்கிறேன்!"

"அண்ணா... எனக்கு திருமணம் வேண்டாம்!"

"ஏன்? அப்போ பார்த்தீபனின் கனவு, ஆசை என்னாவது?"

"ஒருநாளும்... நான் அவரிடம்... அவருக்கு என் மீது ஆசை வரும்படி பேசியதே இல்லையேண்ணா!"

"சரி அவன் வேண்டாம்! வேறு உனக்கு பிடித்தவர்கள் யார் என்று சொல்லு? கேட்டுப் பார்க்கலாம்! டாக்டர்



மைக்கேல்... அல்லது எனது மச்சினன்... தீபிகாவின் தம்பி இஞ்ஜினியர் சங்கர்? இப்படி யார் மீது விருப்பம் இருந்தாலோ தயங்காமல் சொல்லலாம்! எத்தனை செலவானாலும் அவர்களையே மணமுடித்து வைக்க நான் தயார்."

"எனக்கு எதுவுமே... யாருமே வேண்டாம்! எனக்கு நரேந்திரன் சாருக்கும்... அந்த குடும்பத்துக்கும் உதவும் பாக்கியத்தை வரமாய் தாருங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்!"

நந்தினி தவிப்போடு சொல்லவும்...

"நான் யோசிக்கணும்!" என்று ஓரளவு கௌதம் இறங்கி வர...

"இல்ல நீங்க ஒத்துக்கணும்!"

"உனது முடிவைக் கொஞ்சம் பரிசீலனைப் பண்ணேன், நந்தினி!"

"எனது முடிவில் இருந்து ஒருபோதும் மாறவே மாட்டேன்."

"நரேந்திரன் இதற்கு ஒத்துக் கொள்ள வேண்டுமல்லவா?"

"ஒத்துக் கொள்வார்!" நந்தினி உறுதியோடு சொன்னாள்.

"மாட்டேன் என்றால்...?"

"நீங்கள் கட்டாயப்படுத்தி சம்மதிக்க வைக்க வேண்டும்!"

"நீ பிடிவாதக்காரி! மாறமாட்டாய்! பேசிப் பார்க்கிறேன்... அந்த மடையனிடம்!"

"வம்படியாய் அவரை இதற்கு ஒத்துக் கொள்ள வைக்க வேண்டும், அண்ணா!"

"உனக்கு ஏன் அவன் மீதும், அந்த குடும்பத்தின் மீது இவ்வளவு அக்கறை? ம்?"

'எல்லாம் காதல்... நேசம்... அன்புதான்!'

"என்ன நந்தினி... பேசாமல் அமைதியாகிவிட்டாய்?"

"அவர் எனது மனதில் உயர்ந்து நிற்கிறார், அண்ணா! ஒரு சலீமாய்... ஒரு ஷாஜகானாய்... ஒரு அம்பிகாபதி யாய்... ஒரு தேவதாஸாய்... என் மனதில் உயர்ந்து நிற்கிறார்! அவருக்கும், அன்பான அமிர்தம் அத்தைக்கும், ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றியது! அதன் விளைவால் விளைந்த எண்ணம்தான் இது! வேறு எந்த தவறான உறவை எதிர்பார்த்தோ... பணத்தை எதிர் பார்த்தோ... நான் இதை அவருக்கு செய்ய முன்வர வில்லை!" என்று நந்தினி கண்கள் பளபளக்க சொல்லி முடிக்க...

"உன்னை நினைத்தால் எனக்கு பெருமையா இருக்கு, நந்தினிம்மா!"

"இந்த செயலைச் செய்து முடித்துவிட்டு... இதை சொல்லலாமே, அண்ணா!"

"கண்டிப்பாடா... என் நண்பனின் சந்தோசம்... எனக்கும் ஆனந்தமே!"

அதன்பிறகு நந்தினியின் நச்சரிப்பால்.... நரேந்திரன் வரவழைக்கப்பட்டான்.

நந்தினி கூறிய அனைத்துமே கூற...

நரேந்திரன் அதிர்ச்சியோடும்... ஆனந்தத்தோடும் கௌதமின் வார்த்தைகளை செவிமடுத்துக் கேட்டு முடித்துவிட்டுச் சொன்னான்.



"இதெல்லாம் வேண்டாம், கௌதம்!"

"ஏன்?"

"என்ன வயது அவளுக்கு?"

"இருபத்தி இரண்டு முடிந்து... இருபத்தி மூன்று ஆரம்பம்!"

"பாவம் சின்னப் பெண்! வாழ வேண்டியவள்! புத்தி சொல்லி... எவனுக்காவது திருமணம் செய்து வை! இப்படி சொன்ன... நல்ல உள்ளம் படைத்த பெண்ணுக்கு... நானுமே உதவ காத்திருக்கிறேன்!"

நரேந்திரன் மறுத்தான்.

"அவள் பிடிவாதமாக இருக்கிறாள். எவ்வளவோ சொல்லிப் பார்த்துவிட்டேன்! நம்மகிட்ட வேலைப் பார்க்கிற ஒரு டாக்டரே இவளைக் கட்டிக்க ஆசைப்பட்டு முன் வருகிறான்! வேண்டாம் என்று மறுக்கிறாள்!"

"அவள் அப்படித்தான் சொல்லுவாள். சின்ன குழந் தைகள் மருந்து, கசப்பு மாத்திரை முழுங்க சந்தோசிக் குமா? நாம் அந்த மாத்திரைகளை தேனில் குழைத்து... பாலாடையில் ஊற்றி... வலுக்கட்டாயமாய் புகட்டுகிறோ மல்லவா... அதுபோல அவளுக்கு புத்தி கூறி... ஒரு எதிர்காலத்தை அமைத்து கொடு, கௌதம்!"

"நானும், தீபிகாவும் எவ்வளவோ எடுத்து சொல்லிப் பார்த்துட்டோம்!"

"என்ன செய்யலாம்?"

"இப்படி ஒரு நல்ல சான்ஸ் உனக்கு கிடைக்காது, நரேந்திரா!"

''பெண் எப்படி?''

''குணத்திலே தங்கம்! மாசுமறுவற்றவள்! கற்
உயிராய் மதிப்பவள்! ஒழுக்கத்தை உயிராய்ப் போற்
பவள்! ஒரு குறையுமே அவளிடம் கண்டதில்லை
அதிலும் நல்ல அழகியும் கூட!''

''யாருக்கு வேண்டும், முக அழ்கு? அழகு என்றா
என்னடா? அன்புதான் அழகு! பாசம்தான் அழகு! கள்
மில்லாத குணம்தான் அழகு! பிறருக்கு உதவும் நல்
மனம்தான் அழகு! எனக்கு உதவணும்னு நினைக்கிறா
பார் அதுவே அழகுதானே!''

''அப்போ ஒத்துக் கொள்ளேன்! அம்மாவும் சந்தோசி
பாள்!''

''எங்களுடைய சந்தோசத்திற்காக... அவளின் எதி
காலத்தை இருட்டாக்குவதா?''

''நந்தினி... உன் பிள்ளையைச் சுமக்கப் போவதை
வரமாய் நினைக்கிறாள்! அவள் கருவறையை உனக்
காணிக்கையாக்க... மனம் உவந்து வருகிறாள்! மறுக்காதே
நரேந்திரா! நிறைய தம்பதிகளுக்கு பிள்ளையில்லாம
போக... இந்த விஞ்ஞான வளர்ச்சிதான் கைக்கொடு
கிறது...''

''அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, ஜப்பான் போன்
நாடுகளில் உள்ள... குழந்தையில்லாத தம்பதியர் அ
வரும்... இந்திய வாடகைத்தாயை நாடி வருகிறார்க
அந்த நாட்டில் ஒரு வாடகைத் தாயைப் பிடித்து
அவளுக்கு கூலி கொடுத்து... அவள் வைத்திய செல
அனைத்தும் பார்த்து முடிப்பதற்கு இருபது, முப்ப
லட்சம் ஆகிறதென்றும்... இந்தியாவில் வாடகைத்தாயி



கருவறைக்கு குறைந்த கூலி என்பதாலும் இங்கே வருகிறார்கள்!...''

''அதுபோல எல்லாம் எங்கள் நந்தினி உன்னிடம் எதிர்பாராமல்... ஈர நெஞ்சத்தோடு உதவி செய்ய காத்திருக்கிறாள்! நீ பயன்படுத்திக் கொள்வதுதான் புத்திசாலித்தனம்!''

''இப்படி ஒரு ஆத்மா... ஜீவன் கூட உலகில் உண்டா, கௌதம்? எனக்கு பிரமிப்பா இருக்குடா! ஒரே குழப்பமா இருக்குடா!'' நரேந்திரன் சோகமான முகத்துடன் கூற...

''நீயும் மறுமணத்திற்கு உடன்படமாட்டாய்! உன் பெற்றோர்களோ... உன் வாரிசைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்! உனக்கு கல்யாணமாகாம லேயே... உனக்கொரு வாரிசு கிடைக்கிறது! 'குழந்தை' எத்தனை சந்தோசம் தெரியுமா? நிஜம், நரேந்திரா! நான் எத்தனை அசந்திருந்தாலும்... கஷ்டத்தில் இருந்தாலும்... என் பிள்ளைகள் ஓடி வந்து 'டாடி' என்று கட்டிக் கொள்ளும் போது... அத்தனையும் பனியாய் விலகிடும்! அனுபவித்தவன்... அனுபவசாலி சொல்கிறேன்! வேண டாம்னு மறுக்காதே, நரேந்திரா! ப்ளீஸ்...''

''எனக்கு இத்தனைச் சின்னப் பெண்ணை... நம் ஆசைக்கு பலிகடாவா ஆக்கணுமான்னு தோணுதுடா! அவளுக்கு இப்போ கல்யாண ஆசையில்லாமல் இருக்க லாம்! பிற்பாடு ஆசை வரும்போது... எவனுமே அவளைக் கட்டிக் கொள்ள முன்வரமாட்டானே!''

''எதையாவது நினைத்து... கற்பனைப் பண்ணி கஷ்டப்படாதே! பிறகு வருவதை அப்புறம் பார்க்கலாம்!

நந்தினிக்குன்னு... அவள் நல்ல மனதைக் கண்டு... எவனாவது நல்லவனே... உன்னைப் போல ஒருவன் வரலாம்!''

''ஏய்.... ஏய்... கௌதம்... என்னடா சொல்றே?'' நரேந்திரன் அதிர...

''நீ இல்லேடா! பயந்து அதுக்குள்ள சாகாதே! உன்னைப் போல நல்லவன் என்றேன்!''

நரேந்திரனின் சுவாசம் சீராயிற்று. அவன் சம்மதமாய் தலையசைத்தான்.

''நந்தினியைப் பார்க்கணுமா?''

''வேண்டாம், கௌதம்! கடவுளை நாம் பார்க்கிறோமா என்ன? அதனிடம் தேவையானவற்றை நாம் கேட்பதில்லையா? அதுபோல அந்த பெண் எனக்கு கடவுளாய் தான் தோன்றுகிறாள். அதனால் அவளைப் பார்க்க வேண்டும் என்று அவசியமில்லை!''

நரேந்திரன் உவகையோடு சொல்லிவிட்டு மகிழ்ச்சியோடு சென்று விட்டான்.

நந்தினியிடம் சொல்ல... வானுக்கும் மண்ணுக்கும் எகிறி எகிறி குதித்தாள்.

அவளும் நரேந்திரனைப் பார்க்க வேண்டும் என்று அவசியமில்லை எனக் கூற...

இருவரின் மன ஒற்றுமையைக் கண்டு கௌதம் வியந்துத்தான் போனான்.

விரைவிலேயே தீபிகாவும், கௌதமும் செயலில் ஈடுபட்டார்கள்.



மூன்று மாதம் கழித்து... அனைத்து வித டெஸ்ட்டுகளும் செய்ய... அவள் கர்ப்பமாய் இருப்பது உறுதியாக... நந்தினியும், நரேந்திரனும் குதூகலித்தனர்.

நரேந்திரனின் உயிரணுக்கள் அவளின் வயிற்றில் குழந்தையாய் உருவெடுத்துவிட்டது.

கரு உருவானதிலிருந்தே... தொடர்ச்சியாய் வாந்தி எடுத்து... களைத்துப் போனாள், நந்தினி.

நந்தினிக்கு ஆஸ்பிட்டலில் அதிகம் வேலைக் கொடுக்காமல்... பார்மஸியில் உட்கார வைத்திருந்தான், கௌதம்.

அதுதான் அவளுக்கு ஊறுவிளைவித்தது.

அந்த மருந்துகளின் நெடிதான் நாசியைத் தாக்கி... வயிறு உமட்டி... குடலெல்லாம் வெளியே வந்துவிடும் அளவு வாந்தி வருகிறது.

அதை கௌதமிடம் சொல்லத் தயங்கினாள்.

நந்தினியைப் பார்க்க... அவளுடைய அக்கா புவனா வந்திருந்தாள்.

''ஏய் நந்தினி... என்னடி உன் முகம் பளபளன்னு மின்னுது! எவனிடமாவது ஏமாந்து விட்டாயா? சூல் கொண்ட பெண்ணின் மினுமினுப்பு உன்னில் தெரிகிறதே!'' என்று கேட்க...

நந்தினி கொஞ்சம் பயந்துதான் போனாள்.

'எத்தனை நாள் மறைத்தாலும்... அக்காவுக்கு ஒருநாள் தெரியத்தான் போகிறது. அதை இப்போதே சொல்லி விட்டால் என்ன?' என்று கொஞ்சம் தைரியம் உள்ளுக்குள்ளே பிறக்க... நந்தினி சொன்னாள்.

"நீ சொல்வது போல... நான் கர்ப்பமாகத்தான் இருக்கேன், அக்கா!"

நந்தினி சொல்ல... தீயை மிதித்தவள் போல் அதிர்ந்தாள், புவனா.

"பாவி... எவனோடவோ படுத்து வாங்கிட்டையா?"

"அசிங்கமாப் பேசாதேக்கா! இது வரம்!"

"என்னடி நந்தினி சொல்றே? பயமா இருக்குடி! உன் மாமன்... என் தோலை உரிச்சுடுவாரே!" புவனா அலற...

"தாலி கட்டிக் கொள்ளாமல்... அம்மி மிதிக்காமல்... அருந்ததி பார்க்காமல்... கன்னி கழியாமல்... என் வயிற்றில் குழந்தையை சுமந்து இருக்கேன்! இது எப்பேர்ப்பட்ட வரம்! தவமே செய்யாமல் எனக்கு கிடைத்த வரம், அக்கா! கன்னித்தாய், நான்! உன் தங்கையைப் பற்றி தவறான எண்ணம் கொள்ளாதேக்கா!"

நந்தினி சட்டென்று வெடித்து அழுதாள்.

"என்னடி புதிர் மேல புதிரா போடறே? சொல்லு? சொல்லுடி? நான் படிக்காதவள்! எனக்கென்ன தெரியும்? இது எப்படி சாத்தியம்? நீ ஒன்றும் குந்திதேவி இல்லையே!"

"இது அறிவியல் வளர்ச்சியக்கா! ஆணும், பெண்ணும் ஒன்று சேராமலேயே இப்போ பிள்ளையைப் பெத்துக்கலாம்!"

"ஐய்யோ...!"

"கத்தாதேக்கா! ஒரு நல்ல மனிதருக்கு நான் செய்யும் சிறு நன்மை! அப்படி ஒரு மனிதரை இதுவரை நான் கேள்வி பட்டதில்லே! காதலாய்... காதலின் அடையாள



மாய் அவர் இருக்கிறார்! தன் இறந்த மனைவி மேல் உயிரையே வைத்துள்ள ஒரு அற்புத ஜீவனுக்கு... நான் செய்யும் உதவிதாக்கா இது! உன்னிடம் சொன்னால் மறுப்பாய் என்றுதான் கேட்கவில்லை! என்னை நீ மன்னிக்கணும், அக்கா! அந்த மனிதரோட உயிர் என் வயிற்றில் வளருதுக்கா! என் உயிரில் கலந்து அவர் உயிர் வளருகிறது! என் கருப்பையை தானமா அவருக்கு கொடுத்திருக்கேன், இந்த குழந்தை பிறக்கும் வரை! இந்த குழந்தைப் பிறந்தப்பின் அப்புறமா மாசு மருவில்லாத உன் தங்கை நான்!"

நந்தினியை அணைத்து புவனா கதறி அழ....

"அழாதேக்கா! அழறாப்போல காரியத்தை நான் செய்யலே! உன் தங்கையோட நல்ல காரியத்துக்காக பெருமைப்படுக்கா! நிலமில்லா விவசாயிக்கு... நிலத்தை குத்தகைக்கு எடுத்து... உழுது... விதைச்சி... பயன் பெறுவது போலத்தான் இதுவும்!...

"நிலத்துக்கு குத்தகைக் கொடுக்கணும்! ஆனால் என் கருப்பை என்ற நிலத்துக்கு கூலி வாங்கலேக்கா! எப்படி மூன்று மாதமானால் தவறாமல் இரத்த தானம் செய்கிறேனோ... என் கண்ணை என் இறப்புக்கு பின் தானமா எழுதிக் கொடுத்திட்டேனோ... அதுபோல இதுவும் ஒரு வருட ஒப்பந்தம் தான், அக்கா!"

"ஆள் எப்படி?"

"நான் பார்க்கலேக்கா!"

"என்னடி சொல்றே?"

"நிஜம், அக்கா! டாக்டர் அண்ணா மூலமாகவும்... அவங்க அம்மா மூலமாகவும் அவர் வாழ்க்கையை,

குணத்தை கேள்விப்பட்டு... விருப்பம் வந்து... நானாகதான் மனம் உவந்து இந்த செயலைச் செய்கிறேன்!"

"நீ நல்லதுதான் செய்யறே, நந்தினி! ஆனால் உன் மாமனுக்கு என்ன பதில் சொல்வது?"

"நீ எதுவும் சொல்ல வேண்டாம்! பின்னால் தெரியும் போது பார்த்துக் கொள்ளலாம்! கவலைப்படாதே சந்தோசமா போயிட்டு வா!"

"உன்னை என் தங்கைன்னு சொல்லிக் கொள்வதில் எனக்கு கர்வம் கூடுதடி! பெருமையா இருக்கு, நந்தினிம்மா! உடம்பை பார்த்துக்கோடா!"

"ராதா, சுதா.... நல்லாயிருக்காங்களா?"

"ம்... எந்த குறையும் இல்லாமல் இருக்காங்க! அவளுக்காகத்தான் நீ உழைக்கிறாயே! உன் சம்பாதியத்தையெல்லாம் கொடுக்கிறாயே! இனி உன் மாமனுக்கு பயந்து எதுவும் கொடுக்க வேண்டாம்! உன் எதிர்காலத்துக்கு சேமிடா, கண்மணி!"

"என் எதிர்காலம்... நீயும், உனது குழந்தைகளும் தானே, அக்கா!" என்று சொல்ல சந்தோசமானாள், புவனா,

இனிதான் விதி விளையாட்டு காட்டப்போகிறது என்று அறியாமல்.




**கா**லையானால் இப்போதெல்லாம் ப்ரியா தோட்டத்துப் பக்கம் போய்... ஒற்றைக் குயிலின் கீதத்தைக் காதில் கேட்டு... இதயத்தில் நிரப்பிக் கொள்வாள்.



துணையின்றி துடிக்கும் தன் அண்ணன் நரேந்திரன் போல... அது தவிப்பதோடு... தனியாய் கீதம் பாடுவதாய்... அவளுக்கு தோன்றும்.

அண்ணனிடம் அம்மாவைப் போல் வீம்பு கொள்ளாமல்... அதே சமயம் தனது கோபத்தை, எதிர்ப்பை வெளிக்காட்டும் வண்ணம் கொஞ்சமாய்... சிலசமயம் முறைப்போடு பேசினாள்.

சாப்பாட்டு மேஜையில் நரேந்திரன் அமர்ந்து...

"ஏய் ப்ரியா... எங்கேப் போனாய்? தடிக்கழுதை! டிபன் எடுத்து வை!" என்று குரல் கொடுத்தான்.

ப்ரியா இல்லாதது கண்டு... அமிர்தத்தைப் பார்த்து குரல் கொடுத்தான்.

"அம்மா... நீங்களாவது வாங்களேன்! எனக்கு ஆபீஸ்க்கு நேரமாச்சி! நம்ம வெளிநாட்டு வாடிக்கையாளரை வரச் சொல்லியிருக்கேன்! அவங்க வந்து காத்திருந்தால் நல்லா இருக்குமா? என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? கொஞ்சம் தயவு பண்ணுங்கம்மா! ப்ளீஸ்..."

நரேந்திரன் அம்மாவிடம் கெஞ்ச... அமிர்தம் அவனின் கெஞ்சலை காதில் வாங்கிக் கொள்ளாதவள் போல திமிராய் வேறுபுறம் சென்றாள்.

"அம்மா... உங்க கோபம் இன்னும் தீரலையா? ஏம்மா... இப்படி என்னை வதைக்கறீங்க?"

"என்கிட்ட பேசாதே...! எத்தனை முறை சொன்னாலும் புரிந்து கொள்ள மாட்டாயா?" என்று அமிர்தம் சீற...

"உங்க கோபத்தை கைவிட்டு கொஞ்சம் பரிமாறுங்கம்மா!"

''முடியாதுடா! பக்கத்துலதானே இருக்கு! எடுத்து போட்டு சாப்பிட்டுக்கோ!''

''அம்மா... மாலை உங்களுக்கு ஒரு குட்நியூஸ் சொல்லப்போறேன்! ஏன் அழைத்து வந்தே காட்டலாம்ன்னு இருக்கேன்! நீங்கள் அதைப் பார்த்து பூரித்துப் போவீர்கள், அம்மா!''

''என்னடா குட்நியூஸ்? அம்மா... டீத்தூள் ஏற்றுமதியில ரெண்டு கோடி லாபம்! காபியில ஐந்து கோடி லாபம்ன்னு வந்து நிற்பே! இல்லேன்னால் இது சீனாக்கார குடும்பம்...! இது அமெரிக்காக்காரக் குடும்பம்... நம்ம சரக்கை ரெகுலரா ஏற்றுமதி செய்யக் கேட்கிறாங்கன்னு சொல்லுவே! இதிலெல்லாம் நான் சந்தோசம் கொள்ள மாட்டேன்! போ... போ...'' ஏளனமாய் பேசினாள்.

''அம்மா... இப்போ என்னை இழிவு படுத்தியதற்கு... பிறகு வருந்துவீர்கள்! தெரியுமா?'' என்று நரேந்திரன் திடமாய் கூற...

''மாட்டேன்! பெரிய இவனாட்டம் காட்டிக்காதே! என்னிடம் இனி பேசவும் முயற்சிக்காதே!'' என்று அமிர்தம் சத்தம் போட...

''அப்படியா...? மாலை நீங்களா என்னிடம் கெஞ்சிக் கொண்டு வரப்போகிறீர்கள்!''

''அப்படி வராப்போல... என்ன செய்துட்டு வந்து நிற்கப் போறே?'' என்று அலட்சியமாய் கேட்க...

நரேந்திரன் உணவு உண்ணாமலேயே வெளியேறினான்.

அவன் பிள்ளையை சுமக்கும்... கருணை உள்ளம் கொண்ட தேவதையைத் தரிசிக்க... கொஞ்ச நாளாய் ஏக்கமாய் இருந்தது.



இது நான்காவது மாதம்!

என் பிள்ளை உருண்டு... திரண்டு..... சின்னக் கையும், காலுமாய்... அவள் மணி வயிற்றில் குதிப்பானோ!

என் பிள்ளை எப்படி இருப்பான்? என்னைப் போலவா? அல்லது அவளைப் போலவா?

அவள் வயிற்றில் குடி கொண்டிருப்பது... குட்டி நரேந்திரனா...? அல்லது குட்டி நந்தினியா...?

என்ன குழந்தையாய் இருந்தாலும்... அது என் ரத்தம்! என் உயிர்! என் வாரிசு! என் பெயரை நாளைக்கு ஊருக்கெல்லாம் சொல்லப் போகும் என் குட்டி சொர்க்கம்!

அவன் குழந்தையை நினைக்கும் போதே... இதயத்தின் ஆழத்தில் தேனாய் தித்தித்தது!

'குழந்தை' என்றால் இத்தனை சந்தோசமா?

ஏன்... எனக்கும், கௌதமுக்கும் இத்தனை நாட்களாய்... இந்த எண்ணம் தோன்றாமல் போனது?

இந்த செயலை என்றோ செய்திருந்தால்... இந்நேரம் பொன்னேரமாய் இருந்திருக்குமே! என் பிள்ளையும் அழகான குட்டிக் கையை ஆட்டி விடைபெற்று... பள்ளிக்கு சென்றிருப்பானே!

இத்தனை ஆண்டு காலத்தை... இப்படி விரயமாக்கி... வீணாக்கி விட்டேனே!

ச்சே... படித்திருந்தும் முட்டாள்!

அம்மாவிடம் இன்று மாலை நந்தினியை அழைத்துப் போய் காட்டி... விஷயத்தைச் சொன்னால் எவ்வளவு சந்தோசப்படுவாள்?

அம்மாவின் அழகு முகம் எத்தனை சந்தோசத்தை... எத்தனை பூரிப்பை... எத்தனை மகிழ்ச்சியை... எத்தனை வியப்பை வெளிப்படுத்தும் என்பதை... ஆசை தீர கண்டு களிக்க வேண்டும்!

ப்ரியா குட்டி இதை எப்படி வரவேற்பாள்?

அவர்களுக்கெல்லாம் ஒரு ஆட்டத்தைக் காட்டி... வேடிக்கைப் பார்க்க வேண்டும்.

எவ்வளவு அலட்சியமாய் இந்த நான்கு மாதங்களும் முகத்தை திருப்பிக் கொண்டு பேசாமல் இருக்கிறார்கள். பதிலுக்கு நானும் அவ்வாறு செய்ய வேண்டும்!

காயம் பட்டால்தான்... காயத்தின் வலி அவர்களுக்கு தெரியும்!

'ஏய் ப்ரியா... உன் மருமகன் சீக்கிரமே வருவான்! அதனால் விரைந்து... மணம் செய்துக் கொண்டு... ஒரு மருமகளைப் பெற்றுக் கொடு' என்று அவளை ஆட்டிப் படைக்க வேண்டும்.

அட... இதுயென்ன மகன் என்கிறேன்!

நிச்சயமாய்... அவளுள் என்னைப் போன்ற ஒரு ஆண் சிங்கம்தான் இருக்குமா?

அப்படி இருந்தால் எவ்வளவு சந்தோசம்!

பெண் குழந்தைகளும் அழகுதானே!

அவர்களுக்கு தயாராகும் விதவிதமான உடைகள், காதணிகள், கழுத்தணிகள், காலணிகள் அத்தனையும் கொள்ளை அழகு அல்லவா?

அழகான பெண் குழந்தைக்கும் மனம் ஏங்கியது!

ஆண் என்றும்... பெண் என்றும்... இரு குழந்தைகளாய்... இரட்டையர்களாய்... அவள் வயிற்றில் ஜனித்



திருந்தால்... எத்தனை ஆனந்தம்! அப்படி ஒரு ஆனந்தத்திற்கு கரையே இல்லையே!

இவ்வாறு சிந்தனையிலேயே பொழுதைக் கழித்துவிட்டு... நேரமாகவே... ஆஸ்பிட்டலை நோக்கி விரைந்தான், நரேந்திரன்!

நந்தினிக்கும் நரேந்திரனைப் பார்க்க வேண்டும்... பேச வேண்டும் என்று மிகுதியான ஆவல் வந்தது.

எத்தனை நாளைக்கு... அவள் நேசம் கொண்ட நெஞ்சோடும்... காற்றோடும்... தென்றலோடும்... விண்ணோடும்... மண்ணோடும்... பால் நிலாவோடும்... அவைகளை நரேந்திரனாய் நினைத்துப் பேசுவாள்?

நிஜ நரேந்திரனைக் கண்ணால் காண வேண்டும் என்ற வெறியே அவளுள் அலையாய் எழுந்தது.

கௌதமிடம் கேட்கவும்... அவள் சுயமரியாதைத் தடுத்தது.

அவ்வளவு அலட்சியமாய் 'அவனைப் பார்க்க வேண்டும் என்று அவசியமில்லை' என்றவள்... இப்போது போய் 'என் வயிற்றில் உருவாகும் குழந்தையின் தகப்பனைக் காண வேண்டும்' என்றால் ஏளனமாய் பார்க்க மாட்டார்களா... கௌதமும், தீபிகாவும்!

கற்பனையில் நரேந்திரனுக்கு ஒரு உருவம் கொடுத்து... கண், காது, மூக்கு, கன்னம், அழகான மீசை, அழுத்தமான உதடுகள் என்று பொருத்தி... தினம் தினம் கற்பனையில்... அவளின் கம்பீரமான கட்டழகனோடு கொஞ்சி மகிழ்ந்தாள்.

தன் கற்பனையை ஒத்த நாயகனாய்... நிஜ நரேந்திரன் இருப்பானா? என்று... அவளுக்கு இருவரையும் ஒப்பிட்டுப் பார்க்க ஆசை!

நரேந்திரன் மேல் கொண்ட அதீத காதலும்... அளவு கதிகமான அன்பும்... நாளாக நாளாக அவள் பிள்ளையைப் போலவே... வளர்பிறை நிலவாய் வளர்ந்துக் கொண்டு போனது!

நந்தினியின் மனதில் நேசம் கண்மண் தெரியாமல் உருமாறி... உயர்ந்து... மன விண்ணை முட்டி நின்று... அவளைப் பயமுறுத்தி வேடிக்கைப் பார்த்தது!

எதிர்காலமே இல்லாத காதல் என்றாலும்...

நிறைவேறாத காதல் என்றாலும்...

அவனைக் காதலிக்க... அவளுக்குப் பிடித்திருந்தது.

நரேந்திரா... நரேன்...

என் நாடி நரம்புகளிலெல்லாம் நரேந்திரன்... நரேந்திரன் தான்! என்னுள் கலந்து விட்டவன் நீ! என்னுள், என்னை அறியாமலேயே கரைந்து விட்டவன் நீ! என்னுயிரை உருக்கி... உன்னுயிரில் ஒளித்துக் கொண்டவன் நீ!

நரேந்திரா... ஏழேழு ஜென்மத்துக்கும் நீயே எனது காதலனாகவும்... கணவனாகவும் வரவேண்டும்!

கடைசி பிறவிதான்... மனிதப் பிறவி என்கிறார்கள்! அது பொய்யாய் இருக்க வேண்டும், என் அன்பே! அடுத்ததாயும் மனிதப் பிறவியை நாம் எடுக்க வேண்டும்! நீ நரேந்திரனாகவும்... நான் நந்தினியாகவும் பிறக்க வேண்டும். நீ என்னைத் தான் முதன் முதலில் சந்திக்க வேண்டும்! என்னைச் சுற்றிச்சுற்றி வந்து நேசம் கொள்ள வேண்டும்! என் மேல் உயிராய் இருக்க வேண்டும்! எனக்காக உருக வேண்டும்!

இது நடக்குமா நரேந்திரா?



இந்த ஏழைப் பெண்ணின் கனவு...ஊமைக் கண்ட கனவுகள் தானா...?

தினம் தினம் அவளை ஏக்க அலைகள் புரட்டிப் போட்டது.

அவஸ்தை என்ற சுனாமி அவளைச் சுருட்டிக் கொண்டது.

புயலாய்... பூகம்பமாய்... அவளுள் சுழன்ற நேசம்... அவளைப் புரட்டிப் போட்டு வேடிக்கைக் காட்டி... நகைத்து... நகர்ந்து போனது.

தினம் தினம் அவனைத் தேடி நின்ற கண்களில்... நரேந்திரன் வந்து நிற்கவேயில்லை!

ராமனைக் காணாத சீதா தேவியாய்... கிருஷ்ணனைக் காணாத மகாலட்சுமியாய் உள்ளம் வாடி நின்றாள், நந்தினி!

இனி, நிஜ மன்மதனே வந்து... அவள் கண்ணெதிரே தோன்றினாலும்... அவள் நேசம் கொண்ட நெஞ்சு தடுமாறாது! அவள் மன்மதன் இன்றும்... என்றுமே நரேந்திரனே! அவள் மனதில்... முதல் முதலாய் சலனத்தை ஏற்படுத்தி... இடம் பிடித்தவன் நரேந்திரன் மட்டுமே!

அவள் இதயத்தை... இனி எந்த கொம்பனாலும் களவாட முடியாது!

களவாடிவிட்ட கள்வன்... நரேந்திரன் ஒருவன் மட்டுமே! அவள் நெஞ்சமெனும் கதவை... காதலெனும் மந்திரக் கோலைக் கொண்டு... திறந்து... அவள் இதயத்தைத் திருடிப் போய் விட்ட திருடன்... நரேந்திரன்!

'அவனை என்னவென்று அழைக்கலாம்?'

'எப்படி அழைக்கலாம்?'

'உள்ளம் கவர்ந்த கள்வன் என்றா...?'

'இதயத் திருடன் என்றா...?'

'என் அன்பே... என் ஆருயிரே என்றா...?'

'என் இனிய நேசத்திற்குரியவனே என்றா...?'

'எப்படி அழைத்தாலும் சர்க்கரையாய் தித்திக்கிறதே!'

'நரேந்திரா... நரேந்திரா... வாடா என் இனியவனே! வாடா என் இதயமே! சீக்கிரம் வந்து என் முன்னே உனது அழகு முகத்தைக் காட்டிவிட்டு... மறுவிநாடியே போய் விடேன்! ப்ளீஸ்...'

'நான் வாந்தி எடுத்து களைத்துப் போய் இருக்கேன் என்றால்... உன்னை நினைத்து... வாடி வதங்கி இருக் கிறேனே!'

'ஆஸ்பத்திரி வாடை உமட்டிக் கொண்டு வருகிறது. இதை எப்படி உனது நண்பனிடம் சொல்லுவேன்? அதைவிட உன் பிள்ளையின் பயங்கர வளர்ச்சியால்... வயிறு முட்டி சீருடையில்... இப்போதே அசிங்கமாய் தெரிகிறேன்! என்ன செய்ய நரேந்திரா...? எங்காவது சென்று இந்த உமட்டல் நிற்கும் வரை இருந்துவிட்டு வரலாம் என்றாலும்... எனக்கு வேறு போக்கிடம் இல்லையே!'

'அக்காவின் வீட்டுக்குப் போகலாம் என்றாலும்... என் அத்தான் என்ற போர்வையில் ஒரு காமுகன் இருக்கிறான். இதுதான் என் இடம் என்று தலையில் கடவுள் எழுதி விட்டப் பின்பு... மாற்ற முடியுமா, நரேந்திரா?'



'நரேந்திரா... ஒரே ஒருமுறை எனக்காக வந்து விட்டு போய்விடேன், கண்ணா!'

'நரேந்திரா... நரேந்திரா...' மனம் இதனையே மனனம் செய்ய... மருந்தகத்திற்குள் அமர்ந்து இருந்தாள்.

இப்பொழுது அவளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது பகல் டூட்டிதான்! இரவில் அவள் நன்கு உறங்க வேண் டும்! அப்படி உறங்கினால்தான்... அவளுள் இருக்கும் குழந்தை ஆரோக்கியமாய் வளரும் என்று... கௌதம் செய்த ஏற்பாடு இது!

அமிர்தம் ஆஸ்பிட்டலை விட்டு டிஸ்சார்ஜ் ஆனப் பின்பு அடுத்தடுத்து இருமுறை இவளைக் காண வந்தது மட்டும்தான். அதன் பின்பு இந்த செவிலிப் பெண்ணை அமிர்தம் நினைவில் வைத்துக் கொள்ளவில்லை போலும்.

'யார் அது? அத்தனை கம்பீரத்தோடு அழகாய் வருவது? என் கற்பனை நாயகனை ஒத்த ஜாடையில்... ஒருவேளை என் உள்ளம் கவர்ந்த நரேந்திரனா?'

'இறைவா இவன் எனது நரேந்திரனாகத்தான் இருக்க வேண்டும்! எனக்காக அருள் புரியேன்!' அவள் கடவுளை வேண்டிக் கொண்டிருக்க...

நந்தினியின் அருகே வந்து... கண்ணோடு கண் நோக்கி...

''நான் நரேந்திரன்! கௌதமும், தீபிகாவும் ஒரு விருந்து முடிந்து... வந்து கொண்டு இருப்பதாய்... செல்லில் தொடர்பு கொண்டார்கள். அதற்கு முன்பாய்... இங்கே, நர்ஸ் நந்தினியை நான் பார்க்க வேண்டும்! அவர்களை எனக்கு அறிமுகப்படுத்த முடியுமா, மிஸ்?''

நரேந்திரன் அவள் பூமுகத்தைப் பார்த்துக் கேட்க...

'அட மடையா... அது நான்தானடா! நித்தம் நித்தம் உன்னை நினைத்து... நெக்குருகிப் போய் கிடக்கும் நந்தினி, நான்தானடா!'

'ஐய்யோ... இத்தனை கம்பீரமாய் இருக்கும் உங்களை... நான் இதுநாள் வரை ஒருமையில் அழைத்து விட்டேனே!'

'அவனா...? அவரா...? எப்படி சொல்லிக் கொள்வது?'

'மனதிற்குள் அவன்! வெளியில் அவர்! சரியா?'

அவளின் மனம் திருப்தியாய் புன்னகைத்தது!

''ஏங்க உங்களைத்தான்! நான் நந்தினியைப் பார்க்க வேண்டும்!''

நந்தினியோ... நரேந்திரனைக் கண்களால் சிறை செய்து கொண்டிருந்தாள்.

பின்...

''நான் நா... நான்தான் ந... நந்தினி!''

''நீங்கள்தானா? உங்களைப் பார்க்க வேண்டும் என்று ஆவலாய் இருந்தேன்! என்னைத் தெரிய வாய்ப்பில்லை! அப்படித்தானே?''

''ம்...!'' என்று தலையை ஆட்டி வைத்தாள்.

''உங்கள் தியாகம் ரொம்பவே பெரிசுங்க!'' அவளின் மேடிட்ட வயிற்றை... பிரமிப்புடன் பார்த்துக் கொண்டே கேட்டான்.

'உனக்காக என் உயிரையும் கூடக் கொடுப்பேனே, நரேந்திரா!'



''அம்மா கிட்ட இன்னும் விஷயமே சொல்லவில்லை! உங்களை அவர்கள் முன்பு நிறுத்தி... அவர்கள் சந்தோசத்தில் திக்குமுக்காடுவதைப் பார்க்க வேண்டும், நந்தினி!''

''கௌதம் அண்ணா...'' என்று நந்தினி இழுக்க...

''அவன் மறுப்பான்னு பயப்படறீங்களா? நான் அவன் வந்த பின்பு பர்மிஷன் வாங்கி வைக்கிறேன்! நீங்கள் கெஸ்ட் ஹவுசுக்குப் போய் ட்ரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வருகிறீர்களா?''

''அண்ணா வந்தபின்...''

''மறுக்கமாட்டான்! நீங்க போங்க!'' என்று கூற... நந்தினி அவனை எதிர்த்து பதில் பேச முடியாமல் அவ்விடம் விட்டு அகன்றாள்.

கொஞ்ச நேரத்தில் ஆரஞ்சு வண்ண சேலையில் வெள்ளையும் கறுப்பும் போட்ட பெரிய பூக்களைக் கொண்ட சேலையில் பேரழகியாய் வந்தாள்.

ஒரு பேரழகியின் எதிர்காலத்தைப் பாழாக்குகிறோமே என்று எண்ணி வேதனைக்குள்ளாகி நின்ற போது கௌதம் வந்து நின்றான்.

அவனிடம் விஷயத்தைக் கூற...

''ஜாக்கிரதை நரேந்திரா! தொடர் வாந்தியாய் எடுத்து களைத்துப் போய் இருக்கா! அதனால் இரவு திரும்ப கூட்டிட்டு வந்துடுவே இல்லையா?''

''நிச்சயமாய்...! சத்தியமாய்...!'' என்று அடித்து சொன்னான், நரேந்திரன்.

சொன்னச் சொல்லைக் காப்பாற்ற முடியாமல் போகப் போகிறது என்று அறியாமல்!



# 9

நல்லவர்களாய் இருப்பவர்கள் தவறு செய்யும் சந்தர்ப்பம் வாய்க்காதவர்கள் என்று நினைத்தாள், நந்தினி.

ஆண், பெண் ஈர்ப்பு மிக வலிமையானது ஒன்று! கடவுள் மனிதர்களை வகைப்படுத்தி ஆண் என்றும், பெண் என்றும் படைத்து இருப்பதே ஒருவர் மீது மற்றொருவருக்கான ஈர்ப்புக்குத்தான் என்று புரிந்தது.

எல்லோரிடமும் எல்லோர்க்கும் ஈர்ப்பு ஏற்பட்டு விடாது! தனக்குப் பிடித்தமான... தகுதியான நபரைக் காணும் போதுதான் ஈர்ப்பு ஏற்படும். ஈர்ப்பு இல்லையேல் காதல் இல்லை! காமம் இல்லை! ஆணும், பெண்ணும் இல்லை! உயிர் உருவாக்கம் இல்லை! அப்புறம் உலகமே இல்லை!

உலகமும்... உலகத்து உயிர்களும் ஈர்ப்பு ஒன்றில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது!

படித்து நல்லது எது? கெட்டது எது? எது நிறைவேறும்? எது நிறைவேறாது? என்று தெரிந்து இருக்கும் தன்னையே ஒரு ஆணின் ஆண்மை, அழகு அடித்து வீழ்த்துகிறது என்றால்... சாதாரண சூழ்நிலையில்... படிக்காதவர்களாய்... பாமரர்களாய் வளர்பவர்கள் எம் மாத்திரம்?



பெண்ணில் உள்ள பணிவு, மென்மை, அடக்கம், நாணம், ஒழுக்கம், அமைதி அத்தனையும் ஆண்களைக் கவர்ந்து இழுக்கிறது!

ஆணில் உள்ள அழுத்தம், கம்பீரம், ஆண்மை, ஆளுமைத்தன்மை, கடுமை அத்தனையும் சேர்ந்து பெண்களைக் கவர்ந்து காந்தமாய் இழுக்கிறது!

அவன் காரோட்டும் கம்பீரமே தனிதான் போலும்! கார் அலுங்காமல்... குலுங்காமல் ரதமாய் போனது!

அந்த ஆண்மை நிரம்பிய முகத்தைக் கள்ளத்தனமாய்... ஓரக்கண்ணால் பருகிக் கொண்டே வந்தாள், நந்தினி.

திடீரென வயிற்றைப் புரட்ட....

''ஓரமாய்... காரை ஓரமாய் நிறுத்துங்களேன். ப்ளீஸ்...'' என்று நந்தினி முகம் சுளிக்க...

நரேந்திரன் காரை ஓரமாய் நிறுத்த...

நந்தினி வேகமாய் திறந்துக் கொண்டு ஓடிப்போய்... உமட்டி உமட்டி வாந்தியெடுத்தாள்.

''என்னம்மா... என்ன செய்கிறது?'' என்று பதற்றத்தோடு கேட்டு... அவள் தலையைப் பிடித்துக் கொள்ள... நந்தினியோ வயிற்றில் உள்ள குடலே வெளிவந்து விடும் அளவு வாந்தியெடுத்தாள்.

நரேந்திரன் வாட்டர் பாட்டிலை எடுத்து வந்து நீட்ட.... வாய் கழுவி... குளிர்ந்த நீரால் முகம் கழுவி... காரில் வந்து அமர... கார் நகர்ந்தது.

''என்னால முடியலே! என்னால் முடியவில்லை சார்! கண்ணெல்லாம் இருட்டாய் மறைக்குது!'' என்று பிதற்ற

''பின் சீட்டில் படுத்துக் கொள்கிறாயா?''

"வேண்டாம்.... வேண்டாம், சார்! இப்படியே சாய்ந்து கொள்கிறேன்!"

நந்தினி களைப்போடு கூற... நரேந்திரன் கலங்கினான்.

"ஒரு சின்னப் பெண்ணை என் சுயநலத்திற்காக... சிலுவைச் சுமக்க வைக்கிறேனே! கஷ்டப்படுத்தறேனே! வேண்டாம்ன்னு சொல்ல... இந்த கௌதம்தான் பேசி என்னைச் சமாதானப்படுத்திவிட்டான். "ஸாரி... ஸாரிம்மா, நந்தினி!" என்று மன்னிப்பு கோர...

"நான் விரும்பி ஏற்ற பணி! நல்ல செயலும் கூட! இப்படி ஸாரி சொல்லி என்னை வருத்தப்பட வைக்காதீர்கள், சார்!" என்றவள் மயக்கத்திலும்... தூக்கத்திலும் ஆழ்ந்து... கதவில் ஒன்றி... சீட்டில் சாய்ந்துக் கொண்டாள்.

கொஞ்ச நேரத்தில் கதவில் முட்டிக் கொண்டு முன்புறம் சாயப்போனவளை இழுத்து... தன் கையணைப்பில் வைத்துக் கொண்டான்.

நரேந்திரன் அணைப்பில் நிம்மதியாய் நித்திரைக் கொண்டாள் நந்தினி!

"பங்களா வந்தாச்சி! நந்தினி... நந்தினிம்மா... எழும்மா! விழித்துக் கொள்ளம்மா!"

நரேந்திரன் அவள் கன்னத்தில் தட்ட... விழி மலர்ந்தவள் அப்படியே ஆனந்தப்பட்டாள்.

அவன் கையணைப்பில் அவள்!

ஆஹா... என்ன சுகம்! ஒரு ஆணின் அணைப்பு இத்தனை பேரானந்தத்தை தருமா?



அவனிடம் உள்ள கதகதப்பு... ஆண் வாசம் அத்தனையும் அவளை மயக்கியது!

மயங்கிவிட்டாள்... அந்த மாது!

தலையில் முட்டிய மோவாய் என்ன சுகந்தம்! இப்படி ஒரு வாய்ப்பு... இப்படி ஒரு தொடுகை... இப்படி ஒரு சிலிர்ப்பு... தன் வாழ்க்கையில் ஒருமுறையேனும் நரேந்திரனிடமிருந்து கிடைக்கும் என்று நினைக்காத அந்தப் பாவை... அப்படியே பதுமையாகிப் போய்... அவன் விழிகளையே உற்று நோக்க... அதன் பிறகு அவன் விழிகளிலிருந்து தன் விழிகளை விலக்க முடியாமல் தத்தளித்தாள்.

இவரின் மூச்சு சுவாசத்தில் நிக்கோடின் வாசமும் கலந்திருக்கிறதே! ஐயோ நிக்கோடின் உடலுக்கு கெடுதியில்லையா? சிகரெட்டை அளவோடு பிடிப்பாரா? அல்லது நிறையவா? இதை நிறுத்தச் சொல்ல வேண்டும். கட்டாயம் நிறுத்தச் சொல்லி... கெஞ்சவாவது வேண்டும்!

"இன்னும் தூக்கம் போகலையா? உன்னைப் பார்க்கும் போது குழந்தையாய்தான் என் கண்களுக்கு தெரிகிறாய்! இப்படி ஒரு குழந்தையை குழந்தைப் பெற்றுத் தரச் சொல்லி வதைச்சிட்டேனே!"

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள், சார்!"

"சரி மெல்ல இறங்கி வா!" அவள் பக்கம் வந்து கார் கதவைத் திறந்துவிட்டான்.

அவளிடமிருந்த மயக்கமும், கிறக்கமும் போய்... ஒருவித பயம் தொற்றிக் கொள்ள... நந்தினியின் நடைத் தடுமாறியது. தடுக்கி விழப் போனவளை... நரேந்திரன் தாங்கிக் கொண்டான்.

அவனின் அருகாமை இனித்தது. அவன் கையின் கதகதப்பு... இதயத்தின் ஆழம் வரை ஊடுருவிச் சென்று... அவளை நெக்குருக வைத்தது.

அமிர்தம், ப்ரியா இருவரும் ஆச்சரியத்தோடு... இவர்கள் இருவரையும் பார்த்தனர்.

நந்தினியை நரேந்திரன் கைத்தாங்கலாய் அழைத்து வந்தது... அவர்களுக்கு ஏதோ செய்தி சொன்னது!

நந்தினியின் மேடிட்ட வயிற்றை உற்று நோக்கிய அமிர்தம் 'பயல் நந்தினியிடம் விழுந்துவிட்டான் போல!' என்று சந்தோசித்தாள்.

''வாம்மா நந்தினி! உன்னைக் கண்டதில் மிக்க மகிழ்ச்சி. இன்று காலை முதல் உன் நினைவுதான்! நானே ஆஸ்பிட்டல் வரலாம்ன்னு நினைச்சேன்! எனக்கு கஷ்டம் வைக்காமல் கடவுள் உன்னையே இங்கு வந்து என் கண்ணில் காட்டிட்டான்!''

''நலமா, அத்தை?''

''ரொம்ப நலம்மா! நரேந்திரன் பயல் உன்னைப் பார்த்தால் மனசு மாறி... இப்படி ஏதாவது தப்பு தண்டா பண்ணிட்டு வந்து முழிப்பான்னு நினைச்சேன்! நான் நினைச்சது போலவே நடந்துடிச்சி! ஏய் நரேந்திரா... நந்தினியை எப்போடா பார்த்தே? எப்போடா இவளிடம் விழுந்தாய்?''

அமிர்தம் அவன் மேலான கோபத்தை விட்டு விட்டு... கண் சிமிட்டி தலையாட்டிக் கேட்டாள்.

''புத்தி போகுது பாருங்க! என்னம்மா இது? இப்படி என்னை அசிங்கப்படுத்தறீங்க? நான் என்ன அது



போலவனா? நல்லதாகவே என்னைப் பற்றி நினைக்கத் தெரியாதா?...

இவள் கர்ப்பமாய் இருப்பது உண்மைதான்! இவள் வயிற்றில் வளரும் குழந்தைக்கு தகப்பனும், நான்தான்! ஆனால்...'' என்று முடிக்கும் முன்னரே...

''நிஜமாகவா? நந்தினி... நந்தினி...'' என்று உருகி... நெற்றியை வழித்து... நெட்டி முறித்தாள், அமிர்தம்.

''ஆனால் முறை தவறியதால் இந்த பிள்ளை வர்லே!''

''என்னடா நரேந்திரா குழப்பறே?''

''அம்மா... இது விஞ்ஞானம்மா! தாலி கட்டிக் கொள்ளாமல்... ஒரு பெண்ணோடு வாழாமலேயே குழந்தைப் பெத்துக்க முடியும்! இது டெஸ்ட் டியூப் பேபிம்மா!'' என்று நரேந்திரன் விளக்க...

''என் தங்கமே...'' என்று நந்தினியை கண்ணீர் பளபளக்க கட்டிக் கொண்டாள். நந்தினியின் கன்னத்தில் மாறி மாறி முத்தமிட...

''அம்மா... போதும்... போதும்! இவள் கன்னம் தேய்ந்து விடப் போகிறது! இவளுக்கு அழகுக்கு அழகு சேர்ப்பது இந்த குண்டு கன்னம்தான். அதைப் பாழாக்கிடாதீங்க!'' என்று நரேந்திரன் ரசனையோடு கூற...

கௌசல்யா சந்தோசத்தின் உச்சிக்கேப் போனாள்.

'அட... இத்தனை அளவு ஆழமாகவா... என்னை கவனித்து உள்ளீர்!' என்று ஆச்சரியப்பட்டாள்.

''நிற்க வைத்தே பேசணுமா? வரும்போது வாந்தி பண்ணி ரொம்பவே களைத்துப் போய் இருக்காள்! ஏய் வாலு... பார்த்துட்டே நிற்கிறாய்! ஓடு... ஓடு... ப்ரஸ்ஸா

ஆப்பிள் ஜூஸ் போட்டு எடுத்துட்டு வா!'' என்று நரேந்தின் ப்ரியாவைப் பார்த்து அதட்ட... ப்ரியாவோ மானாய் துள்ளி ஓடினாள்.

அமிர்தம்... நந்தினியை தன்னருகே சோபாவில் அமர்த்திக் கொண்டு...

''அம்மா நந்தினி... உனக்கு கோடி புண்ணியம் உண்டாகட்டும்! நான் நினைச்சிக் கூட பார்க்கலைம்மா! என் பேரனையோ.... பேத்தியையோ... இந்த பிறவியில... இந்த கையால தூக்கிக் கொஞ்சப் போறேன்னு! ஐய்யோ... எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோசமா இருக்கே! இந்த சந்தோசத்தைக் கொடுத்த நீ நூறு ஆண்டுகளுக்கும் மேலாக வாழணும்மா!''

அமிர்தம் கண்கள் குளமாகியது.

''எங்கள் வாரிசு... எங்கள் குல விளக்கு'' என இயல்பாய் நந்தினியின் வயிற்றை அமிர்தம் தொட....

''ஐய்யோ அத்தை... வேண்டாம்... எனக்கு வெட்கமா இருக்கு!''

''அதுயென்ன அத்தை? ம்?'' என்று நரேந்திரன் ஒற்றைப் புருவம் உயர்த்தி நந்தினியைப் பார்த்து கேட்க...

நந்தினியோ நாணத்தில் முகம் சிவந்து, கவிழ்ந்தாள்.

''நான்தான் அப்படி கூப்பிடச் சொன்னேன்!'' என்றவள் நந்தினியை விட்டுவிட்டு மகனிடம் ஆசையாய் நெருங்கி ''நரேந்திரா...'' என்று அவன் முகத்திற்கு நேரே கையை அமிர்தம் கொண்டு போக...

''டோண்ட் டச் மீ! நான் பொல்லாதவனாயிடுவேன்! என்னைத் தொடவோ... இனி என்னிடம் பேசவோ



அனுமதியில்லை! தூரப் போங்க...'' என்று அவன் சீரியசாய் முகத்தை வைத்துக் கொண்டு சொல்ல...

நந்தினி திருதிருவென முழிக்க...

''நரேந்திரா... என்மேல் கோபமாடா?''

''பயங்கர கோபம்! தூரப்போங்க! என்னிடம் பேசாதீங்க! மீறிப் பேச முயற்சித்தால்... நான் வீட்டை விட்டுக் கூடப் போகத் தயங்கமாட்டேன்'' என்று ஆள்காட்டி விரல் நீட்டி விரட்ட...

''ஸாரி... ஸாரிடா, மகனே!''

''ஸாரி சொல்லிட்டா ஆச்சா? நான்கு மாதங்களாய் என்னிடம் பேசாமல்... என்னை எவ்வளவு துன்புறுத்தினீர்கள்! எல்லாம் மறந்து போயிடுமா என்ன? ம்?'' என்றவன்...

''அந்த நரக வேதனையை அனுபவித்த நெஞ்சு இங்கே... இங்கே இருக்கு!'' தன் இதயத்தை சுட்டிக் காட்டினான்.

''காலையில் என்ன பிகு! என்ன அலட்டல்! மறக்க மாட்டேம்மா!''

''ஏய் நரேந்திரா... என்னை வதைச்சது போதும்டா!'' என்று ஓடிப்போய் ஆசையாசையாய் மகனைக் கட்டிக் கொள்ள...

''ஏய் அமிர்தா...'' என்று செல்லமாய் அழைத்து... அமிர்தத்தை தூக்கி தட்டாமாலைச் சுற்றிய காட்சி வெகு ரம்யமாய் இருந்தது.

அவர்களின் பாசத்தைக் கண்டவளுக்கு... கண்களில் நீர் தளும்பியது. வெகு சிரமப்பட்டு அடக்க முயன்றாள், நந்தினி.

"வெள்ளிக் கிழமையில இப்படி ஒரு நல்ல செய்தி சொல்லுவேன்னு நான் எதிர்பார்க்கலே, நரேந்திரா."

அமிர்தத்தின் முகம் பூரிப்பில் பளபளக்க... நரேந்திரன் அம்மாவின் கன்னத்தில் ஆசையாய் முத்தமிட...

"பய ரொம்ப மோசம் நந்தினி! இப்படித்தான் சின்னக் குழந்தையா நடந்துக்குவான். பொண்டாட்டியை கட்டி முத்தமிடற வயதில்... ம்ப்... ஆண்டவன் எல்லாத்தையுமே தட்டிப் பறிச்சுட்டான்! என் பிள்ளைக்கு மட்டும் ஏன்தான் இந்த சந்தோசமெல்லாம் மறுக்கப்பட்டதோ?"

"சந்தோசமா இருக்க வேண்டிய நேரத்தில்... கண்டதையும் பேசி... அண்ணாவை ஏன் கஷ்டப்படுத்தறேம்மா!"

ப்ரியா சொல்லிக் கொண்டே வந்து...

"ஜூஸ்ல சர்க்கரை நிறைய போட்டிருக்கேன்! இந்த இனிப்பான செய்தியை கொண்டாடுவதற்காக!" என்று கூறிக் கொண்டே அனைவரிடமும் நீட்ட... ஆளுக்கொரு தம்ளரை எடுத்துக் கொண்டனர்.

நந்தினி ஆப்பிள் சாறை ஒரே மூச்சில் குடித்தாள். அந்த அளவு களைப்பு... பசி.

நரேந்திரன் அவளின் செயலைக் கண்டு... தன்னுடைய டம்ளரை இளநகையோடு நீட்ட...

"வேண்டாம், சார்!" என்று மறுப்பாய் தலையாட்ட...

"வயிற்றில் ஒன்றுமே இல்லையில்லையா? குடிம்மா!"

"உங்களுக்கு?"

"வாலு மிச்சமீதி வைத்திருக்கும். நான் பிறகு குடிச்சிக்கிறேன்!" என்று அவன் கூற... நந்தினி வாங்கிப் பருகினாள்.



அவன் கைப்பற்றிய கண்ணாடி டம்ளரை வருடிக் கொண்டே அவனை விழுங்கி விடுவது போலப் பார்த்தாள்.

'என் வயிற்றைப் பற்றி உணர்ந்தவன்... இந்த வஞ்சியின் உள்ளத்தை எப்போது உணரப் போகிறாய், நரேந்திரா? உன்னையே எனக்கு எப்போது தரப்போகிறாய், நரேந்திரா?'

"நரேந்திரா... நான் உன் மேல் கோபித்துக் கொண்டு... மாத்திரை முழுங்கி... உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பிட்டல் போகாமல் இருந்திருந்தால்... இந்த தங்கத்தைப் பார்த்திருக்க முடியுமா? உன்னைப் பற்றி இவளிடம் சொல்லியிருக்க முடியுமா? என் மேலும்.... உன் மேலும் பாவம் கொண்டு... இப்படி ஒரு நல்லதை நந்தினி செய்வதற்கு முன் வந்திருப்பாளா? நான் உன்னிடம் கோபம் கொள்ளாமல் இருந்திருந்தால்... இந்த நிகழ்ச்சியை கௌதமே சொல்லியிருந்தாலும் லேசில் ஒத்துக் கொண்டு இருப்பாயா?"

அமிர்தம் கேள்விகளாய் அடுக்க.... நரேந்திரன் ஆமோதிப்பாய் தலையசைத்தான்.

"நீங்க சொல்வதும் நூறு சதவீதம் உண்மைதாம்மா. எனக்கு கூட ரொம்ப சந்தோசமா இருக்கு. ஒரு பிள்ளை இவ்வளவு சந்தோசத்தை தருமான்னு வியப்பாயிருக்கும்மா! உங்களிடம் சொல்லாமல்... கடைசியா குழந்தையை தூக்கிட்டு வந்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தணும்ன்னு நினைச்சேன்! ஆனால் இந்த மகிழ்ச்சியை என்னோடவே புதைச்சிக்க விரும்பலே! அதுவும் முடியலே! பொங்கி பொங்கி ஊற்றாய் மேலே வந்து... அதான்

சட்டென்று முடிவெடுத்து நந்தினியை அழைச்சிட்டு வந்துட்டேன்!"

"இந்த நல்லது நடக்க நான்தானே காரணம்! அதனால் குறைந்தது நூறு தோப்புகரணமாவது எனக்கு நீ போடணும்!" அமிர்தம் சிரித்தவாறே சொல்ல...

"என்னம்மா நீங்க?... என் காலையே வாரறீங்களா?"

நரேந்திரன் மலர்ந்து சிரிக்க...

'இவன் சிரித்தால் எத்தனை கொள்ளையழகு! கூடுதலாய் கன்னத்துக்குழி எத்தனை மோகத்தைக் கொடுக்கிறது! அந்தக் கன்னக்குழியில் முத்தமிட்டால்...'

நினைப்பே தித்தித்தது. நினைப்பை உதறி... நிஜத்துக்கு வந்தாள்.

'ஏய் மனமே... நீ உன் குறும்புகளைக் காட்டாமல் இருக்கமாட்டாயா? என் முகத்தில் அவர் எதையாவது படித்துக் கொண்டால்... பின் இயல்பாய் என்னிடம் பேசுவாரா, நரேந்திரன்?'

மனதிற்கு ஒரு பலமான கொட்டினை வைத்தாள், நந்தினி.

"அம்மா நந்தினி... எனக்கு சீக்கிரமே இந்த ஆறு மாதமும் ஒரு நொடியாய் போகாதா? என் பேரப் பிள்ளையை பார்க்க மாட்டோமான்னு ஒரே ஏக்கமா இருக்கு!" அமிர்தம் சொல்ல....

"எனக்கும்.. எனக்கும்தாம்மா!" நரேந்திரனும் சொன்னான்.

"நந்தினி... நந்தினி... நீ இங்கேயே இருந்துவிடேம்மா! இந்த பிள்ளையை பெறும்வரை எங்களோடவே இருந்



துடும்மா! உன்னைக் கண்ணுக்குள்ளே வைத்து பார்த்துக்குவோம்! என்னம்மா சொல்றே?"

"வேண்டாம் அத்தை!"

"ஏன் நந்தினி? என் பேரப்பிள்ளையை... உன் கருவறையிலிருந்தே பார்த்துப் பார்த்து வளர்க்கணும்ன்னு ஆசையா இருக்கும்மா! நீயும் போய் ஆஸ்பிட்டல் வாசத்துல கஷ்டப்பட வேண்டாம்! ஆஸ்பிட்டல் வாசம் கூட உனக்கு உமட்டலாம்! வாந்தியை ஏற்படுத்தலாம்! என்னடாம்மா சொல்றே? மறுக்காதேம்மா! மகாராணியா உன்னைப் பார்த்துக்கறோம்! நாங்களெல்லாம் உனக்கு சேவகம் செய்யறோம்! ப்ளீஸ்ம்மா..." அமிர்தம் கெஞ்ச-

"நான் இங்கு தங்குவது முறையில்லையே!"

"நான் உன் அக்காளிடம் கூடக் கெஞ்சி பர்மிஷன் வாங்கிடறேன்!"

"அவங்க மறுக்கமாட்டாங்க!"

"பின்னே? என்ன காரணம்? நந்தினி இந்த வயசானவளின் ஆசையை, அன்பைப் புரிந்து கொள்ளேன்!"

"இல்ல, அத்தை! நான் யோசிக்கணும்!"

"யோசிக்க என்னடாம்மா இருக்கு? சரியாய் சாப்பிடாமல்... நீயும் வெளிறி தெரிகிறாய்! நரேந்திரா... நீ சொல்லுடா? நீ சொன்னால் நந்தினி கேட்கலாம்!" அம்மா நரேந்திரனைப் பார்த்து கெஞ்சலோடு சொல்ல...

"அம்மா சொல்வது போல நீ இங்கேயே இருந்துவிடேன், நந்தினி! அம்மாவுக்காக..." நரேந்திரன் கேட்க...

'உங்களுக்காக இல்லையா, நரேந்திரா? ஆனால் நீங்கள் சொல்லி மறுக்கமாட்டேன், நரேந்திரா. அந்த அளவு

உங்களிடம் என் மனதைப் பறிகொடுத்து இருக்கிறேன்! கண்களால் காணாத போதே அந்த அளவு நேசம் கொண்ட நான்... கண்டப்பின் எப்படி மறுப்பேன்? உங்கள் அழகிலும் மயங்கி விட்டேனே, நரேந்திரா! உங்கள் ஆண்மை என்னைத் தடுமாற செய்கிறது! உங்கள் ஆண் வாசமும்... அணைப்பும் என்னைக் கட்டிப் போட்டுவிட்டது!'

'உங்கள் அருகாமையில் வாழ்வதே வரம் தானே! உங்கள் கண் பார்வையில் நடமாடுவதே... எனக்கு கிடைத்த பெரும் பேறுதானே! உங்கள் நல்வாழ்வுக்காக பிரார்த்தித்துக் கொண்டு வாழ்ந்துவிடுவேன்! இன்னும் ஆறுமாதம் கழித்து பிரியும் போது... நினைவு பொக்கிஷத்திலிருந்து தோண்டித் தோண்டி எடுத்த... ஞாபகச் சுவடுகளைக் கொண்டே மிச்ச நாட்களைக் கழித்து விடுவேன்! இது எனக்கு கிடைத்த அருமையான வாய்ப்பு! ஆனால் இந்த கௌதம் அண்ணா...'

''நந்தினி... கனவுலகத்துக்கு திடீர் திடீர்ன்னு ப்ளைட்டோ... பஸ்ஸோ பிடிக்காமல் போய் நின்னுடறே, இல்லையா? ம்?'' என்று நரேந்திரன் கேட்க...

''அதெல்லாம் இல்லே...'' தடுமாறினாள்.

''கௌதம் ஏதாவது சொல்வான்னு பயமா?''

''ம்...!''

''நான் சொன்னால் மறுக்கவே மாட்டான்!''

''ஆமாம், நந்தினி!'' அமிர்தம் அடித்துச் சொல்ல...

''உனக்கு இங்கே இருக்கச் சம்மதமா? அதை முதலில் சொல், நந்தினி? கௌதமிடம் பர்மிஷன் வாங்குவது என் பொறுப்பு!''



''சரி...!'' என்று சம்மதத்தோடு தலையசைக்க... அமிர்தமும் ப்ரியாவும் சந்தோசமாய் ஓடி வந்து... நந்தினியை இருபுறமும் அணைத்துக் கொள்ள...

நரேந்திரனின் செல்போன் ஒலிக்க... ''நம்ம கௌதம் தாம்மா!'' என்று ஆன் பண்ணிப் பேசினான்.

''ஏய் நரேந்திரா... அம்மாகிட்ட சொன்னாயா? சந்தோசப் பட்டாங்களா? இனி தற்கொலை அது இதுன்னு போக மாட்டாங்களே?'' கௌதம் கேட்க...

''மாட்டாங்கடா!''

''சரி நேரமாகுது! எப்போ திரும்பறே? நந்தினியை கொண்டு வந்து விடறே?''

''அவள் வரமாட்டாள்!''

''ஏய் விளையாடறியா?''

''நந்தினி... இனி என் வீட்டில்தான் இருப்பாள்! இது அம்மாவின் விருப்பம்! நானும் அதுக்கு உடன்படறேன்!''

''டேய்... டேய்... விளையாடாதே, நரேன்! தீபிகா இல்லேன்னாலும் இப்போ இருந்துடுவேன்! நந்தினி இல்லாமல் இருக்க முடியாது! என் தங்கையாய் அவளை நினைச்சிட்டு இருக்கேன்!'' பதற்றத்தோடு சொல்ல...

''நினைக்க வேண்டாம் என்று யார் சொன்னது? என் பிள்ளை என் வீட்டில் வளருணும்ன்னு ஆசையிருக்காதா? அப்பப்போ நந்தினியை கூட்டிட்டு வந்து காட்டறேன்!''

''நீ பிடிவாதக்காரன்டா! நீ நினைச்சதை சாதிக்க நினைக்கறவன்டா! ஆனாலும் என் நிலையை நினைத்துப் பார்! அவள் இல்லாமல் ஆஸ்பிட்டலே ஸ்தம்பித்துப்

போய்விடும்! பார்மஸியை அவள்தான் இப்போ பார்த்துக்கிறாள்!"

"கர்ப்பமா இருக்கிற பெண்ணை வேலை வாங்க எண்ணறியே! கயவனே... உனக்கு புத்தியே இல்லையா? என் வீட்டில் இருந்தால் அம்மா, ப்ரியான்னு பார்த்துக் கொள்வார்கள்! அங்கே, உனக்கும் தீபிகாவுக்கும் ஆஸ்பிட்டலைப் பார்த்துக்கவே நேரம் போதல! இந்த லட்சணத்தில் நந்தினியையும், என் பிள்ளையையும் எப்படி பார்த்துக் கொள்வீர்கள்? போனை வையுடா. நாளை கூட்டி வரேன்! அப்படியே அவளுடைய பொருள்களை எடுத்துட்டு திரும்பிடுவோம்! அவளை சொந்தம் கொண்டாட நினைக்காதே! அவள் எனக்குத் தான் சொந்தம்! என் பிள்ளையை சுமப்பவள் மேல் உரிமை கொண்டாடுவது தப்பா?" என்று நரேந்திரன் வார்த்தைகளைப் பேச...

அது தெரியாத நந்தினியின் மட மனம் சந்தோசத்தில் துள்ளி குதித்தது.

அப்பா கிருபாகரன் எஸ்டேட்டிலிருந்து வர... இந்த செய்தியைச் சொல்ல... நரேந்திரனை அன்போடு அணைத்து... நந்தினியை நன்றியோடு பார்த்தார்.

தன் காதலுக்கு உகந்தவன் அருகில் இருப்பதை எண்ணி... நந்தினியோ விண்ணுக்கும் மண்ணுக்கும் துள்ளி குதித்து ஆனந்தப்பட்டாள்.

'ஏன்தான் இங்கு தங்கினோமோ!' என்று கூடிய விரைவிலேயே நொந்துக் கொள்ளப் போவது தெரியாமல்!






மறுநாள் ஆபீஸ் கிளம்பும் போது நந்தினியை அழைத்துப் போய் ஆஸ்பிட்டலில் விட்டான்.

மாலையே அவளை அழைத்துச் செல்ல நரேந்திரன் வந்து நிற்க...

"ஏய் நரேந்திரா... நந்தினி இங்கு வந்ததிலிருந்து அவளை விட்டுவிட்டு ஒருநாள்கூட நானும் தீபிகாவும் இருந்ததில்லை. நந்தினி இல்லாமல் நாங்கள் ரொம்பவே திண்டாடி விடுவோம்! நீ பார்க்கத்தானே போற! பல்லைக் கடிச்சிட்டு ஆறு மாசத்தை எப்படியாவது ஓட்டிடறோம்! பிரசவம் முடிந்தவுடன் கொண்டு வந்து விட்டுடணும்! சரியா?"

நரேந்திரனைப் பார்த்து கௌதம் சொல்ல... சம்மதமாய் தலையாட்டினான்.

"நல்லா சந்தோசமா இரும்மா! மனதில் எதையும் போட்டு அலட்டிக்காதே! உடம்பை பத்திரமாய் பார்த்துக் கொள். எங்களைவிட நரேந்திரன் வீட்டில் உன்னை நன்றாகவே பார்த்துக் கொள்வார்கள்!"

"தீபிகா... இவளை நினைச்சி... கவலைப்பட்டு... உன் எடையை குறைத்துக் கொள்ளாதே! என்ன?"

"நான் குண்டாயிருக்கேன்னு சொல்லாமல் சொல்றீங்களா?" என்று தீபிகா சிரித்தாள்.

அங்கிருந்த அனைவரிடமும் கையாட்டி விடை பெற்று... காரில் ஏறினாள், நந்தினி.

"என்ன இது, சின்னப் பெட்டி? இவ்ளோதானா உன் மேக்கப் பொருள்கள்?" நரேந்திரன் கேட்க...

"மேக்கப் பொருட்களா...? நான் அதுபோல என் முகத்திற்கு தனியாய் எதுவும் யூஸ் பண்றதில்லே! இதில் என் ட்ரஸ் மட்டும்தான் இருக்கு!"

"இதை எடுக்கவா இவ்வளவு தூரம் வந்தாய்? ம்?" என்று சின்ன உரிமையான அதட்டலை... அவளிடம் காட்டியவன் ஒரு துணிக்கடை முன்பு காரை நிறுத்த...

"ஏன்? எதுக்கு?" என்று புரியாமல் கேட்ட நந்தினியிடம்...

"பேசாமல் வா, நந்தினி! இந்த மாதிரி நாட்களில் நைசான நல்ல காட்டன் உடையா உடுத்தனும்! லூசான காட்டன் நைட்டியா இரவில் உடுத்திக்கனும்! உன்னிடம் உள்ளதெல்லாம் கொஞ்சம் சிறியதாக இருக்குமல்லவா? என்ன நந்தினி?" என்று கேட்க...

"ஆமாம்!" என்று மறைக்காமல் உண்மையை ஒத்துக் கொண்டாள்.

அவனுக்கு இணையாக... அவனோடு நடப்பது கூட பெருமையாய் இருந்தது.

அத்தனை பேர் விழிகளும் இவர்களை ஆச்சரியத்தோடு உற்று நோக்க... கடைக்குள் நுழைந்தனர்.

கடையில் ஏகப்பட்ட வரவேற்பு.

"வாங்க, சார்! பாம்பே டையிங், ரேமான்ஸ், சர்ட்டிங், சூட்டிங் எல்லாம் புது புது டிசைனிலே வந்திருக்கு! பார்க்கறீங்களா?"



கடை முதலாளியே அருகில் வந்து கேட்டார்.

"எனக்கு எடுக்க வர்லே! இவங்களுக்கு எடுக்க வந்தேன்!" என்று நந்தினியை காட்ட... அந்த ஆள் கீழிருந்து மேலாய் பார்வையை செலுத்தி... திருப்தியாய் புன்னகைத்தான்.

"வாங்கம்மா. சார் எவ்வளவு பெரிய ஆள்! இவரை மணந்து கொள்ள புண்ணியம் செய்திருக்கனும், நீங்க?" என்றதும்...

'அடப்பாவமே... இவர் மனைவி என்று... இந்த ஆள் நினைத்து விட்டானா? நரேந்திரன் என்ன சொல்வார்?' என்று அவன் முகத்தை ஆராய்ந்தாள், நந்தினி.

"என்ன சார்... ரதிபோல பெண் கிடைத்து இருக்கிறார்கள். சொல்லவே இல்லையே! உங்கள் காத்திருப்பிற்கு நல்ல பலன் கிடைத்திருக்கிறது சார்! இப்படி ஒரு பெண் கிடைக்கத்தான் இவ்வளவு நாள் பிரம்மச்சரியம் காத்திருந்தீர்களா?" என்று கூறியவன்,... நந்தினியைப் பார்த்து சொன்னான்.

"எத்தனையாவது மாதம்மா? சாரோட நல்ல மனதிற்கு... அருமையான... மகாலட்சுமியை ஒத்தப் பெண்ணாய் கிடைத்து இருக்கிறீர்கள்! அப்படியே ரதியையும் மன்மதனையும் இணைந்து காணும் திருப்தி, மனதில்! நீங்க நல்லாயிருக்கனும்மா! சாரோட வசதிக்கு எத்தனையோ கழிசடைகள்... அவரை வளைத்துப் போட சுத்தினதுகள்! ஆள் கெட்டிம்மா! அழுத்தமானவரும் கூட! ஒருத்திகிட்ட கூட வழுக்கி விழலையே! இதிலிருந்து நரேந்திரன் சாரோட கண்ணியத்தை தெரிந்து கொள்ளும்மா! அவர் இனி மேலாவது சுகப்படனும்மா!" என்றவன் நரேந்திரனைப் பார்த்து...

''சார்... போன புண்ணியவதியையே நினைச்சிட்டு இருக்காமல்... சின்னம்மாவை நல்லாப் பார்த்துக்குங்க! ஏய்... சாருக்கு நல்லதா எடுத்து காட்டுங்கப்பா...!'' என்று கடை ஊழியர்களிடம் சொல்லிவிட்டு கல்லாப் பெட்டிக்கு திரும்ப...

நரேந்திரன் எதுவும் பேசாமல் துணிகளைப் பார்த்துக் கொண்டிருந்தது ஆச்சரியத்தைக் கொடுத்தது.

'ஒருவேளை இவரும் என்னை விரும்புகிறாரா? இல்லையென்றால் ஏன் மறுக்கவில்லை?'

அவள் புரியாத மனநிலையில் இருக்க...

மீண்டும் கார் பயணம்.

''ஸாரி. ஸாரிம்மா... இவ்வளவு சின்ன வயது பெண்ணான உன்னைப் போய் என் மனைவியா என்று கேட்டுவிட்டாரே! உனக்கு கஷ்டமாக இருந்ததா? அவமானமாக இருந்ததா?'' என்று நரேந்திரன் கேட்க...

'இல்லை... இல்லை...' என்று கத்த வேண்டும் போல வெறி வந்தது. ஆனால்...

''ஸாரி... ஸாரி சார்! என்னை, உங்கள் மனைவியா என்றது உங்களுக்குத்தானே அவமானம்? எத்தனையோ வசதியான, அழகான பெண்கள் உங்களுக்கு போட்டிப் போடுவதாய்... உங்கள் தாய் கூறியிருக்கிறார்கள்! போயும்... போயும்... என்னை... இந்த அநாதையை..''

''நீ கண்ணாடி பார்ப்பதில்லையா?'' சட்டென்று கேட்க...

''ஏன்?'' என்றாள்.

''நீயும் அழகிதான்!''



நரேந்திரன் கூற... மெய் சிலிர்த்து... வானத்தில் பறந்தாள். பின்...

''நீங்க ஏன் மறுக்கல?''

''எல்லோரிடமும் நாங்கள் கணவன், மனைவி இல்லை! என் பிள்ளையை சுமப்பவள்ன்னு சொல்லி... நம் கதையை சொல்லச் சொல்றீயா? ஊருக்காக நாம் வாழ வேண்டாம்! நாம் நமக்காக வாழ்வோம்! ஊர் என்ன சொன்னாலும் நீயும், நானும் அப்படியில்லை என்று நமக்கு தெரியும் தானே?'' என்று கூற... முகம் வாடி விட்டாள்.

'நிஜத்தில் இல்லையென்றாலும்... நீங்கள் எனக்கு.... என மனதிற்கு கணவன்தான்!' மனதிற்குள் உறுதி கொண்டாள்.

''உனக்கு ஆட்சேபணை இல்லையென்றால் ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொள்ளட்டுமா? கார் ஓட்டும் போது சிகரெட் குடிக்க எனக்கு ரொம்பவே பிடிக்கும்! என்ன நந்தினி... உன் அனுமதி கிடைக்குமா?''

அவ்வளவு பெரிய மனிதன் கெஞ்ச.... அவள் தலையாட்டினாள்.

அவன் ஆழ இழுத்து புகையை வெளியே விட....

'கடவுளே... கடவுளே... என் நரேந்திரனுக்கு இதனால் எந்த பாதிப்புமே வரக்கூடாது!' என்று வேண்டினாள்.

கொஞ்ச நேரத்தில் அந்த புகை அவள் நாசியைத் தாக்க... வயிறு குழைய... உமட்டியது!

அவள் முகம் போன போக்கைக் கவனித்தவன்...

''என்னம்மா? என்ன செய்கிறது?'' என்று கேட்டு வண்டியை ஓரமாய் நிறுத்த...

பதில் சொல்ல கூட அவகாசம் இல்லாமல்... கதவைத் திறந்து போய்... கௌதம் வீட்டில் சாப்பிட்ட அத்தனையையும் வாந்தியாய் எடுக்க...

நரேந்திரன் சிகரெட்டை தூக்கி கிடாசிவிட்டு... அவளருகில் வந்து... அவள் தலையை கெட்டியாய் பிடித்துக் கொள்ள... இன்னும் அதிக சிகரெட் நெடியால் உமட்டியது.

எல்லாம் முடிந்து முகம், வாய் கழுவி அழைத்துப் போய் அமர வைத்தான்.

"ரொம்பவே களைத்து விட்டாய், நந்தினி! இனி உன் முன்பு இந்த கருமத்தைத் தொடமாட்டேன்! நம்பாமல் பார்க்கிறாயேம்மா! நிச்சயமா... உனக்கு இதுபோல ஒரு அவஸ்தையை கொடுக்கமாட்டேன்! இந்த சாக்லெட்டைப் போட்டுக்கோ!" என்று ஒரு புளிப்பு சாக்லெட்டை பிரித்து அவள் வாயில் திணித்தான்.

அவன் கரிசனம் மனதைத் தொட்டது.

"என்னம்மா ரொம்ப முடியலையா? என் தோளில் சாய்ந்துக் கொள்கிறாயா? அல்லது மடியில் படுத்துக் கொள்கிறாயா?"

"வேண்டாம்... வேண்டாம்!" என்ற நந்தினி சட்டென்று மறுக்க... நரேந்திரன் புரியாமல் விழித்து... உதடு பிதுக்கி... தோள்களை உயர்த்தி அழகுகாட்டி... காரைச் செலுத்தினான்.

அவன் தோளில் சாய்ந்தால்... உடம்பு தகிக்கும்! அவன் தன்னை மேலும் இறுக்கிக் கொள்ள மாட்டானா? என்று உடம்பு ஏங்கும்! முத்தமிடமாட்டானா என்று கன்னம், உதடு, நெற்றி மாய்ந்துப் போகும்! இதுவரை அவனைப்



பார்க்காத போது இருந்த மனம் வேறு! இந்த கள்ள மனம் நேற்றிலிருந்து அந்த அழகிலும்... ஆண்மையிலும் மயங்கி தேனில் விழுந்த ஈயாய் தத்தளிக்கிறது. தன் விருப்பத்தை எங்கே... ஏதாவது செய்து... காட்டிக் கொடுத்துவிடுமோ என்று பயந்துதான் வேண்டாம் என்று அவசரமாய் மறுத்தாள்.

பங்களா வந்தார்கள்.

அமிர்தம் அவள் கையிலிருந்த பெட்டியை வாங்கி... ப்ரியாவிடம் கொடுத்து விட்டு... அவளைத் தோளோடு அணைத்து உள்ளே இட்டுச் சென்றாள்.

கிருபாகரன் மகிழ்ச்சியாய் புன்னகைத்தார்.

'இவர்களின் இத்தனை ப்ரியத்திற்கு தான் தகுதியானவளா?'

"சாப்பிடலாம், நரேந்திரா! வாம்மா நந்தினி!" அமிர்தம் அன்போடு அழைக்க...

"எனக்கு வேண்டாம்மா! அங்கேயே ஒரு கட்டு கட்டிட்டேன்! இந்த தீபிகா பொறாமை பிடிச்சவம்மா!" நரேந்திரன் சொல்ல...

"ஏம்பா?" அமிர்தம் கேட்க...

"அவள் புருஷனுக்கு லேசா தொப்பை இருக்காம்! எனக்கு இல்லையாம்! அதனால் இதுபோல சமயம் கிடைக்கும் போது... நிறைய போட்டு எனக்கும் தொப்பையை வரவழைக்கப் போறேன்னு சிரிக்கிறாள். பாதகி... வேண்டாம்... வேண்டாம்... என்று சொல்ல... இலையில் நிறைய அடுக்கிட்டாள். வேஸ்ட் செய்ய மனமில்லாமல்... எல்லாவற்றையும் மூக்கைப் பிடிக்க... ஒரு ரவுண்ட் கட்டிட்டேன்! தொண்டைக் குழிவரை இருக்கும்மா!"

நரேந்திரன் சீரியஸாய் சொல்ல...

''பொய் சொல்றார், அத்தை!'' என்று நந்தினி சொல்ல...

''சரியான குறும்புக்காரன்டா நீ! வாடா...'' என்று காதைப் பிடித்து இழுத்துப் போக...

அங்கே பேச்சும் சிரிப்பும் களைக் கட்டியது.

''ஏய் ப்ரியா... பால்ல காம்ப்ளான் போட்டு எடுத்து வா! மறக்காமல்... தினமும் நந்தினிக்கு கொடு! என் பிள்ளை... என்னைப் போல உயரமாக வளர வேண்டாம்?'' என்று நரேந்திரன் சிரிக்க...

''இவன் முகத்துல சிரிப்பை இப்போதாம்மா பார்க் கிறோம்!''

அமிர்தம் கண்கள் கலங்க சொல்ல...

'இனி எப்பொழுதும் பார்ப்பீங்க, அத்தை' நந்தினி தனது மனதில் சொல்லிக் கொண்டாள்.

''அம்மா நந்தினி... மாடியில, நரேந்திரனுடைய அறைக்கு எதிர்த்த அறை ரொம்ப வசதியாய் இருக்கும்! எங்களுடைய முக்கிய விருந்தாளி வந்தால் அதில்தான் தங்க வைப்போம். அதில் தங்கிக்கம்மா! உனக்கு ஒன்று என்றாலும் நரேந்திரன் பார்த்துக்குவான். இரவுல தூக்கமே வராமல்... சுத்தி திரிஞ்சிட்டு இருப்பான். உனக்கும் மாடி ஏறி இறங்கினால் பிரசவம் எளிதாய் இருக்கும்! என்னம்மா?''

''உங்க இஷ்டம்!'' நந்தினி மெல்ல சொல்ல...

''சரி நீ போய் படுத்துக்கோம்மா! ஏய் நரேந்திரா... நந்தினியை அழைத்துப் போய் அறையைக் காட்டு, எழுந்தினால் நடுநடுவே நந்தினியைப் பார்டா. கதவைப் பூட்டாதேம்மா!''



நந்தினியை நரேந்திரன் அழைத்து சென்று அறைக்குள் விட்டு...

''போதுமா...? பிடிச்சிருக்கா...?'' என்று கேட்க...

''பிடிச்சிருக்கு! ஆனால் மெத்தை, தலையணையெல் லாம் புதுசா இருக்கே? நீங்க நிறைய செலவு செய்யறீங்க, எனக்காக! தெரியுமா?''

''மெத்தையும், தலையணையும் எவ்வளவு பெறும்? ம்? நீ செய்யும் தியாகத்தைவிடவா இது பெரிசு?''

''ஆனால் இவ்வளவு. பெரிய அறை... என் ஒருத்திக்கு தேவையா?''

''பேசாதே, நந்தினி! போய் படுத்து நிம்மதியா தூங் கும்மா! ஏதாவது என்றால் ஒரு குரல் கொடு! அடுத்த நிமிடம் நான் இங்கே இருப்பேன்!''

நரேந்திரன் சொல்லிவிட்டு... அவளைத் தனியே விட்டுவிட்டு.. அவனறைக்குள் நுழைந்துக் கொண்டான்.

அவள், எல்லோரிடமும் ப்ரியமாய்... பாசமாய் பேச... அத்தனைப் பேருக்கும் நந்தினியை நிரம்ப பிடித்து விட்டது.

ஏன் நரேந்திரனுக்கே ஆச்சர்யம்தான்! 'இத்தனை அன்பான பெண்ணா, நந்தினி?' என்று மலைத்துப் போனான்.

'இந்த அன்பான சிப்பிக்குள்தான் தன் முத்து வளர் கிறது' என்று அகமகிழ்ந்துப் போனான்.

தானும் நல்லவன்! தன் பிள்ளையை சுமப்பவளும் கருணையும்... அன்பும்... இரக்கமும் கொண்ட தேவதை! இருவர் குணமும் சேர்ந்து... இன்னும் நல்லவனாய் தன் பிள்ளை பிறப்பான் என்று நம்பினான்.

தன்னுடைய மனைவியை நினைத்து துக்கப்படுவது கூட...அவனிடம் குறைந்துள்ளது!

அதற்காக மறந்து விட்டான் என்று சொல்ல முடியாது!

சதா தன் பிள்ளையைப் பற்றிய எண்ணமும்... அதனைச் சுமப்பவளும் கண்ணுக்குள்ளும்... நெஞ்சிக் குள்ளும் வந்து நின்றனர்.

நந்தினி சமையல் செய்யும் வேலைக்காரர்களுக்கு உதவினாள்.

தோட்டத்தில் தோட்டக்காரன் செய்ய வேண்டிய மாறுதல்களைக் கூறினாள்.

தோட்டத்து மலர்களைப் பறித்து வந்து... நெருக்க கட்டி... ப்ரியாவின் பின்னலில் சூடி அழகு பார்ப்பாள்.

சாமிப் படங்களுக்கு சூடி வணங்குவாள்.

அமிர்தத்தின் மாமனார், மாமியார், கிருத்திகாவின் படத்துக்கு போடுவாள்.

பூச்சாடியில் பூக்களை அடுக்கி... ஆங்காங்கே அழகுக் காக வைப்பாள்.

வேலைக்காரர்களை வைத்துக் கொண்டு வீட்டைச் சுத்தப்படுத்துவாள்.

அமிர்தம், கிருபாகரன், ப்ரியா, நரேந்திரன் அனை வரையும் அக்கறையோடு கவனித்துக் கொண்டாள்.

இவளை அவர்கள் கவனிப்பதற்கு பதிலாய்... அவளின் கவனிப்பில் அத்தனைப் பேரும் மகிழ்ந்தனர்.

இனி, நந்தினி இல்லாமல் இந்த வீடு இயங்குமா என்று தோன்றும் அளவு... பம்பரமாய் சுற்றி.. ஒவ்வொருவரின் தேவைகளைக் கவனித்துக் கொண்டாள்.



ப்ரியாவின் ரெக்கார்ட் நோட்டில் படம் வரைந்து கொடுக்க... அதனின் அழகைக் கண்டு... மெச்சுதலோடு ஒரு பார்வையை நரேந்திரன் நந்தினி மேல் வீச... மேனி சிலிர்த்து... அந்தப் பார்வைக்கு அடிமையானாள்.

''ஏய் சோம்பேறி கழுதை... உன் வேலையை நீ செய்யாமல்... நந்தினி தலையில் கட்டிவிட்டு... அவளை ஏன் வேலை வாங்கறே? பாவம் இல்லையா?''

நரேந்திரன் கொஞ்சம் வேகமாய் ப்ரியாவைப் பார்த்து அதட்ட....

''நானாத்தான் விரும்பி செய்தேன்! அவளைத் திட்ட வேண்டாம்!'' நந்தினி மெதுவாய் கூற...

''உன்னை இங்கு அழைத்து வந்தது வேலைக்காரியாய் அல்ல! என் பிள்ளையைச் சுமக்கும் தாயாய்தான் நீ வந்திருக்கே! வந்த இடத்தில் ஓய்வெடுத்து, உட்கார்ந்து... வேளாவேளைக்கு சாப்பிட்டு உடம்பை தேற்றாமல்... எதையாவது இழுத்துப் போட்டு எதுக்கு இப்படி கஷ்டப்படணும்? சொன்னால் கேளும்மா, நந்தினி. உடம்பைக் கெடுத்துக்காதேம்மா!'' என்று நரேந்திரன் அக்கறையாய் சொல்ல... நந்தினியின் கண்கள் தளும்பி நின்றது.

நரேந்திரன் வீட்டில் இருக்கும் போதெல்லாம்... ஓரமாய் ஒதுங்கி நின்று... ஒரு நொடி கூட வீணாக்காமல்... அவனைப் பார்த்துக் கொண்டே இருப்பாள்!

அதில் அவளுக்கு நிறைய சந்தோசம்!

தினுசு தினுசாய்... வகை வகையாய் சமைத்து போட்டு... அதை நரேந்திரன் ரசித்து உண்டால்.... அவள் வயிறு நிரம்பி விடும்!

ஒருநாள் ப்ரியாச் சொன்னாள்.

"உங்களை நான் அண்ணி என்று அழைக்கட்டுமா? அப்படி அழைக்கணும்ன்னு ஆசையா இருக்கு, நந்தினி!"

"உன் அண்ணனுக்கு நான் மனைவி இல்லையே!" நந்தினி பட்டென்று சொல்ல...

"என் அண்ணனின் பிள்ளையை சுமப்பவள். அதற்காக அப்படி அழைக்க ஆசையா இருக்கு! ப்ளீஸ்... ஒத்துக்கங்களேன்!"

ப்ரியா கெஞ்ச... நந்தினி தலையாட்ட... அதிலிருந்து 'அண்ணி... அண்ணி' என்று நந்தினியிடம் உருகினாள், ப்ரியா.

நரேந்திரன் ஆபீஸ் சென்று விட்டால்... அவன் அறைக்குள் நுழைந்து... அவன் அப்படி அப்படியே போட்டு விட்டுப் போன பொருள்களை ஒழுங்கு செய்வாள்.

அவன் படுக்கையில் புரள்வாள்.

அவன் போர்வையைப் போர்த்திக் கொள்வாள்.

அவன் தலையணையை அவனாய் நினைத்து கட்டிக் கொண்டு கதை பேசுவாள்...! கவிதை வாசிப்பாள்...! காதலைச் சொல்லுவாள்...!

அவன் போட்டோவை எடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொள்வாள். ஆசை அடங்கும் வரை முத்தமிட்டுக் கொண்டே இருப்பாள்.

நந்தினி... நரேந்திரன் தனக்கு கிடைக்க மாட்டான் என்று மனதிற்கு பாடம் புகட்டினாலும்... புத்தி புகட்டினாலும் மண்டையில் ஏற மறுத்தது.



நரேந்திரனைப் பார்க்கும் வரை உடலையும், மனதையும் இதுவரை கட்டுப்படுத்தி... வென்று பழக்கப்பட்டவளால்... இப்போதெல்லாம் உடலிடமும்... மனதிடமும் தோல்வியையே சந்தித்து... மண்ணைக் கவ்வினாள்.

அவள் நேசத்தின் மேல் அளவு கடந்த நம்பிக்கை வைத்திருந்தாள்.

அவளின் 'அன்பு நிச்சயமாய் ஒருநாள் வெல்லும்' என்று பயங்கர எதிர்பார்ப்புடன் நாட்களை நகர்த்தினாள்.

மனதில் சலனம் ஏற்படும் போதுதான் சஞ்சலத்திற்கு எல்லோரும் ஆளாகின்றனர்.

அந்த சலனம் நந்தினியை பேயாய்... ராட்சசனாய் ஆட்டி வைத்து வேடிக்கைப் பார்த்தது.

'இந்த காதல் குற்றமில்லையா?' அவள் மனம் கேட்டது.

'எப்படி?'

'காதலே வேண்டாம் என்று ஒதுங்கி... தான் உண்டு, தன் வேலையுண்டு என்று இருப்பவனை நேசிக்கிறேன் என்று சொல்வது!'

'காதல் குற்றமில்லை! அதுபோல அவனைக் காதலிப்பதும் குற்றமில்லை. அவனிடம் போய் நான் உங்களை நேசிக்கிறேன்! சுவாசிக்கிறேன்! நீங்களும் என்னை நேசிக்க வேண்டும்... பூஜிக்க வேண்டும் என்று அடாவடி செய்து... கெஞ்சி, கொஞ்சி நிற்பதுதான் குற்றம்!'

'அப்போ இது ஒருதலைக்காதல்! சரியா?'

'யெஸ்! இது ஒருதலைக் காதல்தான்! நான் நரேந்திரனை உண்மையாய்.... உறுதியாய்... உயிருக்குயிராய் நேசிக்கிறேன்! என் நேசம் நிஜமானால்... எனக்கு என் நரேந்திரன் நிச்சயமாய் கிடைப்பான்!'

'உன் உறுதி குறையாதா? இந்த உறுதி எத்தனை நாட்களுக்கு?' மனம் அலட்சியமாய் சிரித்தது.

'என் உயிர் உள்ளவரை!'

'நிஜம்தானா?' மனம் இகழ்ச்சியாய் கேட்டது.

'என் கடைசி மூச்சி வரை அவனைக் காதல் செய்வேன்!'

அவள் பதிலில் மனம் அசந்து விட்டது.

'உனக்கு ஏன் அவனை இந்த அளவு பிடித்தது?' நெகிழ்ச்சியுடன் கேட்டது.

'அவன் காதல்! இறந்துப்போன மனைவியின் மேல் இன்னமும் வைத்திருக்கும் காதல்! வேற்று பெண்ணைத் தொட்டு அணைத்தாலும்..... கட்டுக்குலையாத அந்த உறுதி! அவன் விரதச்சரியம்! அவன் பிரம்மச்சரியம்! அவன் அழுத்தம்! அவன் ஆளுமைப் பண்பு! கடைசி கடைசியாய்... அவனுடைய ஆண்மை நிரம்பிய அழகும் தான்!'

அவளின் கள்ளமனம் அவளின் அந்த பதிலுக்காய்... அழகாய் புன்னகைத்தது.

'ஆண்களில் இவ்வளவு அழகானவனைப் பார்த்ததில்லையா?'

'உண்மை என்னவென்றால் இதுநாள் வரை எந்த ஆணையும் கண் கொண்டு கவனித்ததில்லை! எல்லா



ஆண்களும் அப்பாவைப் போல... அத்தானைப் போல இருப்பார்களோ என்ற வெறுப்பில் ஆணினத்தையே வெறுத்து வாழ்ந்தவள். முதன் முதலாய் கண் கொண்டு கவனித்த ஆண் நரேந்திரன்!'

'ரியலி...?'

'ம்! என்னைச் சலனப்படுத்திய அழகு... என்னை அவனிடம் கட்டிப்போட்ட அழகு! என்னை மீண்டும் மீண்டும் இம்சைப்படுத்தும் அழகு... என் நரேந்திரன் ஒருவனிடம் மட்டுமே!'

அவள் காதல் நிறைவேற கையில் எடுத்த ஆயுதம்... அன்பு மட்டுமே!

அன்புக்கு மயங்காதவர்கள் இம் மண்ணில் யாரேனும் உண்டா? அன்பு என்ற மூன்றெழுத்து மந்திரம் அவனை அவளிடம் அழைத்து வரும்! அவனை அடிபணியச் செய்யும்! என்ற திடம் அவளுள் இருந்தது.

அன்பை விதைத்தால்... அன்போடு ஆனந்தத்தையும் அறுவடைச் செய்யலாம் என்று நம்பினாள்.

அவள் கற்பனைகளும் கனவுகளும் கைக்கூடுமா? காதல் நிறைவேறுமா?

அவனிடமிருந்து நேரம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பும், ஏக்கமும், ஆர்வமும், ஆதங்கமும்... அவளிடம் நிறைய இருக்கிறது.

அவளது எதிர்பார்ப்பு கானல் நீராகுமா? கண்ணீரில் நனையுமா?

கடவுளுக்குத்தான் வெளிச்சம்!




"நந்தினி... என் பிசினஸ்ல அதிக இறக்குமதி செய்யற... ஒரு ஜப்பான்கார குடும்பம் கொடைக்கானல் வராங்க! தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்க்கணுமாம்! நாளை மாலை நம்ம பங்களாவுக்கு வராங்க! என்ன மெனு தயாரிக்கலாம்ன்னு யோசித்து... சமையல்காரர்கிட்டே சொல். நம்மநாட்டு... அதுவும் பாரம்பரியமிக்க உணவாக இருந்தால்... அவர்களுக்கு பிடிக்கும்! அதை கொஞ்சம் பக்கத்துல இருந்து... பார்த்துக் கொள்வாயா, நந்தினி?"

நரேந்திரன் கேட்க... "ம்...!" என்று தலையசைத்தாள்.

"உனக்கு முடியலன்னால், கஷ்டமா இருந்தால் வேண்டாம்!"

"அதெல்லாம் இல்லை. எனக்கு வேலைன்னால் ரொம்பவே பிடிக்கும்! சும்மா சோம்பேறியா பொழுதைக் கழிப்பதுதான் சிரமம்!"

"நீ ரொம்ப உன்னை வருத்திக்க வேண்டாம்மா!"

அவன் அப்படிச் சொல்ல... அவன் விழிகளை ஆசையாசையாய் ஊடுருவினாள்.

மறுநாள் இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களும் காரில் வந்து இறங்கினர்.

பக்குவமாய் உணவினை தயார் செய்துவிட்டு... நந்தினி போய் குளித்து, லேசான ஒப்பனை செய்து,



எளிமையான ஒரு சேலையை எடுத்து உடம்பில் சுற்றினாள்.

நரேந்திரன் அமிர்தம், கிருபாகரன், ப்ரியாவை அழைத்து அறிமுகம் செய்துவிட்டு...

"நந்தினி..."

நரேந்திரன்தான் மாடியைப் பார்த்து குரல் கொடுத்தான்.

"நந்தினி... நந்தினிம்மா... என்ன பண்றே? அவங்க வந்துட்டாங்க! வரீயா?"

நரேந்திரனின் வேகமான குரல் வந்து அவளை அடைய... நந்தினி பதற்றத்தோடு மாடிப்படியிறங்கி ஓடிவந்தாள்.

மாடிப்படியிறங்கி முடித்து... சமத்தரையில் நடக்கும் போது... பதற்றம் காரணமாய்... சேலை தடுக்கி... கீழே விழப் போனவளை ஓடி வந்து தாங்கினான், நரேந்திரன்.

"பார்த்தும்மா! மெல்ல வரக்கூடாதா? என்ன நந்தினி நீ? என் பிள்ளை உன் வயிற்றில் இருக்கான் என்ற நினைவாவது இருக்கா? அல்லது இல்லையா?" என்று கண்டிப்புடன் கூறியவன்... அவளை விடாமல் அணைத்தவாறே நடத்தி வந்தவன்...

"இது நந்தினி!" எனவும்,

நந்தினி கையெடுத்து அழகான புன்னகையோடு வணங்கினாள்.

அவன் அணைப்புக்குள் இப்போதே செத்துப் போக மாட்டோமா? என்று நந்தினி ஏங்கினாள். கண்களில் அவளையறியாமலேயே கண்ணீர் பூ அரும்பப் பார்த்தது.

"யுவர் வொய்ப்...? ரியலி பெண்டாஸ்டிக்! வாவ்! வாட் எ பியூட்டி புல்! வாட் எ வொண்டர்புல்! நீங்க அதிர்ஷ்டசாலி!"

அதில் ஒருவர் இப்படி கூற நரேந்திரனுக்கு அதிர்ச்சி!

நந்தினிக்கு பனியில் நனைந்த குளிர்ச்சி!

வீட்டு உறுப்பினர் அத்தனைப் பேருக்கும் அளவில்லாத மகிழ்ச்சி!

'இவளே என் மருமகளானால்... சீக்கிரம் நரேந்திரனை மணந்து... நிரந்தரமாய் தங்கிவிட அருள் செய், முருகா!'

அமிர்தம் வேண்டிக் கொண்டாள்.

நரேந்திரன் 'இவள் என் மனைவி அல்ல' என்று மறுத்து சொல்லுவானா? மாட்டானா? என்று அவன் வாயையேப் பார்த்துக் கொண்டிருந்தாள், நந்தினி.

மீண்டும் ஆங்கிலத்தில் உரையாடலைத் தொடர்ந்தனர்.

"இப்படி ஒரு அழகான... அம்சமான பெண் கிடைக்க தவம் செய்திருக்க வேண்டும்! அடடா... கோவில் கற்பக்கிரகத்தில் உள்ள சிலைப் போல என்ன ஒரு பாந்தம்...! என்ன ஒரு அமைப்பு...! என்ன ஒரு நேர்த்தி...! முற்பிறவியில் அளவுக்கதிகமான புண்ணியங்களைச் செய்திருக்கிறீர்கள்! அதான் இந்தப் பிறவியில் இப்படி ஒரு பெண் கிடைத்திருக்கிறார்கள்!"

"எத்தனையாவது மாதம் மிஸஸ் நரேந்திரன்?"

"மிஸ்டர் நரேந்திரன்... குழந்தை, உங்கள் மனைவி போல பிறந்தால்... கொள்ளை அழகாய் இருக்கும்!"

"இதுபோல அழகான கலரைப் பார்த்ததில்லே! பாலில் சந்தனத்தைக் குழைத்தது போல!"

ஜான்ஸன் என்ற இளைஞன் சொன்னதோடு நில்லாமல்... அவள் கைப்பற்றி... அவளே எதிர்பாராத தருணம் முத்தமிட்டு விட்டான்.



"ஐய்யோ..." என்று அலறி நந்தினி பின்வாங்கி நரேந்திரனை கட்டிக் கொண்டாள்.

நரேந்திரன் ஆத்திரத்தின் உச்சிக்கேப் போனான்.

கை முஷ்டி இறுக... கண்கள் சிவந்தான்.

பின் சமாதானமாகி விருந்தினரை கவனித்தான். நந்தினி அதிர்ச்சியில் ஒதுங்கியே நின்றுக் கொண்டாள்.

'அவளை முத்தமிட்டால்... எனக்கு ஏன் கோபமும்... இவ்வளவு ஆத்திரமும் வரவேண்டும்?'

இந்தக் கோபத்திற்கான காரணத்தை திரும்பத் திரும்ப கண்டுபிடிக்க முயற்சித்தும்... விடை தெரியாமல் தவித்தான்.

அன்று ஞாயிற்றுக் கிழமை!

இளமாலை நேரம்!

அனைவரும் வீட்டுத் தோட்டத்தில் அமர்ந்திருந்தனர், கிருபாகரனைத் தவிர,

நந்தினி இங்கு வந்து இரண்டு மாதத்திற்கு மேலானது!

"ஏன் அத்தை... ஆப்பிள், ஆரஞ்சு விற்கிற விலைக்கு... இப்படி நாள் முழுக்க ஜூஸா போட்டு எனக்கு கொடுக்கறீங்களே...... கட்டுப்படியாகுமா?"

நந்தினிதான் அமிர்தத்தைப் பார்த்து கேட்டாள்.

"ஏய் நரேந்திரா... இங்க பார்டா இவளை!" என்று அமிர்தம் கூற...

நரேந்திரனும், ப்ரியாவும் பெரிய ஜோக்கைக் கேட்டாற் போல சிரிக்க... நந்தினிக்கு கொஞ்சம் அவமானமாய் இருந்தது.

"தப்பா ஏதாவது கேட்டுட்டேனா, சார்?" அப்பாவியாய் கேட்க...

"இல்லம்மா, நந்தினி! இந்த ஆப்பிள், ஆரஞ்சு, ஸ்டாபெரி எல்லாமே நம்ம தோட்டத்தில் விளை பவை!"

"நிஜமா?" நந்தினி கேட்க... அமிர்தம் சொன்னாள்.

"பெரிய பழத்தோட்டங்கள் இருக்கும்மா! அத்தனை பழங்களும்... லாரி லாரியா வெளி மாநிலங்களுக்கும், தமிழகம் முழுவதுக்கும் ஏற்றுமதியாகுது! டீ, காபி தோட்டம்! மதுரை வடக்கு வீதியில பெரிய ஐந்து மாடி கட்டிடம் எழுப்பறான். ஜவுளிக்கடை வைக்கப் போறா னாம். பத்தாததுக்கு வெளி மாநிலத்துல புதுசா ஏதோ தொழில் செய்ய அஸ்திவாரம் போட்டாச்சாம்!"

"அம்மா... நந்தினிகிட்ட இதையெல்லாம் சொல்லி ஏன் போரடிக்கிறீங்க?" நரேந்திரன் இடைப்புக...

"நீ சும்மா இருடா! இத்தனைக்கும் ஆள்வதற்கு வாரிசு இல்லாமல் இருந்தது! இப்போத்தான் நீ வாரிசை எங்களுக்கு பெத்து தரப் போறியே!"

நந்தினியை அமிர்தம் அணைத்துக் கொண்டாள்.

"டீ, காபி தோட்டம் மட்டும்தான் என் புருஷன் சம் பாதித்தது. நரேந்திரன் மனைவி இறக்க... முழுமூச்சா எஸ்டேட்டை கவனிச்சிட்டான். பேங்குல கடனை வாங்கி பழத்தோட்டங்களை வாங்கிப் போட்டான். பிஸினஸ்... பிஸினஸ் தான்! தூங்க மாட்டாம்மா! இத்தனை வளர்ச் சிக்கும் நரேந்திரனே காரணம்!"

"என்னைப் பற்றி பெருமையடிக்கலேன்னால்... உங் களுக்கு தூக்கமே வராதாம்மா?"



அவன் வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள் ளாமல்...

"நிம்மதியா தூங்கறான்னா... அது நீ வந்தப் பிறகு தாம்மா!"

நரேந்திரனைப் பார்க்க பாவமாய் இருந்தது.

துக்கத்தையும், துயரத்தையும், கஷ்டத்தையும் தன்னுள்ளே போட்டு புதைத்து போலி வாழ்க்கை வாழ்வது அப்பட்டமாய் அவன் கண்களில் தெரிந்தது. பெரிய சோகத்தை, வலியைப் போட்டு புதைத்துக் கொண்ட வெறியை... அவன் செயலில் காட்டியிருக்கிறான்!

அதுதான் இத்தனை உயரம் கண்டிருக்கிறான்!

தோல்வியில்தான்... பெரிய இழப்பில்தான் வெற்றி மறைந்துக் கொண்டிருக்கிறது என்பது எவ்வளவு சத்திய மான உண்மை!

"கடன்...?"

"அதெல்லாம்... ரெண்டே வருஷத்துல அடைந்து விட்டதும்மா!" என்ற அமிர்தம்...

"அம்மா நந்தினி... எங்களிடம் உள்ள சொத்தை ஆள்வதற்கு இந்த ஒரு குழந்தை போதாதும்மா! உன்னால் முடிந்தால் இன்னும் நாலே நாலு மட்டும் பெத்துக் கொடுக்க முடியுமா? பொய்யா கேட்கல, நந்தினிம்மா! நிஜமாத்தான் கேட்கிறேன்!"

நந்தினியிடம் சொல்லி அவளை ஆழப்பார்க்க...

"அண்ணி... அண்ணி... எனக்கும் அதுதான் ஆசை! அண்ணாவோட இந்த பிள்ளைக்கு விளையாட துணை யில்லாமல் போயிடக்கூடாது! என்ன அண்ணா?" ப்ரியா கண்களில் கனவுகள் விரியக் கேட்க...

'எனக்கும் ஆசைதான் ப்ரியா! உன் அண்ணாவை மணந்து... அவரோடு வாழ்ந்து... வருஷத்துக்கு ஒன்றென்று வரிசையாய் பெற்றுக் கொள்ள ஆசைதான்! ஆனால், இந்த சாமியார் என் கண்ணில் தெரியும் காதலைக் கண்டுக் கொள்ளவே மாட்டேங்கிறாரே! நான் என்ன செய்ய? என் காதலை எப்படி விளக்குவது? என் நேசத்தை எப்படி விதைப்பது?'

"என்ன அண்ணி... மௌனமாயிட்டீங்க?"

"ம்ச்... என்ன ப்ரியா கேட்டே?"

"ஏய் ப்ரியா... அவள் என்ன பிள்ளை பெறும் மிஷினா? ஆளாளுக்குப் பிள்ளையைப் பெத்துக் கொடு... பிள்ளையைப் பெத்துக் கொடுன்னு கேட்கறீங்க? வரம்பு தெரியாதா? ப்ரியாதான் அறியாதவள்! அம்மா... நீங்க அனுபவிச்சவங்க தானே? பிரசவம் என்பது பெண்ணுக்கு மறு ஜென்மம் போல என்பது உங்களுக்குத் தெரியாதா?"

நரேந்திரன் ஆத்திரத்தோடு கேட்க...

"நான் உங்கிட்டே கேட்கலே! என் கண்மணியிடம் கேட்கிறேன்! உன் வேலையைப் பார்த்துட்டு போ!" என்று நரேந்திரனைப் பார்த்து சினத்துடன் கூறிவிட்டு... "அடுத்ததாகவும் பெற்றுக் கொடுக்க சம்மதமா, அம்மா?" என்று அமிர்தம் கேட்க...

நந்தினி வெட்கத்துடன் கன்னம் சிவந்து தலைக் குனிய...

இந்த சந்தோசத்தையெல்லாம் கலைப்பதற்காகவே... அவளின் மாமன் பாண்டியன் வந்து நின்றான்.

"ஏய்... உனக்கு எவ்வளவு திமிர் இருந்தால்... இப்படி ஒரு காரியம் எனக்கு தெரியாமல் செய்யத் துணிவாய்? பய



பணக்காரன்னு தெரிஞ்சதும்... வளைச்சிப் போட்டு அனுபவிக்கலாம்ன்னு அவன் பிள்ளையை வயிற்றில் வாங்கிட்டு நிற்கறியா?"

அவன் வார்த்தை என்ற நெருப்பை அவள் மேல் வீச... அதன் சூடு தாங்காமல்...

"ஐய்யோ..." என்று அலறினாள், நந்தினி.

"ஏய்... யார்டா நீ?"

நரேந்திரன் கேட்டவாறு அவன் முன் வர...

"அதை அவள் கிட்ட கேட்டு தெரிஞ்சிக்கடா! தள்ளுடா! உனக்கும் எனக்கும் பேச்சில்லை!"

நரேந்திரனைத் தாண்டி நந்தினியிடம் சென்றான்.

"நாயே... இவனுக்கு பிள்ளைப் பெத்து கொடுக்க நீ யார்டி?"

"டேய்..... வார்த்தையை அளந்து பேசுடா! வார்த்தையில் மரியாதை இருக்கட்டும்!" நரேந்திரன் எகிற...

"நான் அப்படித்தான்டா பேசுவேன்! எனக்கு பேச உரிமையிருக்குடா! நான் யார்ன்னு நினைச்சே? இவள் அக்கா புருஷன்! என் சொந்த மச்சினி இவள்! இவளைக் கணக்கு பண்ணி... கழுத்துல ஒரு தாலிக்கயிறைக் கட்டி... என்னோடவே வச்சிக்க நினைச்சேன்! சண்டாளி... தப்பிச்சி வந்து அந்த டாக்டர் பயகிட்ட தஞ்சம் புகுந்துட்டாள். அவனும் இவள் மேல் உள்ள ஆசையில்... என்னை இவகிட்ட நெருங்க விடாமல் பாதுகாப்பு வளையமா இருந்து வந்தான். அடுத்த ஆம்பளை நீ?"

நந்தினி காதைப் பொத்திக் கொண்டு குலுங்கி குலுங்கி அழ...

"பார்த்துட்டு சும்மா நிற்கறியே, நரேந்திரா... அவனை அடிச்சி அனுப்புடா!" அமிர்தம் கத்த...

"டேய் மரியாதையா போயிடு! வம்பு வேண்டாம்!"

"என்னடா செய்வே?" பாண்டியன் கத்த...

"ஆள் முழுசா வீடு போய் சேரமாட்டே!"

"இவனுக்கு என்ன சொக்கு பொடி போட்டே? இந்த அளவு உன்கிட்ட மயங்கி துள்றான்!"

"ஐய்யோ... அத்தான்... அத்தான்... போயிடுங்களேன்!" நந்தினி கையெடுத்து கும்பிட...

"உன் அக்கா ரெண்டு பொட்டையைப் பெத்துப் போட்டுட்டு... கர்ப்பப்பையில புண்ணுன்னு எடுத்துட்டு நிற்கறாள்! எனக்கு ஒரு ஆம்பளைப் புள்ளையைப் பெத்துக் கொடுக்கணும்ன்னு நினைப்பில்லையா? கண்டவனுக்கெல்லாம் உதவி பண்ண வந்துட்டையா?"

"ஏய்... நந்தினி மாமன்காரனாச்சேன்னு பார்க்கறேன்! ஏய்... உனக்கு என்னடா வேண்டும்?"

"இவள்தான் வேண்டும்!"

நரேந்திரன் ஓங்கி ஒரு அறை விட்டு...

"விளையாடாதேடா! உனக்கு எவ்வளவுடா வேண்டும்? ஒரு லட்சம்...? பத்து லட்சம்...? ஒரு கோடி...? வேண்டியதை வாங்கிட்டு ஓடு!"

"பணம் வேண்டாம்! இவள்தான் வேண்டும்! அனுப்பனீன்னால் உன் பிள்ளையை கலைச்சிட்டு... என் பிள்ளையை சுமக்க வச்சிடுவேன்! நான் இவளை அனுப்பவிக்கணும்!"

பாண்டியன் சொன்னதுதான் தாமதம்...



நரேந்திரன் பாண்டியனை அடித்து துவைத்து விட்டான்.

"சார்... சார் விடுங்க சார்! வேண்டாம், சார்! நான் போயிடறேன் சார்! உங்களால் முடிந்தால் கொஞ்சம் பணம் போட்டு ஏதாவது தொழில் செய்ய வழி வகுத்து கொடுங்க சார்!" என்று நரேந்திரனின் காலைப் பிடித்து அலறி அழ...

"நாயே... எழுந்திரு! இதை முன்னமே ஒழுங்கா கேட்பதற்கு என்ன? எல்லா ஏற்பாடும் செய்துட்டு தகவல் சொல்றேன்! நீ போ! இங்கே இருந்து மீண்டும் நந்தினிக்கு ஏதாவது தொல்லைக் கொடுத்தே தொலைச்சிடுவேன்!"

பாண்டியன் எழுந்தான். கும்பிட்டான்.

"மன்னிச்சிக்க நந்தினி!" என்றான்.

"மதுரையில சுயதொழில் செய்ய ஏற்பாடு செய்யட்டுமாடா?" என்று நரேந்திரன் கேட்க... அவன் அழுகையோடு தலையாட்டி சென்றான்.

நந்தினி அவனுடைய வார்த்தைச் சூடு தாங்காமல் அழுது கொண்டே இருந்தாள்.

"நந்தினி... நந்தினிம்மா... அவன் போயாச்சி! இன்னும் என்ன அழுகை? இதோ பார்... உன் உடம்புக்கு ஆகாதும்மா! அழாதேம்மா!" என்று நரேந்திரன் சொன்னது தான் தாமதம்...

நந்தினி அழுகையோடு ஓடி வந்து நரேந்திரனை அணைத்துக் கொண்டாள்.

"சரி... சரி... விடும்மா!" என்று நரேந்திரன் அவள் முதுகில் தட்டிக் கொடுக்க... நந்தினியின் அழுகை இன்னும் அதிகமானது.

"நரேந்திரா... நந்தினி பயந்து போய் இருக்கா! கொஞ்ச நேரம் படுக்கட்டும்! அவளைக் கொண்டு போய் அவள் அறையில் விடு!" என்று அமிர்தம் சொல்ல...

நந்தினியை கையணைப்பிலேயே அழைத்துச் சென்றான்.

ப்ரியாவும் அவர்களோடு செல்லப் போக...

"ப்ரியா... நீ எங்கேடி போறே?" என்று அமிர்தம் அவளைப் பிடித்து இழுத்து நிறுத்தினாள்.

"விடும்மா! அண்ணி பயந்து போய் இருக்காங்க! நானும் துணைக்குப் போறேன்!"

"அதான் அண்ணன் போறானே! என் ஆசையில மண்ணை அள்ளிப் போட்டுடுவே போலத் தெரியுதே!" என்று அமிர்தம் பதற...

"என்னம்மா சொல்றே?"

ப்ரியாப் புரியாமல் கேட்டாள்.

"உனக்கு நந்தினி நிஜமாகவே அண்ணியா வரவேண்டாமா? அப்படி ஒரு ஆசையிருக்கா?"

"நிறைய... நிறையம்மா!"

"அப்போ அவங்க ரெண்டு பேரும் தனியா இருக்கும் போது நந்தி மாதிரி குறுக்கேப் போகாதே! அவளுக்கு தேவையானதை கேட்டா... நான் வாங்கித் தரேன்னு முன்னே முன்னே நிற்காதே! அவளை ஆஸ்பத்திரிக்கு, கடைக்கு, பார்க்குக்கெல்லாம் கூட்டிப் போறேன்னு நிற்காதே! அவன் கூப்பிட்டு நந்தினி சம்பந்தமான வேலையை வைத்தால்... நான் படிக்கணும்... எழுதணும்... வேலையிருக்குன்னு நகர்ந்துடு! புரியுதா? அவள்



தேவைகளை நரேந்திரன் கவனிக்கட்டும்! அவங்க ரெண்டு பேரும் தனியா இருந்தா போகாதே! அவங்க ரெண்டு பேரும் பழகட்டும்டி! அவள் நல்ல குணம் ஒவ்வொன்றாக புரிந்தால்... அண்ணா மனசு மாறி அவளை விரும்பலாம் இல்லையா?"

"அண்ணிக்கு அண்ணாவைப் பிடிக்க வேண்டாமா?"

"மண்டு... மண்டு! நீ சின்னப் பிள்ளை! உனக்கென்ன தெரியும்? அவள் அவனைப் பார்க்கும்போதெல்லாம்... கண்களில் புது ஒளி தெரியுதுடி! அவள் செயலில் நரேந்திரன் மேல் கொண்ட நேசம் தெரியுதுடி! அந்தப் பெண்ணுக்கு நம் நரேந்திரன் மேல் ஆசைதான்! ஆசையில்லாமலா... பாதுகாப்பு தேடி அவனை அணைத்துக் கொள்வாள். இப்போதாவது இந்த மரமண்டைக்கு புரியுதா?" என்று அமிர்தம் சிரித்தபடி மகளிடம் கேட்க....

ப்ரியா சந்தோச மிகுதியில் தாயைக் கட்டி முத்தமிட்டாள்.

இவர்களுக்கெங்கே தெரியப்போகிறது... இவர்களின் ஆசை பலிக்காதென்று!




நரேந்திரன் எழுதிய நாவல்களை அவன் புத்தக அலமாரியில் இருந்து எடுத்து வந்து படித்தவள்... திகைத்தாள்!

இத்தனை அழகாய் காதலை சொல்லியிருப்பவனுக்கு... என் காதல் புரியவில்லையே!

அல்லது மனைவி போன துக்கத்தில்... காதல் என்பதே என்ன என்று மறந்துவிட்டானா?

இத்தனை உணர்ச்சி பூர்வமாய் காதலைச் சொல்ல முடிந்தவனுக்கு... அவனின் காதல் பறிக்கப்பட்டது ஏன்?

'மரணம் என்ற போர்வையில் மறைந்து போன...அவன் கிருத்திகா அவனின் இதயத்தையும்... தன்னோடு எடுத்துப் போய்விட்டாளா?'

'அப்போ என் காதல்? என் காதலின் எதிர்காலம்? என் உள்ளத்திலேயே உருக்குலைந்து போக வேண்டியது தானா?'

'எதிர்காலமே இல்லாத காதலுக்காகவா இத்தனை மாய்ந்து மாய்ந்து என் இதயத்தில் மீண்டும் ஒரு தாஜ் மகாலை எழுப்பியிருக்கிறேன்!'

'என் உள்ளம் தோல்வியைத் தாங்குமா?'

'என் இதயமெனும் போர்க்களத்தில் யுத்தம் நடத்தும் நினைவுகளை யாரிடம் போய் சொல்லி.... என்னை ஆறுதல் படுத்திக் கொள்வேன்.'

'ஐய்யோ கடவுளே...'

நாளாக நாளாக பிள்ளைப் போலவே... அவள் இதயத்தில்... அவன் மேலான நேசம் பெரிதாய் வளர்ந்தது.

பாழாய்ப் போன அவளின் மனம் வேறு அவன் மார்பில் தஞ்சம் புகுந்து ஆசுவாசப்படுத்திக் கொள்ள... அடிக்கடி ஆசைப்படுகிறது.

கண்களே கரைந்து போகும் அளவு தனிமைக் கிடைத்தால் அழுது கரைவாள்.



அவளுக்கு நிலவொளி தீயாய் சுட்டது!

தென்றல் அவள் தேகத்தைத் தீண்டும்போது... நரேந்தினின் தீண்டலுக்கு ஏங்குவாள்.

விதையாகி... அரும்பாகி... மொட்டாகி... மலராகி... கனியாகி கனிந்து காதல் தந்த இன்பத்தில் நெக்குறுகித்தான் போனாள்.

காதல் தாகம் அவள் இதயத்தை வறட்டியது!

அவனின் ஒற்றைப் பார்வையில் ஓராயிரம் யுகம் வாழ்ந்த திருப்தி நிலவும்!

காதல் ஒரு இம்சை! காதல் ஒரு உயிர் அவஸ்தை! காதல் ஒரு உயிர் உலுக்கல்! காதல் ஒரு கரையான்! காதல் ஒரு சாத்தான்! காதல் ஒரு போர்க்களம்! காதல் ஒரு யுத்தம்!

காதல்... இத்தனை வடிவெடுத்தாலும் சுகமான சுகம்தான்... மயிலிறகால் வருடியது போல!

காதலிப்பது கடினமே இல்லை! அந்த காதலை காதலனிடம் சொல்வதும் கடினமில்லை.

ஆனால் அதை வெளிப்படுத்த முடியாமல்... தன்னுள்ளேப் போட்டு புழுங்கி... புதைத்து... வெந்து... நொந்து போவதுதான் இந்த உலகில் கடினம்!

அந்த கடினமான வேலையைத்தான் தினம் தினம் செய்துக் கொண்டிருந்தாள், நந்தினி.

பிள்ளை பெறும் வரை உயிரை கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்து விட்டால்... பின்னர் அவளால் அவனே நினைத்தாலும் வாழ முடியாது!

காதல் காதல் காதல்... காதல் போயின்
சாதல் சாதல் சாதல்!

அன்று விடுமுறை நாள்.

மதிய வேளையில் நந்தினி தன்னறையில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்க... நரேந்திரன் அனுமதி கேட்டு உள்ளேப் புகுந்தான்.

அவள் சட்டென்று எழுந்து அமர்ந்தாள்.

ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு... அவளெதிரே அமர்ந்தான்.

"என்ன சார்?" கேட்டாள்.

அவன் தயக்கத்தோடு கேட்டான்.

"உனக்கு ஏதாவது ஆசையிருந்தால் சொல்லேன், நந்தினிம்மா? என்ன பிடிக்கும்? எது பிடிக்கும்?"

நந்தினி தயங்கினாள்.

"என்னிடம் என்ன தயக்கம்?" அவன் புருவம் உயர்த்தி கேட்க... அந்த அழகை ரசித்துக் கொண்டே....

"நீங்க திரும்பவும் கதை எழுதணும்! அதான் என் முதல் ஆசை!"

"ஐய்யோடா... டச் விட்டுப் போச்சே! அதுவுமில்லாமல் என் பிசினஸ்ஸை கவனிக்கவே நாள் போதல! இதில் எங்கே நேரத்தை ஒதுக்கி... அதெல்லாம் முடியற காரியமில்லம்மா!"

"பழகின பழக்கம் அவ்வளவு எளிதில் மறக்காது, சார்! நேரம் போதாதுன்னு வேண்டுமானால் சொல்லுங்க. அதை ஒத்துக்கிறேன்!

அவன் யோசிக்க...



"நீங்க சும்மா கிறுக்கிப் போடுங்க, சார்! நான் அதை அழகான கையெழுத்தில் எழுதி அனுப்பிவிடுகிறேன்!"

"முயற்சிக்கிறேன்! சந்தோசமா?"

"ம்!" என்று மலர்ந்து சிரித்தாள்.

உன்னோட ஆசைகளை சொல்லலையே! நகை? புடவை?"

அவன் கேட்க... அவள் தயக்கமாய் பார்க்க...

"கமான்... டெல் மீ யா?"

அவள் கண்கள் பளபளக்க தன் ஆசையை வெளிப் படுத்தினாள்.

"எனக்கு தங்கத்திலே மெட்டிப் போட்டுக்கணும்ன்னு ஆசையா இருக்கு! சிரிக்கறீங்களே சார்! இப்போ பேஷனுக்காக... கல்யாணமாகாதப் பொண்ணுங்க கூட மெட்டிப் போட்டுக்கிறாங்க! தெரியுமா, சார்?" என்று பரிதாபமாய் சொன்ன நந்தினிக்கு பதில் சொல்லாமல் போனவன்... மறுநாள்...

அழகிய மூன்று ஜோடி மெட்டிகளோடு வந்தான்.

"சேலம் போனேனா... ஜாய்யாலுக்காஸ் பார்த்தவுடனே, உன் ஞாபகம் வந்தது. இது எனக்கு பிடிச்சமாதிரி இருக்க... எடுத்துட்டு வந்துட்டேன்! இது உனக்கு பிடிச்சிருக்கா, நந்தினிம்மா?" என்று நரேந்திரன் கேட்க...

நந்தினி ஆசையாசையாய் கண்ணீர் மினுமினுக்க மெட்டியை வாங்கிக் கொண்டாள்.

"போட்டுக்கோ நந்தினி!" அவன் சொல்ல..

அதைப் போட அவள் குனிய...

"ஏய்... ஏய்... கட்டில்ல உட்கார்ந்தே போடு!" என்றதும் கட்டிலில் அமர்ந்தாள். கால்களை மேலேத் தூக்கி வைத்து போட முயற்சிக்க... ம்கூம்... போடவே முடியவில்லை.

"சார் குனிந்தும் போட முடியாது! கட்டில்ல உட்கார்ந்தும் போடுவதற்கு கஷ்டமா இருக்கு! வயிறு இடிக்குது! என்ன செய்ய? அப்புறமா ப்ரியாவிடம் போட்டுக் கொள்கிறேன்!" என்று குழந்தையாய் சொன்னவளிடம்...

சட்டென்று சொன்னான்.

"ஏய்... இதைப்போட ப்ரியா வரணுமா என்ன? கொடு நான் போட்டுவிடுகிறேன்!" அவன் யோசிக்காமல் பேசி...

"ஐய்யோ... என் காலை நீங்க பிடிக்கணுமா? வேண்டாம்... வேண்டாம், சார்!" அவள் பதறிப் போக...

நந்தினி கெஞ்ச கெஞ்ச... பிடிவாதமாய்... அவள் கையில் இருந்த மெட்டியைப் பிடிங்கி... கால் பற்றி... அவளுக்கு வலிக்காமல் போட... அவள் உள்ளுக்குள்ளே குமுறிவிட்டாள்.

சந்தோசம் பாதி! துக்கம் பாதி!

நரேந்திரா... உன் குழந்தை என் வயிற்றில்!

உன் கையால் போட்ட மெட்டி என் காலில்!

உன் கையால் கட்டும் தாலி மட்டும் எப்போது நரேந்திரா எனக்கு கிடைக்கும்?

அவன் அறையை விட்டு அகன்றதும்... நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கதறிவிட்டாள்.

நரேந்தின் வீடு திரும்பும்போது அவனை வாசலிலேயே நின்று, எதிர்பார்த்து வரவேற்பது நந்தினிக்கு வழக்கமாகிவிட்டது.



அன்று நல்ல பனி!

கார் கேட்டினுள் நுழைந்து... குலுங்கி... ஓடுபாதையில் ஓடி... போர்டிகோவில் நிற்க... வாசலிலேயே நின்று... அவன் கம்பீரமாய் இறங்கி வருவதை மனக்காமிராவினால் படம் பிடித்துக் கொண்டிருந்தாள், நந்தினி.

"இத்தனை நேரமும் வெளியிலா நின்றாய்? உன்னை யார் வெளியே விட்டது? பனி கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது. உடம்புக்கு ஒத்துக் கொள்ளாமல் போகப் போகுது. நந்தினிம்மா! இதுதான் அம்மா உன்னைப் பார்த்துக் கொள்ளும் லட்சணமா? பொறுப்பு என்பதே இந்த அம்மாவுக்கு இல்லை! கூட்டிட்டு வாடா நான் கண்ணுக்குள்ளே வச்சி பார்த்துக்கிறேன்னு அளந்தது எல்லாம் வெறும் வார்த்தைக்குதானா? எங்கே இருக்காங்க? இந்த தடிக்கழுதை ப்ரியா எங்கே போனாள். அவர்கள்தான் வயதானவர்கள்! நேரத்தில் படுக்கணும்! இந்த ப்ரியாவுக்கு என்ன?"

"படிக்கறா! அவ மேல் தப்பில்லே! அவள் வெளியில் நிற்க வேண்டாம் என்றுதான் சொன்னாள். நான்தான் கேட்காமல்.... சும்மா... இப்போதான் வந்தேன்!" அவன் முகவாட்டம் கண்டு பயத்துடனே மெதுவாய் கூறினாள்.

"இனி, இதுபோல மடத்தனமான வேலையை செய்யாதே, நந்தினி! எனக்கு கோபம் வந்துடும்!" என்ன?"

"இனி வர்லே!"

"ஆறு மணிக்கு பிறகு ஒரு நொடி கூட நீ வெளியே நிற்கக் கூடாது!"

"ம்!"

"இப்போ நல்ல பிள்ளையாய் தலையாட்டு! அடுத்த நாள் இதே தொழிலைச் செய் என்ன?"

நரேந்திரன் கொஞ்சம் கடிந்து பேச...

"இல்லே... நீங்க இவ்வளவு சொன்னப்பிறகு வெளியில் வருவேனா? மாட்டேன்!" அவள் பொய் சொன்னாள்.

"எனக்காக காத்திருக்காதே!"

'காத்திருப்பேன்! அதுவும் காலமெல்லாம்...'

"என்ன பேசாமல் சிலையா நிற்கறே? நான் சொன்னது காதுல விழுந்ததா?"

'ம்கூம்... நீங்கள் எத்தனை முறை சொன்னாலும்... என் உயிர் இருக்கும் வரை காத்திருப்பேன்!'

"நந்தினி... இனியாவது நல்லப் பெண்ணாக பேச்சு கேளும்மா!"

'மாட்டேன்! நான் உங்களுக்காக... உங்களுக்காக மட்டுமே காத்திருப்பேன்! கண்களால் யாசித்திருப்பேன்! இதயத்தை பட்டு கம்பளமாக்கி நீங்க வருவீர்கள் என்று தவமிருப்பேன். என் உள்ளமென்ற மலர் கொய்து உங்களுக்கு அர்ச்சனைச் செய்ய... நீங்காமல் எதிர்பார்த்திருப்பேன்! என் யாசித்தலுக்கு அருள்புரிந்து ஒரு நாள் வரமாய் எனக்கு கிடைப்பாய், என் உயிரே!




ஒருநாள் கோவிலுக்கு கிளம்பி... மாடிப்படி இறங்கி வந்தான். வெள்ளை வேட்டி... வெள்ளைச் சட்டையில் அழகாய் இருக்க... எதேச்சையாய் அங்கு வந்த நந்தினி



பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையைப் பார்ப்பது போல... ஆசையாய்... அன்பைக் கண்களில் தேக்கி... அவனை முழுங்கி விடுவது போலப் பார்க்க... அதனைக் கண்டு விட்டான், நரேந்திரன்.

அவளுக்கு வெட்கத்தில் கன்னங்கள் செழுமையுற... வெட்கி, தலைகுனிந்து மறுபக்கம் நந்தினி செல்ல ஆயத்தமாகும் போது...

"நந்தினி... நில்! என்ன அப்படி ஒரு பார்வை? உன் பார்வையின் அர்த்தம் புரியலையே! தெரியலையே! ஏதாவது சொல்லணுமா?"

அவள் தயங்க...

"என்ன இது புது தயக்கம்? ம்... சொல்?" அவன் ஊக்கப்படுத்த...

"இந்த ட்ரஸ்ல ரொம்ப அழகா... அம்சமா... கம்பீரமா இருக்கீங்க, சார்! இன்று ஊர் கண்ணெல்லாம் உங்க மேல படப்போகுது. மாலை அத்தையிடம் சொல்லி சுத்திப் போடணும், உங்களுக்கு!" நந்தினி சொல்லிவிட்டு நிலம் நோக்கினாள்.

"ட்ரஸ் பண்ணிக்கணும்! அழகா இருக்கணும்ன்னு நான் ஒருநாளும் நினைச்சதில்லே! என் தோற்றத்தைப் பாராட்டியதற்கு தேங்க்ஸ், நந்தினி! நான் கோவிலுக்குப் போறேன்! நீயும் வரீயா?" நரேந்திரன் கேட்க... உடனடியாய் சொன்னாள்.

"வேண்டாம் சார்! அப்புறம் இந்தப் பெண் யார்? என்ன? என்று கேட்டு உங்களைத் தர்மசங்கடத்திற்கு ஆளாக்கி விடுவார்கள். இன்னும் சிலர் மேலேப் போய்... உங்க வொய்ப்பான்னு கேட்டு... வேண்டாம்... வேண்டாம், சார்!

நான் கோவிலுக்கு வந்து என்ன வேண்டிக்கப் போறேன்? கடவுளே... நான் சாரோட பிள்ளை நல்லபடியா வெளி யுலகைப் பார்க்கணும்ன்னு வேண்டிக்குவேன்! அவ்வளவு தானே... அதை நீங்களே வேண்டிட்டு வந்துடுங்களேன்! ம்?'' என்று நந்தினி அழகாய் தலையாட்ட...

''என் குழந்தை மட்டும் நல்லாயிருந்தால் போதுமா? அதை சுமக்கும் நீ பூரண உடல்நலத்தோட இருக்க வேண்டாமா? உனக்காக வேண்டிக்கவே இப்போ நான் கோவிலுக்கு போறேன்!''

''என்ன சொல்வதென்றே தெரியலை, சார்! உங்க அன்புக்கு நான் தகுதியானவளான்னு தெரியலே! நீங்க எல்லோரும் என்னை இந்த அளவு தாங்குவீங்கன்னு நான் கற்பனைக்கூட செய்துப் பார்க்கலே! இப்படி ஒரு வாய்ப்பை... இப்படி ஒரு சந்தர்ப்பத்தை எனக்கு தேடிக் கொடுத்த கடவுளுக்கு நான் ரொம்பவே நன்றிக்கடன் பட்டிருக்கிறேன், சார்!''

''அதுவென்ன மூச்சுக்கு மூச்சி சார்! சும்மா... நரேன்.... நரேந்திரன்னு கூப்பிடேன்!''

''ஐயோ... வயதில் பெரியவர், நீங்க! எப்படி பேர் சொல்ல?''

''உன்னை விடப் பெரியவன்தான்! அதற்காக இவ் வளவு மரியாதை கொடுக்கணுமா? நீ வயதில் சிறியவ ளானாலும்... உன் தியாகம்தான் எத்தனைப் பெரியது! ம்? உன் மனசுதான் எத்தனை முதிர்ச்சியானது! சில நேரம் உன்னையே நினைச்சிக்குவேன்... வியந்துப் போவேன், நந்தினி!''

''என்னைக்கூட நினைப்பீங்களா?''



நந்தினி வியப்புடன் விழிகள் விரியக் கேட்க...

''என்ன அப்படி கேட்டுட்டே? என் உடல் மட்டும் தான் வெளியில இருக்கும்! என் உள்ளமெல்லாம் உன்னிடம்தான் இருக்கும்! நீ எப்படி இருக்கிறாயோ? என் பிள்ளை உன்னை எந்த அளவு பாடாய் படுத்து கிறானோ...? வதைச்சி ,வாட்டி எடுக்கிறானோ...? என்று நினைச்சிட்டே இருப்பேன்!''

''இது வதையே இல்லை, சார்! உங்க குழந்தை என் வயிற்றில் அசையும் போதெல்லாம் எவ்வளவு சந்தோசப் படுவேன் தெரியுமா? இது சுகமான சுகம் சார்! இதை வார்த்தைகளால் வர்ணிக்கவே முடியாது! இதை அனுப வித்து உணரணும்! இப்படி ஒரு உணர்வை... இப்படி ஒரு போற்றுதலுக்குரிய தாய்மையை எனக்கு கொடுத்த உங்களுக்கு நான் நன்றி சொன்னால் மட்டும் போதாது, சார்!''

''பின்னே என்ன செய்யணும்?'' ஆர்வமாய் கேட்டான், நரேந்திரன்.

'நான் என்னையே உங்களுக்கு கொடுக்கணும்!'

''என்ன பேச்சே வர்லே?'' என்று அவன் கேட்க... பதி லாய் ஒரு புன்னகையை வீசிவிட்டு நகர்ந்தாள், நந்தினி.

அந்த வீடு அன்று காலையில் இருந்து சோகமாய் இருந்தது போல நந்தினிக்குத் தோன்றியது.

அல்லது நந்தினிக்கு ஏற்பட்ட வெறும் கற்பனைத் தானா?

அவர்கள் யாரும் எதுவும் சொல்லவில்லை.

நரேந்திரன் காலையில் சாப்பிடாமலேயே புறப்பட்டு விட்டான்!

கிருபாகரன் எஸ்டேட்டுக்குப் போகவில்லை!

ப்ரியா கல்லூரிக்குச் செல்லவில்லை!

அமிர்தம் அறையைப் பூட்டிக் கொண்டு படுத்து விட்டாள்.

மதியம் வரைத் தாக்குப் பிடித்தவள்... அதற்கு மேல் இயலாமல் போக... அமிர்தத்திடம் சென்றாள்.

"எல்லோரும் சோகமாய் இருப்பது போல இருக்கே? யாருக்கு? என்ன? அல்லது உங்கள் உறவுகளில் யாருக் காவது உடல்நிலை சரியில்லையா, அத்தை?"

அமிர்தம் பதில் சொல்லாமல் இருக்க...

"அத்தை சொல்லுங்களேன்! என்ன விஷயம்?"

"வேண்டாம்மா!"

"ஏன் நான் தெரிஞ்சிக்கக் கூடாதா?"

"அப்படியெல்லாம் இல்லம்மா!"

"பின்னே சொல்வதற்கென்ன?"

"இன்றுதான் நரேந்திரன் - கிருத்திகாவின் திருமண நாள்!"

"ஓ... ஸாரி... ஸாரி, அத்தை!"

"செத்துப் போனவளை நினைத்து இன்று முழுக்க சாப்பிடவே மாட்டான், என் பிள்ளை!"

அமிர்தம் அழுகையில் குலுங்கினாள்.

"அவர் வரட்டும் நான் வற்புறுத்தி சாப்பிட வைக் கிறேன்! நீங்களெல்லாம் சாப்பிடுங்க!"

"வேண்டாம்மா...!" என்ற அமிர்தம், கிருபாகரன், ப்ரியாவை நந்தினி விடவே இல்லை! வற்புறுத்தி அவர் களை உண்ண வைத்தாள்.



இரவு...

மணி எட்டாகுதே! இன்னும் அவர் வர்லையே அத்தை!" என்று நந்தினி சோகமாய் கேட்க...

"வருவானோ? மாட்டானோ?"

"வருவார், நீங்க கவலைப்படாதீங்க!"

"நந்தினி... எனக்கு செத்துப் போன என் மருமகளைப் பார்க்க வேண்டும்!"

"இருங்க! நான் போய் பூஜையறையில இருக்க... அவங்க போட்டோவை எடுத்து வரேன்!"

"இல்ல நந்தினி! நான் அவளை நிஜத்துலப் பார்க் கணும்!"

"எப்படி? எப்படியத்தை?" நந்தினி திணற... அமிர்தம் சொன்னாள்.

"நீ தூரத்துல இருக்கும் போது... உன்னைப் பார்த் துட்டு... நான் எத்தனையோ நாட்கள் ஏமாந்திருக்கேன், நந்தினி! அவள் ஜாடை உன்கிட்ட இருக்கு!"

"நான் என்ன செய்யணும்?"

"அவள் கல்யாணப் பட்டை நீ உடுத்திக்கணும்! எங்க பாரம்பரிய நகையைப் போட்டு... எனக்கு காட்டிட்டு... கலைச்சிடும்மா, நந்தினி! ப்ளீஸ்... உன்னை... உன்னை அவள் உருவமாய்தான் பார்க்கிறேன்! இப்போ அவளோட தோற்றம் கண்ணை விட்டும்... கருத்தை விட்டும் அகன் றுட்டே இருக்கு!...

கண்ணிலும் கருத்திலும் பட்டுக் கொண்டே இருப்பது தான் நினைவில் நிற்கும்ன்னு சொல்லுவாங்க! நினைத் துப் பார்த்தாலும் அந்த தோற்றம் மங்களாப் போலத்தான்

தெரியுது! தெளிவாத் தெரியலே! உன் மூலமாக அவளைக் காண வேண்டும், அம்மா!"

தன் மனதில் உள்ள ஆசைகளை அமிர்தம் வெளிப் படையாய் சொல்ல...

"நரேந்திரன் சார் வந்து முறைத்தால் என்ன செய்வது?"

"மாட்டாம்மா! திட்டமாட்டான்! என் பிள்ளை மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு!"

அவள் தயங்கி நிற்க...

பீரோ திறந்து புடவை, நகைகளைக் கையில் திணித் தாள், அமிர்தம்.

நந்தினி மறுக்க முடியாமல் போய் உடுத்திக் கொண் டாள்.

கண்ணாடி முன் நின்று அவளைப் பார்க்க... அவளா லேயே நம்ப முடியவில்லை... அவளின் தோற்றத்தை! இவ்வளவு அழகா கொட்டிக்கிடக்குது இந்த மேனியில்!

நந்தினி மேடிட்ட வயிற்றைத் தூக்கிக் கொண்டு... பட்டிலும்... அவ்வளவு நகையிலும் வந்து நிற்க... அமிர்தம் தாங்க முடியாமல் ஓடி வந்து அணைத்துக் கொண்டாள்.

கிருபாகரன் கண்கள் பளபளக்க நந்தினியைப் பார்த்து திருப்தியாய் ஒரு சோகப் புன்னகையை வீசினார்.

ப்ரியாவோ ஒருபடி மேலேப் போய்... கட்டியணைத்து முத்தமிட்டாள்.

எல்லோரும் அழுது... பின் சந்தோசித்து முடிந்ததும்...

"சரி இனி இதை கழற்றிடவா, அத்தை?"



"என்ன அவசரம்மா? அவனும் வந்து பார்க்கட்டும்மே! எவ்வளவு அழகா இருக்கே!"

"வேணாம், அத்தை! பயமா இருக்கு! அவர் 'மூட்' எப்படி இருக்குமோ! அதுவும் இல்லாமல் நொந்து இருப்பவரை... இந்த உடை இன்னும் நோக அடிக்கலாமே, அத்தை! தேவையா?"

"பத்து வருடம் பீரோவிலேயே இருந்ததும்மா! இப்படி உடுத்தினதும் அவிழ்க்கக் கூடாது! கொஞ்ச நேரம் உட் கார்! டீ.வி. பார்! அப்புறம் மாத்திக்கலாம்!"

அமிர்தம் சொல்லி டீ.வி. பார்க்க சொல்ல...

கொஞ்ச நேரத்தில்...

"அம்மா நந்தினி... எங்களுக்கு தூக்கம் வருது! போய் படுக்கறோம்! அவனுக்காக நீ காத்திருக்க வேண்டாம்மா! அவன் வீடு திரும்புவானோ? மாட்டானோ? சந்தேகம் தான்! நீயும் போய் படுத்துக் கொள்கிறாயா?"

"இன்னும் கொஞ்ச நேரம் பார்க்கிறேனே! அவர் வந்தால்... பாவம் திரும்பவும் சாப்பிடாமல் படுத்துடு வார்!"

"உன் இஷ்டம்மா!" என்று கூறி அவர்கள் சென்று விட...

டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தவள்... உடல் அசதி யாலும்... களைப்பு மிகுதியாலும் அப்படியே சோபாவில் கால் நீட்டி உறங்கிவிட்டாள்.

மனம் சரியில்லாமல் எங்கெங்கோ சுற்றித் திரிந்து விட்டு... குடித்தால் தேவலாம் போல இருக்க... பாரிற்கு சென்று குடித்துவிட்டு... தள்ளாடியபடி நரேந்திரன் பங்களாவினுள் நுழைந்தான்.

அதை அறியாமல் நந்தினி ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க...

நரேந்திரன் அருகில் வந்து... அவளை உற்று நோக்கி னான்.

அவன் கண்களுக்கு கிருத்திகா தெரிந்தாள்.

நரேந்திரன் கட்டுப்படுத்த முடியாமல்... நந்தினியின் அருகில் அமர்ந்து... அள்ளி அணைத்து... கன்னம், நெற்றி, உதடு என்று தன் முத்திரையைப் பதித்தான்.

இந்த திடீர் தாக்குதலால் கண் விழித்தவளுக்கு... தான் காணும் காட்சி கனவா? நனவா? என அறிய முடியாமல் தவித்து... அவன் தீண்டலில் குழைந்து... உருகி... நெகிழ்ந்து... அவளும் அவனை அணைத்து அவன் முகம் நோக்கிப் போக...

அவன் மேல் வீசிய மதுவின் நெடியும்... 'கிருத்திகா... கிருத்திகா...' என்ற உளறலும்... நந்தினியை விழித்துக் கொள்ள வைத்தது.

'அப்போ.... நான் உங்கள் கண்களுக்கு நந்தினியாய் தெரியவில்லையா? ஐய்யோ.... இது விபரீதமாச்சே!' என்று உணர்ந்து அவனிடமிருந்து விடுபட ரொம்பவே போராடினாள்.

இத்தனை நாள் விரதச்சரியம் காத்த அவன் உடலும், உள்ளமும் கட்டறுந்து... மூர்க்கமாகி அவளை விடாமல் மேலும் இறுக்கிக் கொள்ளப் போக...

''நான்... நா... நான்... நந்தினி! விடுங்க, நரேந்திரன்! ஐய்யோ... நான் என்ன செய்வேன்? எப்படி புரிய வைப் பேன்? நீங்க... நீங்களா இல்லையே! ப்ளீஸ்... நரேன்... நரேன்... வயிறு... என் வயிறு... வலிக்கச் செய்கிறதே!''



என்ற கதறலோடு... ஆத்திரமாய் அவனைப் பிடித்துத் தள்ள... ஆனால் அவன் விடாமல் பிடியை இறுக்க...

'நந்தினி...' என்று அணைத்திருந்தால் இந்த முரண்டு செய்திருக்க மாட்டாள்.

ரொம்பவே அந்த உடலை வைத்துக் கொண்டு போராடி... விலகி... வேகவேகமாய் படியேறிப் போய்... உள்ளேப் புகுந்து தாழ்ப்போட்டு... படுக்கையில் விழுந்து அழுதாள்!

நந்தினி விக்கி விக்கி... விம்மி விம்மி அழுதாள். அவளால் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை.

நந்தினி விடுபட்டு... வீறிட்டு அழுதுக் கொண்டு சென்ற பிறகுதான்... நரேந்திரனுக்கு அவள் கிருத்திகா இல்லை என்று தெரிந்தது!

அத்தனைப் போதையும் குப்பென்று இறங்கி விட்டது.

நிஜம் உணர்ந்தான்!

தான் எல்லை மீறியதை உணர்ந்தான்! தன் தவறைப் புரிந்தான்!

தன்னையே நினைத்து நொந்துக் கொண்டான்.

அவன் செயலுக்காய் வெட்கினான்! வேதனைப்பட் டான்!

'சற்றுமுன் எல்லை மீறியது தான்தானா?' என்று தன்னிடமே கேட்டுக் கொண்டான்.

'தன் எல்லை மீறிய... வரம்பு மீறிய செயலுக்கு என்ன காரணம்?' என்று அலசினாள்.

போதையா? ம்கூம்! இதற்கு முன்னும் சில நாட்கள் பார்ட்டிகளில் நண்பர்களின் வற்புறுத்தலுக்கு கொஞ்ச

மாய் குடித்துவிட்டு வந்திருக்கிறான்! அப்போதெல்லாம் நந்தினியிடம் இப்படி நடந்து கொள்ளவில்லையே!

எல்லா வினைக்கும் காரணம்... அந்தப் பட்டுச் சேலையும்... நகைகளும்... கிருத்திகாவின் சாயலும்தானா?

அப்படி முழுமையாய் சொல்லிவிட முடியாது!

ஏனென்றால் அதையெல்லாம் மீறி நந்தினியில் அவனுடைய கிருத்திகாவை சில நாட்களாய் கண்டதும் தான் முக்கிய காரணம்!

அதே அன்பு! அதே நேசம்! அதே பாசம்! அதே அக்கறை! அதே சாயல்! என்று எல்லாமுமாய் சேர்ந்து... கட்டுப்படுத்த முடியாத அளவு அவன் மனம்... அவள் பின்னே மெல்லச் சென்றுக் கொண்டிருந்தது.

காந்தமாய் அவ்னை இழுக்கப் பார்க்கிறாள் நந்தினி!

'எப்படி இனி நந்தினியின் முகத்தில் விழிப்பேன்? எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவளிடம் பேசுவேன்? எனக்காக தன்னையே மெழுகாய் உருகிக் கொள்ள வந்த பெண்ணிடம் இப்படி ஒரு ஒழுக்கக் கேடான செயலைச் செய்து விட்டேனே!'

'என் வாழ்க்கையில் விளக்காய் ஒளி கொடுக்க வந்தவளிடம்... இப்படி ஒரு காரியத்தைச் செய்துவிட்டேனே! கண்ணே நந்தினி என்னை மன்னிப்பாயாம்மா? உன்னில் அவளைக் கண்டேனடி என்றால் என்னை நம்புவாயா? உன்னுள் அவள் இருக்கிறாள் என்றால் என் கருத்தை ஏற்றுக் கொள்வாயா?'

'என்னுள் செத்துப் போன காதலையும்... காமத்தையும் உயிர்த்தெழச் செய்கிறாய் என்றால் நம்புவாயா?'



'உன்னைப் பார்க்காமல் இருந்திருந்தால்... உத்தமனாய் இருந்திருப்பேனே! தவறு செய்யும் சந்தர்ப்பம் அமையாதவர்கள், அத்தனைப் பேரும் நல்லவர்கள்தான்!'

'இதுவரை எத்தனைப் பெண்களைக் கண்டிருப்பேன்! அவர்கள் எல்லாம் என்னைத் தீண்டும் போது எருமை தீண்டிய கணக்காய் அருவெறுக்குமே!'

'உன்னிடம் அப்படி என்ன சிறப்பு உள்ளது? இத்தனை நாள் காத்த கண்ணியம் அனைத்தையும் ஒரு நொடியில் அசைத்துவிட்டாயே! உன்னிடம் என்ன சொல்லி மன்னிப்பு கேட்பது? உன்னிடம் எதைச் சொல்லி என் பிழையைப் பொறுத்துக் கொள்ளச் சொல்வது? என்னை எப்படி உன்னிடம் விளக்குவேன்?'

நரேந்திரன் மெதுவாய் படியேறினான்.

அறைக்கதவை தள்ள பூட்டியிருந்தது. கதவைத் தட்டினான்.

''நந்தினி... கதவைத் திற! ப்ளீஸ்... மிருகமா இப்பவும் இருப்பேன்னு பயப்படாதே!'' என்று அவன் வெளியில் இருந்து கெஞ்சவும்...

அவனின் காதல் மங்கை' பொறுக்கமாட்டாமல்... கண்களைத் துடைத்துக் கொண்டு... கதவைத் திறந்தாள்.

''என்னை மன்னிச்சிடு, நந்தினிம்மா!''

நரேந்திரன் கையெடுத்து கும்பிட்டுவிட்டு திரும்பிப் பாராமல் சென்று தன்னறைக்குள் மறைந்தான்.

இதயம் வலிக்க வலிக்க அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள், நந்தினி!




மறுநாள் எழுந்த நந்தினி எதுவுமே நடவாதது போல 'குட்மார்னிங்' சொன்னாள்.

காபி கொண்டு வந்து கொடுத்தாள்.

உணவு பரிமாறினாள்.

ஆனால், நரேந்திரனால் அவளை இயல்பாய் முன்பைப் போல நோக்க முடியவில்லை! பேசமுடியவில்லை!

நரேந்திரன் தவித்தான். அந்த தவிப்பு கோபமாய் மாறி... அம்மாவிடம் அம்பாய் பாய்ந்தது.

''அம்மா... உங்க மனசுல என்ன நினைச்சிட்டு இருக்கீங்க? நந்தினி ஒன்றும் நம் வீட்டு வேலைக்காரியில்லை! உங்களுக்கெல்லாம் ஓடிஓடி உழைக்க! அவளை எதுக்கு சமையல் கட்டுக்குள் விடறீங்க? ஏன் நீங்க வந்து பரிமாறலாம் இல்லையா? அதை விடுத்து... அப்படியென்ன உங்களுக்கு டீ.வி. கேட்குது? யாராவது ஏமாந்தால்... உங்க பாரம் முழுக்க அவங்க தலையில் ஏத்திடுவீங்க, இல்லையா?'' என்று நரேந்திரன் கோபமாய் கத்த...

அமிர்தம் புரியாமல் விழிக்க...

நந்தினிக்கு மட்டும் புரிந்தது! அவளைப் பார்க்க... அவனுக்கு குற்ற உணர்ச்சி என்று!



''ஏம்பா கத்தறே?''

''கத்தாமல்...''

''நானா அவளுக்கு வேலை வைக்கிறேன்! அவளே ப்ரியமாக செய்கிறாள்!''

''உங்க வாரிசை பெத்துக் கொடுக்க மட்டுமே... இவளை இங்கு கூட்டி வந்தேன்! அதாவது புரியுதா?''

''ஏய் நரேந்திரா... உனக்கு என்னடா ஆச்சி? ஏன் இப்படி குற்றம் சாட்டறே?''

''வயிற்றை தூக்கிட்டு இத்தனை அல்லாடறா! நீங்களும், உங்க பொண்ணும் வேடிக்கைப் பார்த்துட்டு இருக்கீங்களா?''

"ஏம்பா... டென்ஷனாகறே? ஏதாவது பீபி, ஷுகர்ன்னு வந்துடப் போகுது!'' என்று அம்மா அமிர்தம் கூற...

பாதி உணவிலேயே கையைக் கழுவிக் கொண்டு செல்ல...

''இந்த நரேந்திரன் பயலுக்கு இன்று என்ன வந்தது? எதுக்கு சத்தம் போடறான்? நேற்றைய துக்கத்திலிருந்து அவன் இன்னும் மீளவில்லையா, நந்தினி?''

நந்தினியோ கண்களில் பூத்த நீரை மறைக்க சமையற்கட்டுக்குள் சென்றாள்.

அன்று மாலை... நரேந்திரன் சீக்கிரமே வந்துவிட்டான்.

அவளின் வாட்டமான முகத்தைக் கண்டவன் நொந்துவிட்டான்.

நரேந்திரனின் சீக்கிரமான வருகையை புரியாமல் பார்த்தவளிடம்...

''தலைவலி... அதான்!'' என்று கூறிவிட்டு... மாடிக்கு ஓடினான்.

கொஞ்ச நேரத்தில் இஞ்சியும், ஏலமும் சேர்த்து டீ தயாரித்துக் கொண்டு மாடியேறினாள், நந்தினி.

அவன் நெற்றியில் தைலம் தேய்த்துக் கொண்டிருந் தான்.

டீயை நீட்ட மௌனமாய் வாங்கிப் பருகியவன்... நன்றி சொல்லிவிட்டு... போர்வையை கழுத்துவரை போர்த்திக் கொண்டு படுத்துவிட்டான்.

"நான் தைலம் தேய்ச்சிவிடவா, சார்?"

"வேண்டாம்! வேண்டாம்மா!" உடனடியாய் மறுத் தான். ஏற்கனவே அவளிடம் நெருங்கும் மனது... அவள் தொட்டால் இன்னும் சந்தோசமாகிவிடலாம்! அதற்கு பயந்தே மறுத்தான்.

அவளுக்கு அவன் படும்பாட்டை கண்கொண்டு காண முடியவில்லை. அவனை அந்த மாதிரி காண கலங்கி னாள். இதுநாள் வரை அவள் வந்தபின்னர்.... எதுவுமே வந்து படுக்காதவன், நரேந்திரன்.

"நான் நேற்றைய நிகழ்ச்சியை... அப்போதே மறந்துட் டேன்! நீங்க ஏன் மனசுல போட்டு... உங்களை குழப் பிக்கணும்? இப்படி தலைவலியை இழுத்து விட்டுக் கணும்? ம்?" என்று கொஞ்சம் மிரட்டலாகவே அவள் கேட்க... அவன் எதுவும் பேசாமல் கண்மூடி இருந்தான்.

அவள் கட்டிலில் அமர்ந்து... தைலத்தை எடுத்து... அவன் நெற்றியில் இதமாய் தேய்க்க... கண் திறந்து பார்த்த நரேந்திரன்... எதுவும் பேசாமல் மீண்டும் கண்மூடிக் கொண்டான்.

அவனுக்கு இதமாய் இருந்தது.

மலர்களை ஒன்றாக... செண்டாய் கட்டி... ஒத்தடம் கொடுத்தது போல இருந்தது.



உடம்பு சரியில்லாமல் படுத்த படுக்கையாய் கிடக்கும் போது... தாய் கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொள்வாள்! தந்தை கவலைப்படுவார்! தங்கை ப்ரியமாய் கவனித்துக் கொள்வாள்!

ஆனாலும்... ஆனாலும்... அவன் மனது ஏங்கும்! மடிமீது சாய்த்து... நேசமுடன் நெற்றியை நீவி... நெஞ்சில் ப்ரியமாய்... பாசமாய்.... அன்பாய் தட்டிவிட்டு... அணைத்து... முத்தமிட்டு... அவனைக் கட்டிக் கொண்டு... ஆறுதல் சொல்ல மனைவி இல்லையே என்று நினைத்து... எத் தனையோ இரவுகள் கண்ணீர் விட்டிருக்கிறான் நரேந் திரன்.

இரண்டு நாள் கழித்து...

அழகிய இளம் பூகம்பமாய் அவள் நுழைந்தாள். மதுமதி!

பெயருக்கு ஏற்றாற்போலவே நிலவாய் ஒளி வீசினாள். ஆனால் தற்போது ஆக்ரோஷமான சூரியனாய் நின்றாள்.

அவள் அங்கே வந்த நேரம் பார்த்து... நரேந்திரன், அமிர்தம், கிருபாகரன், ப்ரியா அனைவரும் பழனியில் உள்ள உறவினர் வீட்டுக் கல்யாணத்திற்கு சென்று இருந்தனர்.

"எங்கே அவள்? எங்கே என் சக்களத்தி? எனக்கு போட்டியாக இன்னொருத்தியா? என்ன திமிர் இருந்தால்... இப்படி என் அத்தானை மயக்கி... பிள்ளையை வாங்கிக் கொண்டிருப்பாள்!"

மதுமதி கத்திக் கொண்டே நந்தினியின் அறைக்கு வந்துவிட்டாள்.

வேலைக்காரர்கள்... பங்களாவில் வேலையில்லாத தால் தங்களுடைய வசிப்பிடத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர்.

நந்தினி மதுமதியிடம் தனியே மாட்டிக் கொண்டாள்.

"நீதான் அந்த மேனா மினுக்கியா? ஏன்டி... உனக்கு எத்தனை கொழுப்புடி? எனக்கு சொந்தமான... என் அத்தானை மயக்கி, பிள்ளைப் பெற்றுத் தரேன்னு கபட நாடகம் ஆடி உள்ளே நுழைந்திருப்பாய்? அத்தானை வெறும் காதல், கல்யாணம் என்று நெருங்க முடியாது என்று தெரிந்து... பிள்ளை பெற்றுத்தரும் சாக்கில் உள்ளே நுழைந்து... என் ஆளை அள்ளிக் கொண்டு போகப் பார்க்கிறாயா?"

'யார்? எவர்?' என்று நந்தினி புரியாமல் விழிக்க...

"என்னடி முழிக்கிறாய்? இப்படி அழகாய் ஒன்றும் தெரியாதவள் போல முழிச்சித்தான்... என் அத்தானை உன் முந்தானையில் முடிந்து வைத்திருக்கிறாயா?"

"ஐய்யோ... என்ன பேசறீங்க? நா... நான் அந்த மாதிரிப் பெண்ணில்லை!" நந்தினி நாதழுதழுக்க தடுமாறினாள்.

"பின்னே! எந்த மாதிரிப் பெண்? ம்? உன் தொழிலே இதுதானா? அழகான பணக்கார ஆண்களைக் காண வேண்டியது! மயங்குகிறானா என்று பார்க்க வேண்டியது! மயங்கலேன்னால்... அவன் தேவை என்ன என்று தெரிந்துக் கொண்டு... உதவுவது போல உள்ளே நுழைந்து... மடத்தைப் பிடித்துக் கொள்வது! அதுதானே உன் குலத்தொழில்?" பெண்ணாய் இல்லாமல் பேயாய் மாறி நந்தினியைத் தாக்கினாள், மதுமதி!

"இல்லே... இல்லே..." நந்தினி அழுதாள்.

"நடிக்காதேடி! சும்மா அழுது ட்ராமா பண்ணாதே! எனக்கு கெட்ட கோபம் வந்துடும்!" மிரட்டினாள்.

"உன் வலையில் சிக்கிய ஆண்களில்... என் அத்தான் எத்தனையாவது? ஆண்மகன்? ம்?"



"மிஸ்... மிஸ்... வேண்டாம் மிஸ்! என்னால் தாங்க முடியல!"

"நான் அப்படித்தான்டி பேசுவேன்! என் அத்தான் எனக்கு மட்டும் தான்டி! என் அத்தானை மட்டும் அபகரிச்சுக்க திட்டம் போட்டே... நாசப்படுத்திடுவேன்! பிள்ளையாடி பெத்துக் குடுக்க வந்திருக்கே? நீ எப்படி இந்த பிள்ளையைப் பெத்துக் கொடுக்கறேன்னு பார்த் துடறேன்! ஒழுங்கு மரியாதையாய் நாளைக்கு எங்கேப் போவாய்? எப்படி போவாய்? என்று எனக்குத் தெரியாது! ஆனால்... இந்த பங்களாவை விட்டு ரகசியமா... யார் கண் ணிலும் படாமல் ஓடிப் போயிடணும்! இல்லேன்னால் நான் பொல்லாதவளாகிவிடுவேன்! போவே இல்லையா?"

"மாட்டேன்... மாட்டேன்!" நந்தினி அழுகையோடு மறுக்க...

நந்தினியின் மறுப்பு... மதுமதிக்கு கோபத்தை உண்டு பண்ணியது. கண்கள் சிவந்து கத்தினாள்.

"நான் சொன்னதைச் செய்பவள்! என்னைப் பற்றி உனக்குத் தெரியாது! நாளைக்கு மட்டும் நீ இங்கே இருந்தே... உன்னையும்... உன் வயிற்றுப் பிள்ளையை யும் நானே கொன்று விடுவேன்! எப்படின்னு கேட்க றியா?" பத்ரகாளியாய் கேட்க...

நந்தினி மழையில் நனைந்த பறவையாய் வெடவெடத் தாள்.

"உன்னைக் கழுத்தை நெரித்து கொல்லுவேன். இல் லேன்னால் மாடிப்படியில இருந்து கீழே தள்ளி விட்டுடு வேன்! நீ வயிற்று பிள்ளையோட உருண்டு... உன் கண் முன்னாடி உன் குழந்தை... ரத்தமும் சகதியுமா வெளி வந்து விழுந்து கிடப்பதைப் பார்த்துட்டு... உன் உடம்புல

இருக்க மீதி உயிரும் போயிடும்! சம்மதமா? தியாகமாடி செய்யறே... தியாகம்! நீ யாருடி என் அத்தைக் குடும்பத்துக்கு வாரிசு பெத்துக் கொடுக்க? நான் ஒருத்தி குத்துக்கல்லாட்டம் காத்திட்டு இருக்கேன்! சாமியார் எப்போ இறங்கி... எனக்கு வரம் தருவார்ன்னு! அதைக் கெடுக்க இடையில வந்து புகுந்துட்டையா? இந்த அப்பாவிடம் படிச்சிப் படிச்சி சொன்னேன்! நான் வெளிநாட்டுக்கு படிக்க போகலேன்னு! இந்த புத்தி கெட்ட அப்பா கேட்டாரா? என் விருப்பத்தை நினைத்துப் பாராமல் வற்புறுத்தி அனுப்பி வச்சிட்டார்! இப்போ... எனக்கு சொந்தமான.... என் அத்தானை ஒருத்தி திருட வந்துட்டாள்! திருடி!'' கண்களை பயங்கரமாய் உருட்டி ஆவேசமாய் மதுமதி பேச...

''வேண்டாம் மிஸ்! உங்க வார்த்தைகளைத் தாங்க முடியலே! நெஞ்சே ரணமானா போல வலிக்குது!''

''திருடி... திருடி... கள்ளி... கள்ளி...! ஆயிரம் முறை கூட சொல்லலாம்! நீ செய்த காரியத்திற்கு!''

''சார் வந்ததும் சொல்லிட்டுப் போயிடறேன்!''

நந்தினி அழுகையோடு கூறினாள்.

''வேற வினையே வேண்டாம்டி! அப்படி சொன்னால் உன்னை சந்தோசமா வழியனுப்பி வைப்பாரா? அவங்க யாருக்கும் தெரியாமல் மூட்டை முடிச்சியை கட்டிட்டு ஓடிப் போகணும்! கார் சத்தம் கேட்குது! எல்லாம் வந்துட்டாங்கப் போல! அவங்க முன்னாடி வந்து கண்ணீர் வடிச்சி... நம்ம கதையை கூறினே தொலைச்சிடுவேன்! மதுமதியை கொலைகாரியா ஆக்கிப் பார்க்கணும்ன்னு ஆசையிருந்தாலும் சொல்! செய்துடலாம்!''



மதுமதி சர்வசாதாரணமாய் மிரட்டி விட்டு படியிறங்கி ஓடினாள்.

நந்தினி விம்மி விம்மி அழுதாள்.

''ஏய் மதுமதி... எப்போ வந்தே? என்ன இது சர்ப்ரைஸ்?ம்?'' என்று சொல்லிக் கொண்டு உள்ளே நுழைந்த நரேந்திரனை... மதுமதி முகத்தில் இருந்த கோபத்தை வழித்து எறிந்துவிட்டு... புன்னகையை பூசிக் கொண்டு அவனருகில் ஓடினாள்.

அவள் கைகளை மாலையாக்கி அவன் கழுத்தைச் சுற்றிக் கொண்டாள்.

''இப்போதான் வந்தேன், அத்தான்! ஒரு ஐந்து பத்து நிமிடங்கள் கூட ஆகியிருக்காது! நந்தினியைப் போய் ஆசையாய்ப் பார்க்கப் போனால்... என்னை அவள் ஏமாத்திவிட்டாள். கதவை தாழ்போட்டுட்டு நல்லா தூங்கறாள். நல்ல தூக்கம் போல! பாவம்!''

ப்ரியாவைப் பார்த்துக் கேட்டாள், மதுமதி.

''உன் படிப்பு எப்படிப் போகுது?''

''பரவாயில்லை!'' என்று வேண்டா வெறுப்பாய் சொன்னாள், ப்ரியா.

''ஆன்ட்டி... அங்கிள் நலமா?'' சொல்லியவாறே ஓடிப்போய் அமிர்தத்தைக் கட்டி முத்தமிட்டாள்.

பின்னர் நரேந்திரன் தோளை அணைத்தவாறே... அவனோடே சுற்றினாள்.

இரவு நந்தினியை சாப்பாட்டிற்கு அழைக்க...

நந்தினியோ அழுதழுது முகம் வீங்கி... சோகமாய் வர...

''என்ன நந்தினி முகம் வாட்டமா இருக்கு? முடியலையாம்மா? சொல்லும்மா?'' என்று நரேந்திரன் நந்தினியைப்

பார்த்து உருகியது மதுமதிக்கு எரிச்சலை உண்டு பண்ணியது.

"நரேந்திரா... பிரசவ நாள் நெருங்க நெருங்க... பெண்கள் அதையே நினைத்து, பயந்து, இப்படித்தான் சோகமா இருப்பாங்க! அவளைக் கேள்வி கேட்டு தொல்லைப் பண்ணாதே! அவள் சாப்பிடட்டும்! நந்தினி அள்ளி நல்லா சாப்பிடும்மா!" என்று அமிர்தம் பாசமாய் சொல்ல... கண்கள் பொங்கியது.

"அம்மா நந்தினி... இது என் அண்ணாப் பெண்! பேர் மதுமதி! பாரின்ல படிக்கிறாள்! நீ இன்னும் இவளைப் பார்க்கலே இல்லையா? நல்ல பாசமான பொண்ணும்மா!" என்று மதுமதியை அமிர்தம் அறிமுகம் செய்ய...

"அண்ணி.... அம்மா சொல்வதை நம்பாதீங்க! இவள் சரியான கிரிமினல்! வம்புக்காரி! ராட்சசி! அடுத்தவங்க சந்தோசமா இருந்தால் இவளுக்கு பிடிக்காது! இல்லையா, மது?" என்று ப்ரியா கேட்க...

மதுமதிக்கு முகமே செத்துவிட்டது.

'ஆமாம்... ஆமாம்... இவள் கிரிமினல்தான்!' என்று ஓங்கி வேகமாய் கத்த வேண்டும் போல வெறி வந்தது, நந்தினிக்கு!

"என்ன ப்ரியா... இப்படியா நாகரீகம் இல்லாமல் நடந்துக் கொள்வாய்?"

நரேந்திரன் அதட்ட... ப்ரியா வாயை மூடிக் கொண்டாள்.

"ஆன்ட்டி... நான் உங்களோட படுத்துக்கிறேன்!" என்று அமிர்தத்தின் கழுத்தை மதுமதி கட்டிக் கொள்ள...

"அப்பா... நான் தப்பிச்சேன்!" என்றாள் ப்ரியா நிம்மதியாக...



"ஏய் ப்ரியா... அதுயென்ன அவளைப் போய் அண்ணி என்று அழைக்கிறாய்? ம்?" என்று அதட்ட....

"எனக்கு அவங்களை அப்படி கூப்பிட பிடிச்சிருக்கு. நான் கூப்பிடறேன்! உனக்கென்ன? உன் வேலையைப் பார்த்துட்டு போவீயா?"

மதுமதியைப் பார்த்து ப்ரியா எகிற...

இதையெல்லாம் காணாதவள் போல... நந்தினி அங்கிருந்து மாடிக்கு திரும்பினாள், நிம்மதியைத் தேடி!

அங்கும் அவளுக்கு நிம்மதி கிடைக்காது எனத் தெரியாமல்!




பூமித்தாய்... தன் உடலில் இரவுப் புடவையைச் சுற்றிக் கொண்டாள். ஆங்காங்கே பொட்டுப் பொட்டாய்... பட்டின் ஜரிகையாய் சோடியம் விளக்குகள் மின்னின!

கொடைக்கானல் அமைதியுடன் தூங்கிக் கொண்டிருக்க...

நரேந்திரன் தூக்கம் வராமல்... தோட்டத்துப் பக்கம் சுற்றிவிட்டு படுப்பதற்கு தன் அறைக்கு செல்லும் முன்... நந்தினியின் வீறிடல் அவன் காதுகளுக்கு எட்ட.... தாழ்போடாமல் மூடியிருந்த கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே ஓடினான்...

''நரேந்திரன்... உங்க குழந்தை... உங்க குழந்தை...'' என்று படுக்கையில் உட்கார்ந்து... வயிற்றைத் தொட்டு அலறினாள்.

''ஏய் நந்தினி... நந்தினிம்மா... என்ன? என்னடாம்மா? நந்தினிம்மா... இங்கே பார்!'' என்று அவளருகில் நரேந்திரன் அமர்ந்து... அவள் தோளைப் பிடித்து உலுக்க... நந்தினியோ மிரண்ட பார்வையுடன்... அவனைத் தாவி கட்டிக் கொண்டாள்.

உடம்பு அனலாய் சுட்டது. தன்னுணர்வு இல்லாமல் அலறி வெடவெடத்தவளை... கெட்டியாய் பிடித்துக் கொண்டு...

''என்னம்மா...?'' என்று நரேந்திரன் கேட்க...

''உங்க குழந்தை... நம்ம குழந்தை... என் குழந்தை... ஐய்யோ... போச்சே! ஐய்யோ... ரத்தமும்... சதையுமா... உருவில்லாமல் உருக்குலைந்து செத்துப் போச்சே! படியில இருந்து தள்ளிட்டாளே! எத்தனை முயற்சித்தும் என் குழந்தையைக் காப்பாத்த முடியலையே! நரேன்... நரேன்... நானும், குழந்தையும் செத்துட்டோம்... செத்துட்டோம்! சாகடிச்சிட்டாள்!'' என்று கத்தி வீறிட்டு அழ...

''நந்தினி... நந்தினிம்மா... இங்கே... இங்கே பார்டா! என்னடா... என்னடா... சொல்றே? நீ சாகலேடா! என் குழந்தையும் சாகலே! கனவு கண்டியா என்ன? இங்கே பார்... முழிச்சிக்கோ... முழிச்சிக்கோம்மா...!'' என்று அவளை அவன் அணைப்பிலிருந்து விடுவித்து... தூக்க முயற்சிக்க...

''என்னை விட்டு போயிடாதீங்க, நரேன்! ப்ளீஸ் நரேன்... எனக்கு பயமா இருக்கு! ப்ளீஸ் நரேன்... எனக்கு பயமா இருக்கு! கடைசி கடைசியா என் உயிர் போகும் போது என் அருகிலேயே இருங்க!''



''நீ நல்லா இருக்கம்மா! நந்தினி:... நந்தினிம்மா... சுரத்தின் கடுமையில பிதற்றறியா? விழிச்சிக்கோம்மா!'' என்று அவள் கன்னம் தட்ட... லேசாய் சுயநினைவு வந்தாலும் ஆறுதல் தேடி... பாதுகாப்பை நாடி... அவன் மார்பில் முகம் புதைத்தாள். குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

''யார்...? யார் உன் குழந்தையை கொல்லப் பார்க்கறா?'' அவன் மெதுவாய் கேட்க...

''அவ... அவ... மது... மதுமதி!''

அந்தப் பெயரைச் சொல்லும் போதே உதடெல்லாம் நடுங்கி... இமை மூடியவாறே...

''நரேன்... நரேன்... என்னை அவகிட்ட இருந்து காப்பாத்துங்க! அவகிட்ட இருந்து என்னைக் காப்பீங்களா?'' என்று கேட்டவாறே அழுகையோடு நந்தினி அவனை அட்டையாய் ஒட்டிக் கொள்ள...

அவள் முகம் நெஞ்சில் புதைந்தும்... அவள் மார்பு அவன் வயிற்றோடு ஒட்டியும்... அவன் உடல் முழுக்க... அவள் உடம்பு பட்டு... வெப்பமேறியது, அவனுக்கு!

அவள் வயிறு... அவன் மேல் பட்டு... ஒருவித சிலிர்ப்பை உண்டு பண்ணியது!

அவள் பயத்தில்... 'என்ன செய்கிறோம்?' என்று அறியாமல் அவனை இறுக்கி அணைத்துக் கொள்ள...

நரேந்திரனால் கட்டுப்படுத்த முடியவில்லை!

அவளை ஆசையாசையாய் இறுக்கி அணைத்துக் கொள்ள மனமும், கையும் பரபரத்தது!

அவன் முகத்திற்கு அருகே இருந்த... அவளின் மூடிய இமை சிப்பியும்... பிறை நெற்றியும்... ஆப்பிள் கன்னமும்... செர்ரீ உதடும்... அவனின் ஆசையை மேலும் தூண்டின!

அவனைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஆறுதலாய்... அவனின் முதுகில் தட்ட..... அவள் அழுகையை நிறுத்தி... அப்படியே அவள் நிம்மதியாய் உறங்கிவிட...

நரேந்திரன் நிம்மதியை இழந்தான்.

மனதிற்குள் ஆசை அலைகள் பொங்கி எழுந்து, ஓங்கி, உயர்ந்து, அவனை துவசம் பண்ண..

இது நல்லதில்லை என்று உணர்ந்து மெதுவாய்... அவளை படுக்கையில் போட... அவள் தலையை தன் மார்பிலிருந்து தூக்க... நந்தினி விழித்துக் கொண்டாள்.

அவனின் ஆண்வாசம் ஒருவித மயக்கத்தைத் தந்தது! அவனின் மார்பில் இருந்த மெத்தென்ற முடி... அவளின் கன்னத்தில் கிச்சுகிச்சு மூட்டி... ஒருவித சுகத்தைத் தந்தது! அவனின் வாசமான மூச்சுக்காற்று ஒருவித பரவசத்தைக் கொடுத்தது!

அவன் தன்னை இறுக்கிக் கொள்ள மாட்டானா என்று ஏங்கும் அளவு அவள் உடம்பு தகிர்த்தது! அவனுடைய அகன்ற நெஞ்சில்... தாயின் இறக்கைக்குள் புதையும் கோழிக்குஞ்சியாய் மீண்டும் அண்டிக் கொண்டாள்.

அவன் சுவாசமும்... அவள் சுவாசமும் கலந்து காதல் பேசின!

"நந்தினி... நந்தினிம்மா... நல்ல சுரம் போல! என்னை விட்டால்... நான் போய் மாத்திரை எடுத்து வருவேன்!"

நரேந்திரன் கூற... நந்தினி அவனை விட்டுவிட்டு தள்ளி அமர்ந்தாள்.

அவன் முகம் பார்க்க நாணினாள். நாக்கு வரள...

"தண்ணீர்... தண்ணீர்... நாக்கு வரளுது சார்!" என்று கேட்க...



அருகில் இருந்த... தண்ணீர் பாட்டிலில் இருந்த... நீரை டம்ளரில் நிரப்பி... சிறு குழந்தைக்கு புகட்டுவது போல புகட்டினான்.

நந்தினி குடித்து முடித்ததும்... அவள் வாயினை துடைத்து விட... அவள் உதடு துடித்தது.

அவன் கன்னத்தில் முத்தமிட ஆசை வர... கண்கள் பளபளக்க... அவனையேப் பார்க்க...

"என்ன?"

"ம்கூம்!"

"என்ன இது வித்தியாசமான பார்வை? ம்?"

அவள் மௌனமாய் தலை குனிய...

"என்ன நினைச்சே?"

'உங்களை முத்தமிட ஆசை!' தொண்டை வரை வந்த வார்த்தைகளை கஷ்டப்பட்டு விழுங்கி வைத்தாள்.

"என்னம்மா... பயந்திட்டியா? அவள் மிரட்டினாளா?" அவள் மௌனம் காக்க...

"சொல்லும்மா? சொன்னால்தானே தெரியும்!" என்று பற்றுதலாய் கேட்க...

மறைக்க முடியாமல் "ம்...!" என்று தலையாட்டினாள்.

"நாளைக்கு அவள் இங்கே இருக்க மாட்டாள்! பயம் வேண்டாம்! ரொம்பவே உடம்பு படுத்துதாம்மா? மதுமதி மிரட்டியதில் அதிகமா அழுதியா? அதான் சுரம் வந் துடிச்சா?"

அலமாரியில் இருந்த சுரம் மாத்திரையை பிரித்து... அவள் வாயில் போட..... கஷ்டப்பட்டு விழுங்கி வைத் தாள், நந்தினி.

"உனக்கு நிறைய கஷ்டம் கொடுத்துட்டேன்! இல்லையாம்மா?"

"இல்ல... இல்ல, சார்!" அவள் மறுத்தாள்.

"ஆண்கள் மீது வெறுப்பு கொண்டு... ஆண்களையே பிடிக்காமல் இருந்த உன்னை இப்படி என்னோட பழக வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கிட்டேன், இல்லையா? அதை நினைத்தால் வேதனையாய் இருக்கு, நந்தினி!"

அவன் முகம் வாடி சொல்ல...

'எனக்கு இப்போ ஆண்வாசம் பிடிக்கும், நரேன்! அதுவும் உங்க வாசம் மட்டுமே! என் உயிரைத் துளைத்து... என் உள்ளத்துள் கிளர்ச்சியைச் செய்யும்... உங்க ஆண் வாசம் ரொம்பவே பிடிக்கும், நரேன்! நீங்க அன்பாய்... ப்ரியமாய்... பரிவாய் என்னை அணைக்கும் அணைப்பு ரொம்பவே பிடிக்குது, நரேன்! உங்க மார்பில் புதையும் போது நிம்மதியா இருக்கு, நரேன்! உங்க அருகாமை எனக்கு பயத்தை போக்குது, நரேன்! உங்கள் குழந்தையை சுமக்கிறேன் என்ற காரணத்திற்காக... என்மீது நீங்கள் அன்பாய் இருந்தாலும்... என் மனம் கள்ளத்தனம் செய்கிறது! கள்ளியாய்... உங்களோடு இருக்கும் போது சந்தோசத்தை உணர்கிறேன், நரேன்! கள்ளத்தனம் செய்யும் மனதிற்கு என்னால் கடிவாளம் போட முடியவில்லையே, நரேன்! நான் என்ன செய்ய?'

"உனக்கு ஏழேழு பிறவிக்கும் நன்றி உள்ளவனாய் இருப்பேன், நந்தினி!"

'இல்லை நரேன்! நான்தான் உங்களுக்கு நன்றி உள்ளவளாய் இருப்பேன்! மடச்சியாய் ஆண்கள் அத்தனைப் பேரையும் கெட்டவர்கள், அரக்கர்கள் என்று எண்ணி இருந்த எண்ணத்தை மாற்றி... வாழ்க்கையை



புயலாய் நினைத்து புலம்பிக் கொண்டிருந்த, எனக்கு... 'வாழ்க்கை ஒரு பூந்தோட்டம்... பூந்தென்றல்... என்று புரிய வைத்த புனிதன் நீ! தாய்மை என்ற மகத்தான உணர்வை உணர வைத்த உத்தமன் நீ! உங்கள் குழந்தையை ஈன்று எடுத்து... உங்களிடம் கொடுத்துவிட்டு... எப்படி உங்களை விட்டு பிரிவேன், நரேன்?'

"என்ன நந்தினி? பயம் போகலையா என்ன? நீ படுத்து கொள்கிறாயா? நான் விடியும் வரை அந்த நாற்காலியில் அமர்ந்து இருக்கட்டுமா?"

"வேண்டாம்... வேண்டாம், சார்!"

"இதுவரை நரேன்! இப்போ சாரா? ம்?" என்று புருவம் சுழித்து கேட்டு... கன்னத்தில் குழி விழ சிரித்துவிட்டு... நரேந்திரன் அறையை விட்டு வெளியேற...

நந்தினி தூக்கம் வராமல் புரண்டாள்.

'அவர் அவராய் இருக்க... நான் மட்டும் நானாய் இல்லையே!"

'அவரை நான் அணைத்த போது என் உள்ளம் துள்ளியது போல... அவள் உள்ளமும் துள்ளி குதியாட்டம் போட்டிருக்குமா? அப்படி ஒரு சுவடே தெரியவில்லையே! அப்படி ஒரு உணர்வு ஏற்பட்டதற்கான அடையாளமே காணலையே!'

'மனதை மறைக்கத் தெரிந்த மாயவித்தைக்காரனா? அல்லது நான்... என் உடல்... அவனுக்கு சலனத்தை ஏற்படுத்தவில்லையா?'

அவனும் உறங்காமலேயே படுக்கையில் புரண்டான்.

'நந்தினி... என்னுள் காதல் விதையை எப்போது விதைத்தாய்? எப்போது நீர் பாய்ச்சினாய்? காதல் விதை

முளைவிட்டு... செடியாகி... மரமாகி... விழுதாகி... மொட்டு விட்டு... மலர்ந்து... மணம் பரப்பி... உனக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறதே! என் இதயத்தில் பூத்த காதல் பூவை சூடிக் கொள்ள வருவாயா, நந்தினி?'

'வறண்ட பாலைவனமாய் இருந்த என் மனம்... இன்று சோலைவனமாய் தளிர்த்து... செழித்து... காட்சியளிக் கிறதே... அது உனக்குத் தெரியுமா, நந்தினி?'

'எனக்கே தெரியாமல்... என்னை உன்னிடம் ஒளித்து வைத்துவிட்டாயே, நந்தினி!'

'சிந்தை கலங்காமல்... நேர் பாதையில் சென்ற என்னை நேசப் பாதையில் பயணிக்க வைத்துவிட்டாயே... இது உனக்கே சரியாய் படுகிறதா, நந்தினி?'

'என் கண்ணிலும்... கருத்திலும்... என் கிருத்திகாவாய் தோன்றி இம்சிக்கிறாயே, நந்தினி!'

'உன் அருகாமை சற்றுமுன் என்னை கொன்று விட்ட தடி!'

'உன் கள்ளப்பார்வை என்னைப் பைத்தியக்காரனாக் குதடி!'

'மரணித்து இருந்த என் இதயத்தை... மீண்டும் உயிர் பிழைத்தெழ வைத்த என் இனியவளே... என் கண்ணே... என் சிந்தனையே,... என் சித்திரமே....'

'என்னையும்... என்னுயிரையும் உருக்கி... உன்னுள் ஒளித்துக் கொண்ட.... என் உள்ளம் கவர்ந்த கள்ளியே... என் ஜீவனை வயிற்றில் சுமக்கும் உனக்கு... என்னையும் உன் இதயத்தில் சுமக்க சம்மதமா, நந்தினி?'

'உன்னிடம் என் காதலை எப்படிச் சொல்லுவேன்?'



'எப்போது உன்னிடம் மயங்கினேன் என்று தெரிய வில்லையே! ஆக மொத்தத்தில் நான் மயங்கியது, நிஜமே!'

'உன்னைக் கண்டதே வரமாய் நினைக்கிறேனே...! உனக்கும் அவ்வாறு ஒரு நினைப்பு உள்ளதா, நந்தினி?'

நரேந்திரன் புலம்பியவாறே... விடியலை நோக்கி விழித்திருக்க...

விடிந்தவுடன் நேரே மதுமதியிடம் போனான்.

''இன்னும் ஐந்து நிமிடம் தரேன்! அதற்குள் என்ன? ஏது என்று கேட்காமல்... வந்த வழியே திரும்பி பாராமல் செல்ல வேண்டும்! என் தாய் மாமன் பெண்ணாச்சேன்னு உன்னைத் தண்டிக்காமல் விடறேன்! இல்லே... உன்னை...'' என்றவன் வார்த்தையை முடிக்காமல் புயலாய் அவ்விடம் விட்டு நகர...

அதைக் கண்ட நந்தினி சந்தோசமானாள்.




நரேந்திரனின் ஆபீஸ் வேலையில் உதவ நந்தினிக்கு ஆசை வந்தது.

அவன் வேலை முழுக்க கம்ப்யூட்டரில்தான்!

கம்ப்யூட்டரில் அரிச்சுவடி கூடத் தெரியாது, நந்தினிக்கு!

''ப்ரியா... உனக்கு ஓய்வு கிடைக்கும் போது எனக்கு கம்ப்யூட்டர் பயிற்சி கொடுக்கிறாயா? எனக்கும் கம்ப்யூட்டர்

பற்றித் தெரிந்துக் கொள்ள ஆசையா இருக்கு! அதைவிட உன் அண்ணாவுக்கு உதவுணும்ன்னு எண்ணமிருக்கு! அதனால் கொஞ்சம் சிரமம் பாராமல் சொல்லித் தருகிறாயா?''

நந்தினி ப்ரியாவிடம் கெஞ்ச...

அமிர்தம் ப்ரியாவைப் பார்த்து கண்களால் 'வேண்டாம்' என்று ஜாடைக் காட்ட... அதைப் புரிந்து கொண்ட ப்ரியாவோ...

''போங்க அண்ணி! எனக்கு வேற வேலையில்லையா? நான் படிக்கணும்! இது எனக்கு பைனல் இயர் என்பது மறந்துடிச்சா? எனக்கு எங்கே நேரம்? உங்களுக்கு ஆசையாய் இருந்தால் கம்ப்யூட்டர் சென்டருக்கு சென்று கற்றுக் கொள்ளுங்கள்!'' என்று வேகமாக நரேந்திரனின் காதில் தெளிவாய் விழும் வண்ணம் சொன்னாள்.

''ப்ளீஸ் ப்ரியா... கொஞ்சம் உதவக் கூடாதா?''

''வேண்டுமானால் சென்டரில் சேர அண்ணாவிடம் அனுமதியும், பணமும் வாங்கித் தருகிறேன்! அவ்வளவு தான் என்னால் முடியும்! அதற்கு மேல் எதையும் என்னிடம் எதிர்பார்க்காதீர்கள்!''

ப்ரியா முகத்தில் அடித்தாற்போல பேச.. நந்தினி முகம் வாடி எழுந்து செல்ல... நரேந்திரன் அழைத்தான்.

''நந்தினி...''

கண்களில் நீர் தளும்ப அருகில் வந்தவளைக் காண மனம் சட்டென்று இளகியது.

''கம்ப்யூட்டர் பயிற்சிதானே...? அதை நான் உனக்குக் கற்றுத் தருகிறேன்! இரவு உணவு முடிந்ததும் என் ஆபீஸ் அறைக்கு வந்துவிடு! அவள் பெரிய அறிவாளி என்று



மதித்து கேட்டது... அவளுக்கு கிரீடம் வச்சாப்போல ஆகியிருக்கும்! இப்போ கொஞ்ச நாளா தலைக்கணம் நிறைய வந்துடிச்சி, அவளுக்கு! அவகிடக்கா அரைகுறை கிறுக்கி!'' என்று ப்ரியாவை முறைக்க...

ப்ரியாவோ உள்ளுக்குள்ளே மகிழ்ந்துப் போனாள்.

அன்று இரவே அவன் அவளுக்கு கற்றுத் தந்தான்! ''இது மவுஸ்! இது மானிட்டர்!...'' என்று விளக்கினான்.

''அப்படியில்லை.... இப்படி... இப்படி மவுஸைப் பிடிக்கணும்'' என்று பிடித்துக் காட்டினான்.

இரவு குளிக்கும் பழக்கம் கொண்டவள், நந்தினி.

அவள் அப்போதுதான் மைசூர் சாண்டல் சோப்பைப் போட்டு உடலைக் கழுவி... கோகுல் சாண்டல் பவுடர் போட்டு... 'கமகம' வாசனையோடு இருந்தாள்.

அந்த வாசனையும்... அவள் மேல் இயல்பாய் வீசிய பெண்மையின் வாசமும் போட்டிப் போட்டுக் கொண்டு அவன் சுவாசத்தைத் தாக்கி... அவள் மேல் விரல் பட்ட வினாடியெல்லாம் தவித்துப் போனான்.

தினம் தினம் இந்த அவஸ்தையோடு போராடுவான்!

அவளுக்கோ சொல்லவே வேண்டாம்! அவனையே நினைத்து மயங்கும் மனது... அவனருகில் இருந்தால் கள் குடித்த கணக்காய் மயங்கித் தவித்தது.

தினம் தினம் அவள் அந்த நேரத்துக்காகத் தவமிருந்தாள்.

முழுமையாகக் கற்றுத் தேர்ந்த போது... 'ஏன் சீக்கிரம் கற்றோம்?' என்று தன்னையே நொந்துக் கொண்டாள்.

அவன் மறுக்க... மறுக்க... அவன் வேலையில் பகிர்ந்துக் கொண்டாள்.

கொஞ்ச நாளில்...

ஆமதாபாத்தில் புதிதாய் தொடங்க உள்ள தொழிற் சாலை சம்மந்தமாக... உடனடியாய் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதால்... ஆபீஸில் இருந்தவாறே... விமான நிலையம் சென்று... அடுத்த ப்ளைட்டில் ஏறிச் சென்றான்.

நரேந்திரனின் பரபரப்பான நேரங்கள்!

வீட்டிற்கு போன் செய்து சொல்லக் கூட அவகாசம் இல்லை.

அதிகாரிகளைச் சந்தித்துப் பேசிவிட்டு... மறுநாட் களும் வேலையிருப்பதால்... அங்கேயே உள்ள பெரிய ஓட்டலில் தங்கினான்.

இரவு வெகு நேரம் அவன் வராமல் போக... தவிப் போடு நரேந்திரனுக்காக காத்திருந்தாள்.

அமிர்தம், கிருபாகரன் அவரவர் அறைக்குள் நுழைந்து தூங்கிக் கொண்டிருக்க...

நந்தினியும் ப்ரியாவும் டீ.வி. பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

''ப்ரியா... நான் அண்ணா! ஆபீஸ் வேலையா ஆமதாபாத்ல இருக்கேன்!''

''என்னண்ணா நீ? சொல்லாமல் கொள்ளாமல் இப்படி யாப் போவது? அப்படி என்ன அவசர வேலை?'' ப்ரியா கடிந்துக் கொள்ள...

''அரசு அதிகாரி இன்று மதியம் 3.00 மணிக்கு அப் பாய்ன்ட்மென்ட் கொடுக்க... அதைவிட்டால் தள்ளித் தள்ளிப் போகும், ப்ரியா! அதான்!''

''ட்ரஸ் கூட எடுத்துட்டு போகலையே!''

''ரெடிமேட்ல வாங்கிக்கறேன்!''



''எப்போ வருவீங்க?''

''வேலை இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் முடிஞ்சிடும்! வந்துடறேன்!''

'நரேந்திரன் ஆமதாபாத் சென்றிருக்கிறாரா? என்ன மனிதன் இவர்? சொல்லாமல் கொள்ளாமல்...' நந்தினிக்கு சுறுசுறுவென கோபம் வந்தது.

'எதற்கு இந்தக் கோபம்? ஏன் இந்தக் கோபம்?' என்று யோசிக்க... 'அவனைப் பாராமல் இருக்க முடியாதே!' என்ற நினைப்புதான் கோபத்திற்குக் காரணம்!

''சரி... நந்தினி எங்கே? உடம்பு நல்லாயிருக்கா? ஏதும் ப்ராபளம் இல்லையே? ஏதாவது என்றால் உடனே கௌதமைத் தொடர்பு கொள்ளுங்க ப்ரியா!''

''நீ கவலைப்படாதேண்ணா! அவர்களை நான் நன்றாகப் பார்த்துக் கொள்கிறேன்! அவர்கள் வயிற்றில் இருப்பது உன் குழந்தை மட்டுமில்லே! என் மருமகனும் கூட! எனக்கும் அக்கறை இருக்குண்ணா!''

''சரி நந்தினிகிட்ட பேசணுமே!''

''இதோ உடனே...'' என்று நந்தினியைப் பார்க்க... 'தான் இல்லையென்றும்... குளித்துக் கொண்டிருப்பதாய் சொல்லச் சொல்லி ஜாடைக் காட்ட.....

'நந்தினி ஏன் இப்படி சொல்லச் சொல்கிறாள்?' என்று புரியாமல் முழித்து... பின்...

''அண்ணா... அவங்க இங்கே இல்லையே! குளிப் பாங்க போல!''

''சரி வச்சிடறேன்! நந்தினியை பத்திரமா பாத்துக்கடா, ப்ரியா! அவள் சாப்பிடலேன்னாலும் வற்புறுத்தி சாப்பிட வை! என் பிள்ளையை நான் இல்லேன்னதும் பட்டினி போட்டுவிடாதே! புரியுதா?''

"பிள்ளை மேல் ரொம்பத்தான் அக்கறை! அக்கறை பிள்ளை மேலா... அல்லது..." என்று ப்ரியா இழுக்க...

"நான் கேட்டேன்னு சொல்லு! திரும்பவும் போன் பண்றேன்! இல்லேன்னால் நந்தினியை விட்டு எனக்கு போன் செய்யச் சொல்! செய்வாயா?"

"சரி... கட்டாயமாய்!" போனை வைத்துவிட்டு நந்தினி அருகில் சென்றாள்.

"அண்ணி... அண்ணா எவ்வளவு ஆசையாய் உங்களை கூப்பிடச் சொன்னார். தெரியுமா? ஏமாத்திட்டீங்களே! ஏன்?" என்று சிறுபிள்ளையாய் கேட்டவளிடம்...

"ஒண்ணுமில்லே!" என்று மழுப்பிவிட்டு அவள் அறைக்குச் சென்றாள்.

ஒரு மூச்சு பிழியப் பிழிய அழுதாள்.

இரண்டு, மூன்று நாட்களே பிரியமுடியவில்லையே! பிரசவம் முடிந்து நிரந்தரமாய் எவ்வாறு பிரிவாள்? எவ்வாறு அவனின்றி உயிர் வாழ்வாள்?

இந்த கேள்விகளுக்கு கடவுள்தான் பதில் சொல்ல வேண்டும்.




மறுநாள் காலை பதினோரு மணியிருக்கும்... அத்தனை சேனல்களிலும் சிறப்பு அதிர்ச்சிச் செய்தியாய்... அந்த செய்தியை வாசித்தனர்.



"இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை முடக்கச் செய்வதற்காக பெங்களூரு, ஆமதாபாத், ஜெய்ப்பூர், மும்பை, ஐதராபாத் ஆகிய நகரங்களை குறி வைத்து... குண்டு வைத்து தாக்குதல்களை... அடுத்தடுத்து தாக்கியுள்ளனர்.

தகவல் தொழில் நுட்ப நகரமான பெங்களூரு தாக்குதலைத் தொடர்ந்து குஜராத்தில் மக்கள் நடமாட்டமுள்ள இடங்களான மருத்துவமனை, பஸ்நிலையம், பாலம் என பல்வேறு பகுதிகளைத் தேர்ந்தெடுத்து பயங்கரவாதிகள் குண்டு வெடிப்பு தாக்குதலை நடத்தியுள்ளனர்.

குஜராத் தலைநகரமான ஆமதாபாத் நகரில் தொடர் குண்டு வெடிப்பில் நூறு பேர் மரணம்! ஆயிரத்திற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஆமதாபாத் பகுதிகளான மணிநகர், இஷான்பூர், நரோடா, சரங்பூர், காடியா, ராய்ப்பூர், மெகானி நகர், பாபு நகர் முதலிய இடங்களில் நிகழ்ந்த குண்டு வெடிப்பால் ஆமதாபாத் நகரமே உறைந்து போய் இருக்கிறது. போலீஸோடு... ராணுவமும் வரவழைக்கப்பட்டு... அவசர உதவிகள் போர்க்கால நடவடிக்கையாய் செய்யப்படுகிறது."

செய்தி கேட்டு நந்தினி பயத்தில் உறைந்து போய் இருந்தாள்.

அமிர்தம் நந்தினியின் முகம் போன போக்கை கவனித்து...

"என்ன நந்தினி? ஏன் நரேந்திரன் ஆமதாபாத்தில் இருப்பதால் அவனுக்கு ஏதாவது ஆகியிருக்குமோன்னு பயப்படறீயா?"

"ஆமாம்" என்று கண்ணீர் வழிய தலையாட்டினாள்.

"நரேந்திரனுக்கு ஒண்ணும் ஆகாது நந்தினி! எதுக்கு வீணா கவலைப்படறே?"

"அத்தை... அத்தை..." என்று நந்தினி அழ...

"என் பிள்ளைக்கு ஒண்ணும் ஆகாதும்மா! உன் பயம் போக வேணா... போன் பண்ணி கேட்டுடலாம்!" என்று அமிர்தம் போன் செய்ய...

"ஸ்விட்ச் ஆப்' என்று மறுமுனையில் இருந்து செய்தி வந்தது.

அமிர்தம் சாதாரணமாய்... "பயப்படாதேம்மா! மீண்டும் கொஞ்ச நேரம் கழித்து ட்ரைப் பண்ணலாம்! அவன் அதிகாரிகளோட கூட பேச்சு வார்த்தையில் இருக்கலாம்!" என்று சொல்ல...

நந்தினி தோட்டத்துக்குச் சென்று... தனிமையில் நரேந்திரனை நினைத்துக் கதறினாள்.

பின் அமிர்தத்திடம் வந்து...

"நான் கௌதம் அண்ணாவைப் போய்ப் பார்த்துவிட்டு வரட்டுமா?" என்று அனுமதி கேட்க...

"தாராளமா போயிட்டு வாம்மா!"

"கார் வேண்டாம்! ஆட்டோவில போகட்டுமா?"

"ஐய்யோ... நம்ம வீட்டுல ஏகப்பட்ட கார் இருக்க... எதுக்கு ஆட்டோவுல போகணும்? நரேந்திரனுக்கு தெரிந்தால் கத்துவான்!"

"நான் சௌகரியமா போயிட்டு மெல்ல வரலாம்ன்னு நினைக்கிறேன்!"

"சரி போய் வா! இது ஒன்பதாவது மாதம் பார்த்தும்மா! உடனே வந்துட முயற்சி செய்!" என்று சொல்லி அமிர்தம் அனுப்ப...



நந்தினியோ கௌதமையும், தீபிகாவையும் பார்க்க செல்லாமல்...

பழனி செல்வதற்காக பஸ் ஏறி கொடைக்கானலை விட்டு இறங்கிக் கொண்டிருந்தாள்.

'முருகா... முருகா... என் நரேந்திரனைக் காப்பாற்று! நரேந்திரனுக்கு ஒன்று என்றால் நான் உயிரோடே இருக்க மாட்டேன்!' என்று கண்மூடி பழனி ஆண்டவனை வேண்டிக் கொண்டு வர...

நந்தினியின் அருகில் இருந்த வயதான பெண்மணி...

"நிறைமாதம் போல தெரியுதேம்மா! யார் துணையும் இல்லாமல் எங்கேப் போறே?" என்று பாசமாய் கேட்க... கண்களில் தளும்பி நின்ற நீரை சுண்டிவிட்டு...

"பழனி மலைக்கும்மா!" என்றாள், நந்தினி.

"நிஜமாவா தாயீ? உனக்கு யாரும் சொல்லி தரலையா? என்ன தாயீ...? நிறைமாத கர்ப்பிணி மலையேறிப் போகக்கூடாது, தெரியுமா?"

"நான் முருகனைப் பார்க்கணும்!" என்று அழுதாள். "நான் முருகனோட காலடியில் விழுந்து கதறி அழணும்மா!"

"அதெல்லாம் கூடாதும்மா! வேணா ஒண்ணு செய்! பழனிமலை அடிவாரத்திலே கும்பிட்டு விட்டு திரும்பிடு! அது வேணா செய்யலாம்! சொல்றதை கேளு தாயீ! உனக்கு அப்படி என்ன கஷ்டம், தாயீ?" என்று கேட்க... வாயில் முந்தானையை அடைத்து அழுகையைக் கட்டுப்படுத்தினாள்.

அடிவாரத்திலேயே அழுது தீர்த்துவிட்டு... இரவு பங்களாவிற்கு போக... அமிர்தம் பிடித்துக் கொண்டாள்.

"நந்தினி... நீ கௌதமைப் பார்க்க வர்லேன்னு சற்றுமுன் அவன் சொல்ல பயந்துட்டேன், தெரியுமா? எங்கேப் போன? சொல்லு நந்தினி?" என்று கொஞ்சம் மிரட்டலாய் கேட்க...

"ஒரு ப்ரண்டைப் பார்த்தேன்! அவள் வற்புறுத்தி அழைக்க... அவள் வீட்டுக்கு போனேன், அத்தை!"

"நரேந்திரன் போன் செய்தாம்மா! காலையில நீ அந்த பயம் பயந்தியே! தேவையா? சொல்லு? அவன் உன்னைக் கேட்க... நீ கௌதம் வீட்டுக்கு போனேன்னு சொல்ல... எதுக்கு தனியா அனுப்பனீங்கன்னு சத்தம் போட் டான்ம்மா!"

நரேந்திரனுக்கு எதுவும் ஆகவில்லை என்று அமிர்தம் சொல்ல நிம்மதியானாள்.

பின்...

'ரொம்பத்தான் என் மேல் அக்கறை' என்று கோபம் கொண்டாள்.

நரேந்திரன் வருவதாய் தகவல் வர...

நந்தினியோ மீண்டும் அடம் பிடித்து... ஆஸ்பிட்ட லுக்கு சென்றாள்.

கௌதம், தீபிகாவோடு பேசிவிட்டு... தன்னறையின் சாவியைக் கேட்டு வாங்கியவள். 'இரவு இங்கேத்தான் தங்கப் போறேன்!' என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

நரேந்திரனோ நந்தினியின் பிரிவுத்துயர் தாளாமல்... அவசர அவசரமாய் வேலை முடித்து வந்தவன்... பங்களாவில் நந்தினியைக் காணாமல் போக...

"நந்தினி எங்கேம்மா?" தவிப்போடு கேட்டான்.



"சொல்லச் சொல்ல கேட்காமல்... அடம் பிடித்து தீபி காவையும், கௌதமையும் பார்க்கப் போறேன்னு போயிருக்கா!" அமிர்தம் சொல்ல...

"நான் எவ்வளவோ சொன்னேன் அண்ணா. அவங்க தான் கேட்கலே! ஸாரிண்ணா!" என்று ப்ரியா வருந்தி னாள்.

நரேந்திரன் எதுவும் பேசாமல் காரைக் கிளப்பிக் கொண்டு கிளம்பினான்.

நரேந்திரன் அங்கே சென்று கௌதமைக் கூட பார்க் காமல்... நேரே நந்தினியின் இருப்பிடம் சென்றான்.

நந்தினி முகம் வாடி, வதங்கி, சோகமே உருவாய் படுத்திருக்க... அருகில் வந்து நின்றவனைக் கண்டவள்... முதலில் ஆச்சரியமாய் நோக்கி... பின் அதிர்ச்சியானாள்.

சட்டென்று எழுந்தமர்ந்தாள்.

நான்கு நாட்களாய் பார்க்காத தவிப்பும், ஏக்கமும், கஷ்டமும், வருத்தமும், சஞ்சலமும் இருவரின் முகத் திலும் பிரதிபலிக்க... ஒருவரை ஒருவர் விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவன் முகத்தில் நான்கு நாட்களின் தாடி!

நரேந்திரனின் கண்களில் கொஞ்சம் கோபச் சாயலும் கலந்திருந்தது!

"நந்தினி கிளம்பு!" என்றான், மிரட்டலாய்!

"நான் நாளை வரேன்!" என்று தலை குனிந்து சொல்ல...

"அநாதையாய் இங்கே இருக்கணும்ன்னு தலை யெழுத்தா என்ன? உனக்கு என்ன கோபம்?" பட்டென்று கேட்க...

''எனக்கு எந்தக் கோபமும் இல்லே!'' நறுக்கென்று வந்த பதிலில் அவளின் கோபம் தெரிந்தது.

''கோபம்தான்! இல்லையா?''

''உங்க மேல் கோபிக்க எனக்கென்ன உரிமை யிருக்கு?''

''வீட்டுக்கு வந்து உன்னிடம் சொல்லியிருந்தால்... நான் ப்ளைட்டை மிஸ் பண்ணி இருப்பேன்! சந்திக்க வேண்டிய நபரை சந்திக்காமல் போயிருக்கும்! வேலை யும் முடிந்து இருக்காது! உன்னிடம் சொல்லாமல் சென்ற தற்கு என்னை மன்னிக்க வேண்டுகிறேன்! நிறைமாத கர்ப்பம்! இப்பவோ... அப்பவோன்னு இருக்கும் போது... எப்படி உன்னை தனியே விடுவது?''

''ஆஸ்பிட்டல்தானே எனக்கு இப்போ பாதுகாப்பு?''

''இதுயென்ன வீண்விதண்டாவாதம்? ம்? சொன்னால் கேட்கணும். நந்தினி! வயதில் பெரியவனின் பேச்சை கேட்கணும்! எழு! வா போகலாம்!'' என்று அவள் கரம் பற்றி எழுப்ப...

அந்த தீண்டலில், நந்தினி நெகிழ்ந்து... நரேந்திரனின் பின்னால் போனாள்.

அடுத்த நாள்...

தோட்டத்தில் அமர்ந்திருந்த நந்தினியிடம் ப்ரியா சென்றாள்.

''உங்க கிட்ட கொஞ்சம் மனசு விட்டு பேசணும்! பேசட்டுமா?'' என்று புதிர்போட...

''என்ன?'' என்று ஒற்றைச் சொல்லில் கேட்டாள், நந்தினி.



''அண்ணி... அண்ணாவை விட்டு... எங்களையெல் லாம் விட்டு... பிரசவம் முடிந்து நீங்க போகக் கூடாது! நீங்க அண்ணாவை நேசிக்கறீங்க தானே? உங்க பார்வை... செயல்... அத்தனையும் எங்க அண்ணாவை நேசிப்பதை சொல்லுது! பொய் மட்டும் சொல்லாதீங்க? சொல்லுங்க? நீங்க எங்க நரேந்திரன் அண்ணாவை விரும்பறீங்க தானே?''

ப்ரியா கேட்க... நந்தினி மறைக்காமல் சொன்னாள்.

''யெஸ் ப்ரியா! ஆனால் அவரிடம் இருந்து எந்த குறிப்போ... வெளிப்பாடோ தெரியலையே! உங்க அண்ணன் முகத்துல இருந்து என்னால் எதையும் புரிஞ்சிக்க முடியலையே!''

''நானே கண்கூடாக் கண்டேன், அண்ணி! நேற்று நீங்க பங்களாவுல இல்லேன்னதும் அண்ணாவின் முகம் வாடிவிட்டது! ஒரு நொடி கூட தாமதிக்காமல்... உங் களைப் பார்க்க ஓடி வந்தாங்க! எல்லாம் காதலால் தானே?''

''எப்படி நம்புவது? அவர் பிள்ளை என் வயிற்றில்! அதன் மேல் உள்ள அக்கறையாகக் கூட இருக்கலாம் இல்லையா?''

''நீங்க அவரை நேசிக்கறேன்னு சொன்னது மட்டும் போதும், அண்ணி! அண்ணாவிடம் நான் பேசறேன்! உங்கள் அபரீதமான காதலை அவரிடம் விளக்கறேன்!''

''வேணாம், ப்ரியா! ஒரு பெண் நேசிக்கிறாள் என்பதை விட... ஒரு ஆடவனால் நேசிக்கப்படுகிறாள் என்பதில் தான் பெருமையே! முழுமையே! நான் உங்க அண்ணா வால் நேசிக்கப்படணும்!''

''அண்ணா.... தன் காதலை வெளிப்படுத்தக் கூடத் தயங்கலாம், இல்லையா?''

''எதுக்கு ப்ரியா? எதுக்கு? அவர் ஆண்! ஒரு ஆண் நேசத்தை வெளிப்படுத்த எதுக்குத் தயங்கணும்? எதுக்கு வெட்கப்படணும்? அவராக தன் வாயால் என்னை நேசிக்கறேன்னு சொல்லணும், ப்ரியா. அதில்தான் எனக்கு சந்தோசமே! இது நேசம் ப்ரியா! அந்த நேரம் இந்த நெஞ்சை உடைச்சிட்டு வரணும்!'' என்று தன் நெஞ்சைத் தொட்டுக் காட்டினாள்.

''நிஜமாகவே உன் அண்ணா என்னை நேசித்தால்... அந்த நேசம் வெளிப்படும்! வெடிச்சிட்டு என் மேல் காதல் பொழியும்! அதில் நான் சந்தோசமாய் சிறகை விரித்து ஆட்டம் போடுவேன்!''

''எப்போ? எப்போ அண்ணி? உங்களுக்கு பிரசவ நாள் நெருங்கிடுச்சி! ஆனால் அண்ணா எதையும் வெளிப் படுத்தலையே! தேவதையாய்... புதையலாய்... அன்பின் மறுஉருவாய் வந்த உங்களை இழந்திடுவோமோன்னு பயமா இருக்கு! என்னால் தாள முடியலை! ப்ளீஸ்... அண்ணாகிட்ட பேசுங்களேன்!'' என்று கண்ணீரோடு ப்ரியா கெஞ்ச...

''என் முடிவை மாற்றிக் கொள்வதா இல்லை!'' என்று அடித்துச் சொல்ல...

''ப்ளீஸ்...''

''இது காதல் ப்ரியா... இது நேசம் ப்ரியா! இதை வரமாத்தான் பெறணும்! நான் நேசிக்கிறேன் ப்ரியா! என் நேசத்தின் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு! ஒருநாள் என் நேசம் வெல்லும்! என் காதல் கை கூடும்! என் கனவுகள் பலிக்கும்! என் கற்பனைகள் உயிர்த்தெழும்! அதுவரைக் காத்துட்டு இருப்பேன், ப்ரியா!''

''ப்ளீஸ் அண்ணி... நீயா...? நானா?ன்னு காதலில் ஈகோ வேண்டாம்! அண்ணா... ஏற்கனவே காதலிச்சி ஒரு



பெண்ணை மணந்து வாழ்ந்தவர்! அதனால்கூட அவர் தன் நேசத்தை வெளிப்படுத்த வெட்கப்படலாம், இல்லையா?''

''நீ சின்னப் பெண்! உலகம் புரியாதவள்! நீ படி! நல்லாப் படி! கண்டதில் மூளையைப் போட்டு குழப்பிக்காதே! எது நடந்தாலும் நல்லதற்கே என்று நினை!''

''ஐய்யோ...''

''உன்னைவிட எனக்குதான் ப்ரியா தவிப்பு, கலக்கம், கஷ்டம், வேதனையெல்லாம்! ஆனால் நான் அதை கொஞ்சமாச்சும் வெளிக்காட்டறேனா? போம்மா... போ! போய் சந்தோசமா இரு!''

''அப்பாவும், அம்மாவும்... நீங்க வீட்டை விட்டுப் போனால் தாங்கவே மாட்டாங்க! அவங்களுக்கும் ஆசைதான்!''

''இந்த எண்ணம்... உங்க அண்ணாவுக்கும் கொஞ்சம் இருக்கணும், தெரியுமா?''

ப்ரியா வாயை மூடிக் கொண்டாள்.

ப்ரியாவின் வாயை அடைத்த திருப்தியில் நந்தினி அவ்விடம் விட்டு அகன்றாள்.




நந்தினி வலி எடுத்து ஆஸ்பிட்டலில் அனுமதிக்கப் பட்டாள்.

நரேந்திரனுக்கு செய்தி போய்... காட்டாறு வெள்ளமாய் வந்து சேர்ந்தான்.

நந்தினி உயிரே போய்விடும் அளவு வலியில் கத்தினாள்.... கதறினாள்... வீறிட்டாள்... துடிதுடித்தாள்.

நரேந்திரனோ அனலில் விழுந்த புழுவாய் துடிதுடித்துக் கொண்டிருந்தான்.

வயிற்றுப்பிள்ளை வரம்பு இல்லாமல் வளர்ந்து இருக்க... பிரசவம் ரொம்ப சிக்கலாகியது.

கன்னிப் பெண் வேறு! கணவனோடு வாழ்ந்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கே பிரசவம் சிக்கலாய் இருக்கும் போது... இளம் வயது கன்னிப் பெண்ணான நந்தினிக்கு பெரும் சிக்கலாய் இருந்தது.

தீபிகா போராடினாள்.

''நந்தினி... மனசை தளர விடாதேடா! ஒத்துழைடா! நீ முயற்சி செய்தால்தான் முடியும்!''

''வலி உயிரையே போக்குது! தாங்க முடியலையே! என்னால முடியல... ஐய்யோ...'' நந்தினி அலறினாள்.

''முயற்சி பண்ணும்மா! ப்ளீஸ் நீ ஹெல்ப் பண்ணினால்தான் முடியும்! நீயும் ஒரு நர்ஸ்! எத்தனை டெலிவரி கேஸ் பார்த்திருக்கிறாய். உனக்குத் தெரியாதது இல்லை! உன் கண் முன்னாடி எத்தனை டெலிவரி நடந்திருக்கு! எப்படி புத்திசாலித்தனமாய் நடந்து இருக்கிறாய்! இப்போ எங்கேப் போச்சு அந்த தைரியம், வீரமெல்லாம்?''

''எனக்கென்று வரும்போது முடியலையே! அதற்கு முன் ப்ரியா, அமிர்தம் அத்தையைப் பார்க்கணும்! ப்ளீஸ் ஹெல்ப் பண்ணுங்க!'' அழுகையோடு தீபிகாவிடம் கெஞ்ச...



கொஞ்ச நேரத்தில்... ''நந்தினி... நந்தினிம்மா... என் கண்ணே...'' என்று அமிர்தம் அழைத்துக் கொண்டு அருகில் வந்தாள்.

தீபிகா அவ்விடம் விட்டு நகர்ந்தாள்.

''அத்தை... அவர் குழந்தையை நல்லபடியா பெறுவேனோ மாட்டேனோன்னு பயமா இருக்கு! எனக்கு அச்சமா இருக்கு! நான் சாகறதுக்கு முன்ன... உங்கப் பேரப் பிள்ளையை ஆபரேஷன் பண்ணி... நல்லபடியா எடுத்துக்குங்க! தீபிகா அண்ணிகிட்ட சொல்லி எனக்கு ஆபரேஷன் பண்ணச் சொல்லுங்க! நான் சொன்னால் அவங்க கேட்க மாட்டாங்க!''

''உனக்கு ஒண்ணும் ஆகாதுடாம்மா! நீ என் பேரப் பிள்ளையைப் பெத்து... ஆரோக்கியமா, மீண்டும் என் வீட்டுக்கு வருவே! வீட்டுக்கு வாசப்படி இருக்க வாசல் வழியேத்தான் வெளியே போகணும்... வரணும்! அதை விடுத்து சுவற்றை இடிச்சிட்டு... வெளியே வரக் கூடாதுடா, நந்தினி! தப்பு! முயற்சி பண்ணலாம். முடியலேன்னால் பிறகு பார்க்கலாம்!''

அமிர்தம் சொல்லிவிட்டு வெளியேற... ப்ரியாவும் அழுகையோடு நடக்க... அவள் கையை கெட்டியாய் பிடித்து தடுத்து நிறுத்தினாள், நந்தினி.

''பயப்படாதீங்க, அண்ணி! உங்களுக்கு ஒண்ணும் ஆகாது!'' ப்ரியா சொல்ல...

''நான் எதுக்கு உயிரோடு இருக்கணும்?''

''அப்படி சொல்லாதீங்க, அண்ணி!''

''நான் யாருக்காக உயிரோடு இருக்கணும்! எனக்குன்னு யார் இருக்கா? எனக்கு குழந்தை மட்டும் நல்லபடியாப் பிறந்தாப் போதும்!''

நந்தினி அழுகையோடு கூற...

''அண்ணாவிடம் பேசட்டும்மா? உங்க நேசத்தின் அளவை கூறட்டுமா?''

''வேணாம்... வேணாம் ப்ரியா! கெஞ்சிப் பெறக் கூடாது ப்ரியா. அதுவும் இல்லாமல் நான் பெத்து பிழைப்பேனோ? மாட்டேனோ? எதற்கு வீணா அவரையும் குழப்பணும்? விட்டுடு ப்ரியா! என் விதி இது! என் நேசம் என் நெஞ்சுக்குழியோடே அழியப் போகுது! என் காதல் உன் அண்ணாவுக்கு தெரியாதே அணையப் போகுது!''

''மனம் தளராதீங்க, அண்ணி!''

''ப்ரியா... நான்... எனக்கு அவரை கடைசி... கடைசி யாய் பார்க்கணும், ப்ரியா!''

''ஐய்யோ... கடைசின்னு ஏன் சொல்றீங்க? அண்ணா வும் நீங்களும் சேர்ந்து வாழத்தான் போறீங்க!?''

''உன் வார்த்தை பலிக்காது, ப்ரியா!''

அதற்கு மேல் நந்தினி நினைவிழந்து கண்களை மூட... ப்ரியா அலற...

தீபிகாவும் இன்னும் பிற நர்ஸுகளும் ஓடி வந்தனர்.

ப்ரியா போய் விஷயத்தைச் சொல்ல...

நரேந்திரன் உயிர் பதைபதைக்க ஓடிவந்தான்.

''நந்தினி.. நந்தினி... கண்ணை திறம்மா! ஐய்யோ! நந்தினி... எங்கள் பேராசைக்காக... உன்னை சிலுவை சுமக்க வச்சிட்டேனே! என் வம்சம் தழைக்க... உன்னை பலிகடாவா ஆக்கிட்டேனே!''

நந்தினியின் காதில் அவன் குரல் ஒலிக்க... லேசான மயக்கத்திலேயே...



''குழந்தை... உங்க குழந்தை... அதை மட்டும் ஆப ரேஷன் பண்ணி எடுத்துக்கங்க, நரேன்! நரேன்... நான் செத்துடுவேன், நரேன்! நாம் பட்ட பாடெல்லாம் வீணாகக் கூடாது! குழந்தையைக் காப்பாற்றுங்க, நரேன்!''

''தீபிகா... தீபிகா... ஏதேதோ புலம்பறாளே! நந்தினியை காப்பாற்று, தீபிகா!''

நரேந்திரன் தீபிகாவின் கைப்பற்றி கெஞ்ச...

''அவளுக்கு ஒண்ணும் ஆகாது! நீ வெளியே போ!''

நரேந்திரனை அனுப்ப... வெளியே வந்தவன் வராண் டாவில் கிடந்த ஷோபாவில் பொத்தென்று விழுந்தான்.

கண்களைத் துளைத்துக் கொண்டு கண்ணீர் வந்தது, நரேந்திரனுக்கு!




நீண்ட நேரப் போராட்டத்துக்குப் பின்... நந்தினியின் பெரிய அலறலைத் தொடர்ந்து... குழந்தையின் வீறிடல் கேட்க...

அங்கே இருந்த அத்தனைப் பேரும் மகிழ்ந்தனர்.

நரேந்திரன் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை!

எல்லாமும் முடிந்து... தீபிகா வெளியே வர... அவர்கள் உள்ளே நுழைந்தனர்.

அழகான பூக்குவியலாய் 'கொழுக் மொழுக்' என... அழகான ஆண் குழந்தை தொட்டிலில் படுத்திருந்தது.

நந்தினிக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை!

அச்சு அசல் நரேந்திரன்தான்!

சின்னமணிக் கண்களை உருட்டி... கையை காலை உதைத்து வீறிட்டு அழுதது.

அமிர்தம் தூக்கி வைத்து கொஞ்சினாள்.

ப்ரியா முத்தமிட்டு முத்தமிட்டு மகிழ்ந்துப் போனாள்.

நரேந்திரன் குழந்தையைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து வியந்து போனான்.

அம்மாவும் ப்ரியாவும் அகன்றதும்...

நரேந்திரன்... அந்த பொக்கிஷத்தை தனக்கு பரிசாய் கொடுத்த நந்தினியை... அன்போடு பார்த்து... ஆசை மிகுதியில்... அவளின் பளிங்கு கன்னத்தில்...

தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் முத்தமிட குனிந் தான்.

சட்டென்று இது தவறு என்று அவனின் மனம் அறிவுறுத்த... முத்தமிடும் முயற்சியைக் கைவிட்டு... தன்னை அடக்கிக் கொண்டு வெளியேறினான்.

இரண்டு மணி நேரம் கழித்து நந்தினிக்கு விழிப்பு வந்தது.

''நன்றி நந்தினி...'' என்று உணர்ச்சி வசப்பட்டு நந்தினியின் கைப்பற்றிக் கொண்டான்.

தீபிகா உள்ளே நுழைய அவளின் கையை அவசரமாய் விட்டான்.

'' என்ன நரேன்... ரொம்ப சந்தோசமா?'' என்று கேட்க...

''ம்...'' என்று தலையாட்டினான், நரேந்திரன்.

கௌதம் உள்ளே நுழைந்தான்.



''தீபிகா... மூணாவதா நாம முயற்சி பண்ணனும்!''

''எதுக்கு?''

''பெண் குழந்தைக்குத்தான்! ஒரு பெண்ணைப் பெற்றால்தானே... நரேந்திரனின் பயலுக்கு கட்டி வைத்து... நரேந்திரனை சம்மந்தியாக்க முடியும்!'' என்று கௌதம் சிரிக்க...

''புத்தி போகுது பாரு!'' என்று தீபிகா கௌதமின் தாடையில் இடிக்க...

இவர்களின் விளையாட்டை இருவருமே கண்ணெடுக் காமல் ரசித்துக் கொண்டு இருந்தனர்.

''நந்தினி... உனக்கு தாய்ப்பால் சுரக்காமல் இருக்க... ஒரு ஊசிப் போடணும்மா! நீ உடனடியாய் குழந்தையை பிரியும் போது... மார்பில் தாய்ப்பால் கட்டி விபரீதத்தை விளைவிக்காது!'' என்று தீபிகா சொல்ல...

''என்ன அவசரம்? எல்லாம் பிறகு பார்த்துக் கொள்ள லாம்!''

நரேந்திரன்தான் சொன்னான்.

கௌதம், தீபிகா இருவரும் ஒருவரை ஒருவர் அர்த்தத் தோடு பார்த்துக் கொண்டு... அவர்களை தனியே விட்டு விட்டு நகர்ந்தனர்.

இருவரிடையே பேசாத மௌனம்.

அவன் பேசட்டும் என்று அவளும்...

அவள் பேசட்டும் என்று அவனும் மௌனம் காத்தனர்.

'குழந்தையோடு எனக்கு நீயும் வேண்டும் நந்தினி!' இப்படி அவன் சொல்வான் என்று நந்தினி எதிர்பார்க்க...

'உங்களைப் பிரிந்து என்னால் போக முடியாது!' என்று அவள் சொல்லுவாள் என்று நரேந்திரன் எதிர்பார்க்க...

இருவரின் எதிர்பார்ப்பும் ஏமாற்றத்தில் முடிந்தது.

இன்று சொல்லுவான்... நாளை சொல்லுவான் என்று எதிர்பார்த்த நந்தினிக்கு மனது குமுறியது!

அவன் சொல்லவே இல்லை!

குழந்தையை தூக்கி, அணைத்து, அமுதூட்டும் போது... 'இந்த குழந்தையை எப்படிப் பிரிவேன்?' என்று கண்ணீர் விட்டாள்.

ஆஸ்பிட்டலில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி... பங்களா விற்கு சென்றாள், நந்தினி!

அந்த வீடு அவளுக்கு முள்ளின் மேல் நிற்பதாய் பட்டது.

வயிற்றுக்குள் குழந்தை இருந்த போது உரிமையாய் இருந்தவள்... குழந்தை பிறந்தவுடன் அங்கே இருக்க... அந்த வீட்டு உணவை உண்ண... உயிர் அவஸ்தையாய் இருந்தது!

தனக்கு எந்த சொந்தமோ... பந்தமோ அற்ற இடத்தில் இருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டு நந்தினியை அலைக்கழித்தது!

அந்த அலைக்கழிப்பு அவளுள் கோபத்தை உண்டு பண்ணியது!

அந்த கோபம் அவளை அங்கிருந்து வெளியேறத் தூண்டியது.

அமிர்தம், ப்ரியா, கிருபாகரன் மூவரும் கோவிலுக்கு சென்றிருந்த நேரம் பார்த்து...

நரேந்திரனின் அறைக்கு வந்தாள் நந்தினி! அன்று விடுமுறை தினம் என்பதால்... அவன் கம்ப்யூட்டரில் ஏதோ வேலையாய் இருந்தான்.



நந்தினி மெல்ல கனைக்க... நரேந்திரன் திரும்பிப் பார்த்தான்.

"என்னம்மா?" என்று கேட்க...

"குழந்தை என்னோட ரொம்ப ஒட்டிக் கொண்டால்... அது என்னைப் பிரிந்து இருப்பது கடினம், சார்! அதுபோல நானும் அதைப் பார்த்துப் பார்த்து... அதன் பாசத்தை உணர்ந்து... அப்புறம் குழந்தையைப் பிரிந்து வாழ்வது சிரமம்! அதனால் நான் குழந்தையை உங்ககிட்ட ஒப் படைச்சிட்டு கிளம்பலாம்ன்னு இருக்கேன்!"

நந்தினியின் சொற்கள் ஒவ்வொன்றும் அவன் தலையில் அணுகுண்டாய் விழுந்தது.

"என்ன அவசரம்?" என்றான்.

"நான் கிளம்பறேன்! என் முடிவை மாத்திக்கிறதா இல்லை!"

அவள் அவ்வாறு சொல்ல... சட்டென்று கோபம் எழுந்தது அவனுள்.

"சரி போ!" என்றான்.

நந்தினி ஆடிப்போனாள், அவன் சொற்களில்!

சட்டென்று கண்கள் மழையாய் கண்ணீரைக் கொட்டப் பார்த்தது.

'ச்சே! என்ன மனிதன் இவன்? என்னிடம் ஏற்பட்ட பாதிப்பு, ஏக்கம், ஏகாந்தம் போல அவனிடம் எதுவும் ஏற்படவில்லையா?'

'இவன் இதயம் கல்லால் ஆனது! இரும்பு இதயமாய் இருந்தால் கூட வெப்பப்படுத்தினால் இளகிவிடும்! இது கனிவே இல்லாத கல்! என்ன செய்தாலும் இளகாது!'

'மனமே... மனமே... இவனை மற! இவன் மேலான நேசத்திற்கு நெருப்பு வை! அதை விட்டு உனக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறேன்! உன் பிரிவைத் தாங்க முடியாது என்று இவன் முன்பு அழாதே!'

கண்ணீரைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள்!

ஆனால் இதயத்தை கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. மீண்டும் இரும்பு சங்கிலியைப் பிய்த்தெறிந்து விட்டு அவன் பின்னே ஓடியது! அவனிடம் மண்டியிட்டு கெஞ்சியது.

அவனின் தோற்றத்தை விழி விரிய ஊடுருவி... இதயத்தில் இருத்திக் கொண்டாள்.

இருவருமே கோபத்தை விடுத்து... ஒருவரை ஒருவர் பார்வையால் ஸ்பரிசித்துக் கொண்டனர்.

'நந்தினி... நீ இல்லாமல் என்னால் இருக்கவே முடியாது!'

'நரேன்... உங்களைப் பிரிந்து என்னால் உயிர் வாழவே முடியாது!'

'நந்தினி... என் உயிரின் முகவரியே...!'

'நரேன்... என் உயிரில் கலந்த உறவே...!'

'நந்தினி... என் உயிரே உயிரே பிரியாதே...!'

'நரேன்... என் சுவாசமே... நீயின்றி நான் எப்படி வாழ்வேன்?'

'நந்தினி... நான் போகமாட்டேன் என்று சொல்லேன்...!'

'நரேன்... என்னைப் போகவேண்டாம் என்று மறியேன்...!'

'நந்தினி... குழந்தையை விட்டு பிரியமாட்டேன் என்று கூறேன்...!'

'நரேன்... குழந்தையோடு நீயும் வேண்டும் நந்தினி என்று என்னைத் தடுக்கக் கூடாதா?'



'நந்தினி... நந்தினி... என் கண்ணே...!'

'நரேன்... நரேன்... என் உயிரே...!'

இருவரின் புலம்பல்களும் குமுறல்களும் தொண்டைக் குழியிலேயே நின்று... வெளியே வர மறுத்தது.

'என்னைப் பிரிந்து போவியாடி? உனக்கு அவ்வளவு துணிச்சலாடி? நான் போறேன்னு எப்படிடி சொல்லலாம்? உன்னை இந்த வீட்டை விட்டுப் போக விட்டுடுவேனா? பேயே... பிசாசே... ராட்சசியே...' என்று கன்னம் பழுக்க இரண்டு அறை விட்டு... கொத்தாய் அவளின் நீண்ட தலைமுடியைப் பற்றி வலிக்க வலிக்க இழுத்து வந்து... அவளின் அறையில் தள்ளுவான் என்று எதிர்பார்த்தாள் நந்தினி.

'அவ்வளவு லேசிலே போயிடுவேனா? உன்னையும்... என் குழந்தையையும் விட்டு போயிடுவேனா? இது என் குழந்தை! நீ எனக்கு சொந்தமானவன்! நீ என் உயிரிலே கலந்தவன்! நீ என் உணர்விலே ஊடுருவி விட்டவன்! என்னைப் போகச் சொல்ல நீ யாருடா? உனக்கு என்ன திமிர்டா? உனக்கு என்ன தைரியம்டா? என் உள்ளம் கவர்ந்த ராட்சசனே...! என் இதயத்தை திருடிய அரக்கனே!' என்று கத்தி... கலாட்டா செய்து... சட்டையை கொத்தாய் பற்றி... தலைமுடியை பிய்த்து... அவனைக் கீழேத் தள்ளி... ஆத்திரம் அடங்கும் வரை நெஞ்சிலே குத்துவாள் என்று எதிர்பார்த்தான், நரேந்திரன்.

இருவரின் விழிகளும் பின்னி பிணைந்து சண்டையிட்டுக் கொண்டன.

இருவருமே... அவள் மனம் திறக்கட்டும் என்று அவனும்...

அவன் மௌனத்தை உடைக்கட்டும் என்று அவளும் ஒருவரை ஒருவர் எதிர்பார்த்தனர்.

இருவருக்கும் ஏமாற்றமே மிஞ்சியது!

நந்தினி பொங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... விம்மலோடும்... விசும்பலோடும் வெளியேறினாள்.

நரேந்திரன் பார்த்துக் கொண்டே நின்றான், இதயம் வலிக்க!

நந்தினியுள் இத்தனை நாளும் குடி கொண்டிருந்த மனவலிமை, மனதிடம், மன நம்பிக்கை அத்தனையும் உடைந்து சிதறியது!

மணி பனிரெண்டு!

நல்ல வெயில்! வேர்க்க விறுவிறுக்க ரோட்டில் வெறும் காலிலேயே நடந்தாள்.

'நான் எதற்காக உயிர் வாழ வேண்டும்?'

'நான் யாருக்காக உயிர் வாழ வேண்டும்?'

'நரேந்திரனுக்கு பயன்படாத இந்த உயிர் வேண்டாம்!'

'நரேந்திரனுக்கு உதவாத இந்த உடல் வேண்டாம்!'

'நான் சுவாசமாய் எண்ணிய என் நரேந்திரனும்... என் உயிரில் கலந்து உருவான என் குழந்தையும் இல்லாத உலகத்தில் இனி உயிர் வாழேன்!'

நந்தினி ஒரு முடிவுக்கு வந்தாள்.

தற்கொலை செய்து தன்னுயிரை மாய்த்துக் கொள்வதென்று!

நரேந்திரனைப் பற்றி கேள்விப்படாமலேயே இருந்திருக்கலாம்!

நரேந்திரனைக் காதலிக்காமலேயே இருந்திருக்கலாம்!



நரேந்திரனைக் கண்கொண்டு காணாமலேயே இருந்திருக்கலாம்!

எல்லாம் இந்த விதி செய்த சதி!

ஒரு மெடிக்கல் ஷாப் முன்பு நின்றாள்.

கௌதம் ஆஸ்பிட்டலிலே மெடிக்கலில் சில மருந்துகள் தீர்ந்து போனால்... இந்த மருந்து கடைக்குத்தான் போன் செய்வார்கள். அல்லது அவசர தேவையென்றால் நந்தினியே நேரே வந்து வாங்கி சென்றிருக்கிறாள்.

அவளை அந்த மெடிக்கல் ஷாப் ஓனருக்கு தெரியும்!

'தூக்க மாத்திரை ஸ்டாக் இல்லே! கௌதம் அண்ணா வாங்கிட்டு வரச் சொன்னார்' என்று பணத்தை நீட்ட.... அவனும் யதார்த்தமாய் ஆஸ்பத்திரிக்குத்தானே என்று கொடுத்தனுப்பினான்.

''என்னம்மா ரொம்ப நாளா ஆளையே காணும்? அடிக்கடி வாம்மா!'' என்று அந்த ஓனர் கூற...

''ம்...'' என்று கசப்பாய் புன்னகைத்தாள், நந்தினி.

அவள் தங்கியிருந்த அறைக்குச் சென்றாள்.

தன்னிடமிருந்த சாவியைக் கொண்டு திறந்து உள்ளேச் சென்றாள்.

மருத்துவமனையின் பின்புறம் நர்ஸுகளுக்கு கொடுக்கப்பட்ட அறை இருந்தது அவளுக்கு அது இப்போது சௌகரியமாய் போய் விட்டது யாரும் அவள் வந்ததை அறியவில்லை

நரேந்திரனின் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஒன்றை திருடிக் கொண்டு வந்திருந்தாள், நந்தினி.

அதை எடுத்து கைகளில் வைத்து பார்த்தவள்... பிழியப் பிழிய அழுதாள்.

குழந்தையை தன் மனக்கண் முன்பு கொண்டு வந்து அதை ஆசைத் தீரப் பார்த்தாள்.

நரேந்திரனின் போட்டோவை உதட்டருகே கொண்டு போய், அன்போடு... காதலோடு முத்தமிட்டாள்.

பாட்டிலைத் திறந்தாள்.

அத்தனை மாத்திரைகளையும் உள்ளங் கையில் கொட்டினாள்.

நீர் எடுத்து... மாத்திரைகளை வாயில் போட்டு விழுங்கப் போன சமயம்...

கதவு படாரெனத் திறந்தது! வந்தவன்...

நரேந்திரன் தான்!

அய்யனார் சிலையாய்... ஆக்ரோஷத்தோடு நின்றவனைக் கண்டு அவள் விதிர்விதிர்க்க...

அவள் கையில் இருந்த மாத்திரை... நடுக்கத்தில் சிந்திச் சிதறியது.

நந்தினியின் கன்னத்தில் மாறி மாறி அறைந்தான், நரேந்திரன். பின்...

''நந்தினி...'' என்று நேசத்தோடு அவளை இழுத்து இறுக்கிக் கொண்டான்.

''நரேன்... நரேன்...'' என்று புலம்பி அவளும் அவனை இறுக்கிக் கொள்ள...

இருவரின் செய்கையே... ஒவ்வொருவரின் மனதில் உள்ள காதலை எடுத்துக் காட்டியது.

''நந்தினிம்மா... ஐ லவ் யூடா...! நான் என்னை உணர்ந்துட்டேன்டா! நீ இல்லாமல் என்னால் வாழவே முடியாதுடா!''



நரேந்திரன் சொல்ல... பூந்தென்றல் தீண்டியக் கணக் காய் மேனி சிலிர்த்தாள்.

இந்த வார்த்தைகளுக்காகத்தானே தவமாய் தவமிருந் தாள்!

அவள் தவம் பலித்து விட்ட களிப்பில்... மேலும் அழுகை வெடித்து வந்தது.

''நரேன்... நரேன்...'' என்று விம்மியவாறே அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

''நந்தினி... நந்தினிம்மா... என் கண்ணே...'' அவள் முகம் பற்றி இதழ் தேடினான்.

நீண்ட நேரத்திற்கு பிறகு இயல்புக்கு வந்தனர்.

''நந்தினி... எனக்கு குழந்தையோட நீயும் வேணும்டா!'' என்று கண்கள் பளபளக்க கூறியவனை ஆசையோடு இழுத்து முத்தமிட்டாள்.

நந்தினி கேட்டாள்.

''என்னை உங்களுக்கு பிடிக்குமா?'' என்று ஆச்சரியத் தோடு வினவியவளிடம் புன்னகையோடு சொன்னான்.

''பிடிக்குமாவா? உன்னை எவ்வளவு பிடிக்கும்ன்னு கேளு? நீ கண்ணை விரிச்சி அடிக்கடி ஒரு பார்வை பார்ப்பே பார், அதுக்கு நான் அடிமை தெரியுமா? நீ செய்த தியாகம்... எனக்காக உண்ணாமல், உறங்காமல் காத்திருந்தது... பொசுக்கு பொசுக்குன்னு மயக்கத்திற்கும், பயத்திற்கும் என்னை கட்டியணைத்தது என எல்லாமுமா சேர்ந்து...''

அவள் இடைமறித்தாள்.

''நரேன்... நான் வேணும்ன்னு செய்யல தெரியுமா?'' உதடு சுழித்து சொன்னவளின் அழகை ரசித்தவன் சொன்னான்...

''என் உள்ளத்துக்கு தெரியும்! என் உடலுக்குத் தெரியுமா? எத்தனை ஆண்டுகளாய் காய்ந்து கிடக்கும் உடல்...''

''உங்களைக் கட்டிக்க ஏராளமான பொண்ணுங்க மேலே விழுந்து மயக்க வந்ததா... அத்தை சொல்லி கேட்டிருக்கேன். அவளுங்க மேல எல்லாம் ஆசை வரவில்லையா?''

''ச்சே... என்னடி பேசறே? அவளுங்க தீண்டிய போது எருமை தீண்டிய கணக்காய் அருவருக்கும்! தெரியுமா, முட்டாளே?''

அவன் செல்லமாய் கடிந்துக் கொள்ள...

நந்தினி பூவாய் மலர்ந்தாள்.

''உனக்கு என்மேல் எப்போதிருந்து ஈர்ப்பு?'' நரேந்திரன் அழகிய புருவம் நெரித்து கேட்க...

''அத்தை உங்களைப் பற்றிச் சொன்னபொழுதே... என்னுள் உங்கள் மேலான நேசம் உருவாயிடிச்சி! அந்த நேசம் தான் உங்களுக்கு ஏதாவது செய்யணும்ன்னு தூண்டிச்சி! அதன் விளைவுதான் நான் உங்களுக்கு வாரிசு பெற்றுத் தர முன்வந்தது!''

''நிஜம்தானா, அன்பே?'' என்று அவன் உருக...

''ம்...!'' என்று மான்விழி மருள தலையாட்டினாள்.

''உங்களுக்கு...?'' அவள் கேட்க...

''கொஞ்ச நாட்களாய் உன்னில் கிருத்திகாவைக் கண்டேன்! அன்று கல்யாண பட்டிலும், நகையிலும் உன்னைப் பார்க்க... என்னால் கட்டுப்படுத்தவே முடியவில்லை, கண்ணம்மா! மதுமதி வந்த அன்று பயத்தில்



அலறி... என்னிடம் தஞ்சம் புகுந்தாயே... மென்மையான பாதுகாப்பை நாடினாயே... அன்றுதான் என்னாலும் நீயில்லாமல் இருக்க முடியாது என்று உணர்ந்தேன். அன்று இரவு என்னருகே தெரிந்த உன் கதுப்பு கன்னம், உதடு, நெற்றி எல்லாமுமாய் சேர்ந்து எவ்வளவு இம்சித்து விட்டது தெரியுமா?''

''ஸாரி நரேன்!'' என்றவள்... அவனை அணைத்துக் கொண்டாள்.

''எதுக்கு ஸாரி? சரி... எனக்குத்தான் விருப்பத்தை வெளிப்படுத்த தயக்கம், வெட்கம், சுயகௌரவம், சுயமரியாதை எல்லாம்! ஆனால் உனக்கு என்ன வந்தது? ம்? உன் மனதை திறந்து காட்டலாம் அல்லவா?'' என்று நரேந்திரன் மிரட்டலோட கேட்க...

''உங்களுக்கு பிள்ளைப் பெற வாடகைத்தாயா வந்துட்டு... உங்க வாழ்க்கையில இடம் கேட்கலாமா என்று தயக்கம்? ஆண்களை வெறுத்து இருந்த என்னை உங்களின் நல்ல நடத்தையாலும்... நல்ல செயலாலும்... அன்பாலும்... உங்கள் வசீகரத்தாலும் கவர்ந்தீர்கள் என்று எப்படிச் சொல்வது? அடுத்ததாய் கிருத்திகாவின் நினைவில் வாழ்பவர்!...''

''கிருத்திகாதான் உன் வடிவில் எனக்கு உயிரோடு கிடைச்சாச்சே!'' என்று ஆனந்தமானான், நரேந்திரன்.

''நான் ஆண்...! எனக்கு தயக்கம்...! நீ வெளிப்படுத்தலாம் இல்ல?'' நரேந்திரன் அவளிடம் சண்டைக்குப் போக...

''நான் பெண்...! எனக்கு வெட்கம்...! எனக்கு அச்சம்...! எனக்கு நாணம்...! நீங்க வெளிப்படுத்தலாம் இல்ல?''

நந்தினி சண்டைக்கோழியாய் சிலிர்த்துக் கொண்டு அவனிடம் பாய...

"எனக்குத் தெரியும்! இந்த நரேந்திரன் பயல் எங்க நந்தினிகிட்ட தலைகுப்புற விழுவான்னு! இது தெரிஞ்சித் தான்... இந்த செயலுக்கு... நந்தினி கேட்க ஒத்துட்டேன்!" கௌதம் தான் அவர்களின் வாக்கு வாதத்தின் உள்ளே புகுந்தது.

கௌதம், தீபிகா, கிருபாகரன், அமிர்தம், அமிர்தத்தின் கையில் குழந்தை, ப்ரியா... என்று அவர்களின் உறவுக்கூட்டமே கூடி நிற்க... நந்தினி நாணினாள்!

"நரேந்திரா... மாற்றி மாற்றி குற்றம் சொல்வதை விட்டுட்டு... இவ கழுத்துல... இந்த ஸ்டாங்கான மஞ்சள் கயிற்றை கட்டுடா! அப்போதான் எங்ககிட்ட கூட சொல்லாமல் கொள்ளாமல் எல்லாம் இங்கே புறப்பட்டு வரமாட்டாள்!"

அமிர்தம் மஞ்சள் கயிற்றை நீட்ட...

நரேந்திரன் வாங்கி... அவளின் சங்குக் கழுத்தில் மங்கல நாணைக் கட்டினான்.

நந்தினி தென்றல் தீண்டிய கணக்காய் சிலிர்த்துப் போனாள்.

நந்தினி குழந்தையை வாங்கி, சந்தோசமாய்... ஆசை யாசையாய் முத்தமிட்டு... அன்போடு அணைத்துக் கொள்ள...

அவளின் அழகு கணவன்... அதை நேசம் பொங்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.